கலை இலக்கிய மாத சஞ்சிகை


100/=


# ஜீவநதி

ஆடி 2015

82


பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்





இருயுக மாற்றங்களை நிறுவும் ஜெயகாந்தனின் யுகசந்தி ஒரு விமர்சன அணுகல்

ஏ.எச்.எம்.நவாஸ்



நேர்காணல்

கா.தவபாலன்



வே.ஐ.வரதராஜன் – அஞ்சலி

வெற்றி.துஷ்யந்தன்

# ஜீவநதி

## கட்டுரைகள்

**இருயுக மாற்றங்களை நிறுவும் ஜெயகாந்தனின் யுகசந்தி - ஒரு விமர்சன நோக்கு**
ஏ.எச்.எம்.நவாஸ் .............................................. 03

**தெணியானின் "மரக்கொக்கு" நாவலின் சிங்கள மொழிபெயர்ப்பு "குலப்பெண்கள்" (குல அங்கனாவோ) (வடக்கின் கிராமப்பிறழ்வு) ஓர்அறிமுகம்**
வே.சிவராஜலிங்கம் .......................................... 20

**குப்பிழான் ஐ. சண்முகனின் கோடுகளும் கோலங்களும்**
அருண் மொழி வர்மன்.......................................... 21

**கிட்கிந்தா காண்டத்தில் தவளை**
இ.சு.முரளிதரன்............................................... 29

**நினைவுக் குறிப்புகள் - 11**
அ.யேசுராசா .................................................... 30

**மனிதநேயம்மிக்க படைப்பாளி**
வெற்றி. துஷ்யந்தன்.......................................... 34

## சிறுகதைகள்

க.சட்டநாதன் ................................................... 14
க.பரணீதரன்...................................................... 35

## நேர்காணல்

கா.தபபாலன்...................................................... 26

## குறுங்கதை

கண.மகேஸ்வரன் ............................................ 45
பாலமுனை பாறூக் ............................................ 45

## கவிதைகள்


மன்னார் அமுதன்............................................. 13
மனால்.......................................................... 24
நந்தா.......................................................... 24
இயலன்......................................................... 25
நா.ஜெயபாலன்................................................. 25
வி.எழில்நிலா .................................................. 41
ஸ்ரீ. ஜஸ்மியா .................................................. 46

## நூல் மதிப்பீடு

கொ.பாபு........................................................ 42
வெற்றி.துஷ்யந்தன்.......................................... 47


## எதிர்வினை

த.ஜெயசீலன்.................................................... 38




எதிர்வினை: நினைவுக்குறிப்பு – 9ன் ஒரு "பகுதி"க்கானது

- த.ஜெயசீலன் -



நேர்காணல்

- கா. தவபாலன் -



அட்டை ஓவியம்

நன்றி இணையம்

# ஜீவநதி

**2015 ஆடி இதழ் – 82**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY

இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.

**ஜீவநதி சந்தா விபரம்**

தனிப்பிரதி – 100/= ஆண்டுச்சந்தா – 1500/=
வெளிநாடு – $ 60U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY

## ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
– பாரதிதாசன்–

## கவிஞர் வே.ஐ.வரதராஜன் அமரரானார்!

ஜீவநதிக் குடும்பத்தின் உறுப்பினரும் ஜீவநதியின் விசுவாசியுமான கவிஞர் வே.ஐ. வரதராஜன் அவர்கள் அண்மையில் காலமானார் என்ற துயரச் செய்தியை ஜீவநதி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம். அண்மைக்காலமாக சிறிது உடல்நலமற்று இருந்த அவர் திடீர் என அமரத்துவமடைந்தமை எமக்கு அதிர்ச்சி தரும் செய்தியாகும்.

அமரர் வரதராஜன் அவர்கள் நீண்டகாலமாக ஒரு சிறந்த வாசகர். தேர்ந்த நூல்களைப் படித்து அவற்றின் சிறப்புக்குறித்து தமது நண்பர்களுக்கும் தாம் பழகும் இலக்கியகாரர்களுக்கும் தெரிவித்து வந்தவர். இதனால், இலக்கியகாரர்களிடம் எப்போதும் இவருக்கு மதிப்பு இருந்து வந்துள்ளது. ஈழத்திலிருந்தும் தமிழகத்திலிருந்தும் வெளிவந்து நல்ல நூல்கள் பலவற்றை தன் சொந்தப்பணத்தில் விலைக்கு வாங்கி களஞ்சியப்படுத்தி வந்ததோடு மட்டுமல்லாமல் ஏனையோர்க்கும் அவற்றை படிக்க கொடுத்து வந்துள்ளார்.

ஜீவநதியின் வருகையில் எப்போதும் மகிழ்ச்சி கொள்ளும் அவரை எழுதத் தூண்டியதில் ஜீவநதிக்குப் பெரும்பங்குண்டு. அவர் தொடர்ந்து ஜீவநதிக்கும் இடையிடையே ஏனைய சஞ்சிகைகளுக்கும் கவிதைகளையும், விமர்சனக்கட்டுரை களையும் எழுதி வந்தார். 2012 ம் ஆண்டு “என் கடன்” என்ற அவரது முதலாவது கவிதைத்தொகுதி ஜீவநதி வெளியீடாக வெளிவந்தது. விரைவாக தனது அடுத்து தொகுப்பும் ஜீவநதி வெளியீடாக வெளிவரவேண்டும் எனவும் அதற்கான ஆரம்ப வேலைகளை மேற்கொள்ளும் படியும் இறுதி சந்திப்பில் என்னிடம் கூறியிருந்தார். ஒரு நல்ல மனிதரை நல்ல இலக்கிய இரசிகரை நல்ல விசுவாசியை இழந்தநிலையில் ஜீவநதி துயரத்தில் ஆழ்ந்துள்ளது. அன்னாரது ஆத்மா சாந்தியடைய ஜீவநதி சார்பாக பிரார்த்திப்போம்.

– க.பரணீதரன்

**ஜீவநதியின் பிரதி கிடைக்கும் இடங்கள்**


யாழ்- பூபாலசிங்கம் புத்தகசாலை, புக்லப் - திருநெல்வேலி,
கொழும்பு வெள்ளவத்தை - பூபாலசிங்கம் புத்தகசாலை,
சீ ஸ்ரீட் - பூபாலசிங்கம் புத்தகக்கடை,
பரணி புத்தகக் கூடம் - நெல்லியடி

ஏ.எச்.எம்.நவாஷ்






# இருயுக மாற்றங்களை நிறுவும்
# ஜெயகாந்தனின் யுகசந்தி
## ஒரு விமர்சன அணுகல்




1. ஜெயகாந்தனுக்கான விமர்சனம்

ஒரு ஜென் கதை உண்டு. ஒரு குருவிடம் ஒரு சீடன் ஞானம் கற்பதற்காக போகிறான். பல மாதங்கள் ஆகியும் குரு எதுவுமே சொல்லித் தரவில்லை. காத்திருந்து பொறுமை இழந்த சீடன் ஒருநாள் நேரடியாகவே கேட்டு விடுகிறான். "ஏன் எனக்கு ஞானம் அறிவிக்காமல் ஏமாற்றுகிறீர்கள்?" குரு அவனை வெளியே நடக்க அழைத்துப் போகிறார். அவர்கள் நடந்து நடந்து ஒரு வெட்டவெளியை அடைகிறார்கள். குரு அவனை சுற்றிப் பார்க்க சொல்கிறார். அவன் பார்க்கிறான். பிறகு அவர் சொல்கிறார் "நான் உனக்கு எதையும் மறைக்கவில்லையே. எல்லாமே திறந்து தானே இருக்கிறது. பிறகு நான் உனக்கு எதைக் காட்ட?" இந்த குருவிடம் கம்பீரம் உள்ளது. உண்மையான கம்பீரம் அமைதியில் இருக்கிறது. ஆர்ப்பாட்டத்தில் இல்லை.

தனக்கு ராஜராஜன் விருது அறிவிக்கப்பட்ட போது "இந்த திராவிடப் பயல்களுக்கு இப்போதுதான் கண் தெரிந்ததா?" என ஜெயகாந்தன் கத்தியதில் கம்பீரம் இல்லை. விருதையும் அங்கீகாரத்தையும் அவ்வளவு முக்கியமாய் நினைப்பதால் தான் அவ்வளவு கோபம் வருகிறது. கோபம் இருக்க வேண்டும். ஆனால் அது நம் பகுதியாக அல்லாமல் நம் வழி பாய்ந்து மறைகிற ஒன்றாக இருக்க வேண்டும். நாம் ஜெயகாந்தனாக நினைத்து வழிபடுவதும் வியப்பதும் விவாதிப்பதும் அவர் கவனமாய் புகைப்படங்கள், மேடைப்பேச்சுகள், அறிக்கைகள், கருத்துக்கள், எழுத்து நடை மூலம் கட்டமைத்த ஒரு பிம்பத்தை தான் என்பதை நாம் மறந்து விட முடியாது. தன் மீசை, தலை அலங்காரம் ஆகியவற்றை அவர் இறுதி வரை ஒரே மாதிரி தக்க வைத்ததை பாருங்கள். எம்.ஜி.ஆர், கலைஞர், மைக்கேல் ஜாக்ஸன், ஹரிஹரன், இளையராஜா போன்று பொது ஊடக பிம்பங்களை கட்டமைத்தவர்கள் எல்லாரும் இதை செய்திருக்கிறார்கள். வைரமுத்து ஒரு கூட்டம் முடித்து இன்னொரு கூட்டத்துக்கு போகும் முன் காரில் தன் ஆடையை மாற்றுவார் என ஒரு நண்பர் கூறினார். தனது முறுக்கின மீசை, ஜுப்பா, வெள்ளை செருப்பு, மிடுக்கு நடை உருவாக்கும் பாவனை தனது எழுத்து நடை அளவுக்கு வாசகனிடத்து ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என வைரமுத்து உணர்ந்திருக்கிறார். ஜெயகாந்தன் அவருக்கு முன்னரே இதை அறிந்து ஒரு வாழ்க்கைக் கலையாகவே ஆக்கினார்.

ஜெயகாந்தனிடம் போராட்ட குணமுள்ள கலகக்கார பிராமணப் பையன்களும் பெண்களும், செயற்கையான மொழியில் பேசும் சேரி நபர்களும் ஒருவித கனவுப் பாத்திரங்கள். ஜெயகாந்தனின் லட்சியவாதம் கூட இந்த பூமியில்



கால்படாத ஒன்று தான். அவரை நமது தீவிர இலக்கிய வாதிகளுடன் ஒப்பிடவே முடியாது. ஏனென்றால் அவர்கள் அவரைப் போல் ரொமாண்டிக்கான லட்சிய வாதிகள் அல்ல. அதாவது இந்தியாவில் இயல்பாக விளைந்த கலக மனநிலை இங்குள்ள சம்பிரதாய வாழ்வுடன் எதிர்கொள்ளும் போராட்டத்தை ஜெயகாந்தன் பேசவில்லை. மாறாக இங்கு எங்குமே இல்லாத, அவராகவே கற்பனை பண்ணின ஒரு கலக மனப்பான்மையை இங்கு உள்ள ஒரு இறுக்கமான பண்பாட்டுச் சூழலில் வைத்து அப்போது ஏற்படும் கற்பனையான விளைவுகளைப் பற்றி பேசினார் "அக்னி பிரவேசத்தில்" வருவது போல் இவ்வளவு நாடகத் தனமாய் எந்த தாயும் இம்மண்ணில் நடந்து கொள்ள மாட்டாள். அப்படி ஒரு பிரச்சினை நம் குடும்பங்களில் வந்தால் காதும் காதும் வைத்தது போல் எதுவும் நடந்தும் நடக்காதது போல் இங்கு மறைக்கப்படும். ஜெயகாந்தன் காட்டுவது ஒரு ஐரோப்பிய மனம் கொண்ட ஒரு பிராமணத் தாயை. ஜெயகாந்தன் பல்லாயிரம் வாசகர்களைக் கவர்ந்த தற்கு தாம் பார்க்க விரும்பும் ஒரு கனவுலகை, கொஞ்சம் எதார்த்தம், வியர்வை கசகசப்பு பாதிக்கப்பட்ட மக்கள், கலக உணர்வு, இந்திய ஆன்மீகம், பற்றற்ற சித்தர் என கலந்து அவர் தந்தது தான். இதையே தான் கலகம் இன்றி பால குமாரனும் செய்தார். எப்போதுமே வெகுமக்கள் எழுத்தில் இந்த கனவில் மிதக்கும் போதை இருக்கும். அது இயல்பே. மக்கள் ஆசைப்பட்டு செய்ய முடியாததை சித்திரித்து அவர்களின் ஏக்கத்தை தணிப்பதே வெகுஜன கலைஞனின் பணி.

ஜெயகாந்தன் பற்றிய இப்படியான ஒரு மாற்றுக் கருத்தினை அண்மையில் இன்மை இணையத்தில் (அபிலாஷ்.ஆர்; இன்மை.காம்) படிக்கநேர்ந்தது. இன்னுமொரு விமர்சனத்தை "ஜெயகாந்தனை நான் வெறுக்கிறேன்" என்ற மகுடத்தில் மணி செந்தில் இணையத்தில் பின்வருமாறு எழுதியுள்ளார்.

இறந்து விட்டார் என்பதற்காக அவரை ஆஹா–ஓஹோ என புகழ்ந்து பதிவிடும் போக்கு இணையத்தளம் வந்த பிறகு அதிகமாகி விட்டது என நான் கருதுகிறேன். ஜெயகாந்தன் ஒரு வேளை மீண்டும் பிழைத்தாரென்றால், "நான் செத்தால் இப்படியெல்லாம் எழுதுவீர்கள் என்றால் நான் சாகவே மாட்டேன்" என சொல்லி விடுவார் போல. வெறுப்பின் குணாதிசயங்களோடு, கறாராய் வாழ்ந்த அம்மனிதனுக்கு திகட்ட திகட்ட இரங்கல் உரைகள்.

நான் ஜெயகாந்தன் தமிழ்ச்சிறுகதை உலகினை ஆட்சி செய்த போது வாசிக்க தொடங்கவில்லை. என் அம்மா பைண்டிங் செய்யப்பட்ட ஜெயகாந்தன் நாவல்களை அடிக்கடி வாசித்துக் கொண்டிருப்பதை கண்ட போதுதான் அக்காலத்திய பெண்களின் புரட்சிக்காரனாய் அவர் திகழ்ந்திருந்ததை என்னால் புரிந்துக் கொள்ள முடிந்தது. அவரது அக்கினி பிரவேசம் சிறுகதையை என் அம்மா சிலாகித்து பேசும் போது எனக்கென்னவோ அதில் கொண்டாட ஏதுமில்லை என்றுதான் தோணிற்று. அதன் பின்னால் அவரை நான் வாசித்த போது புதுமைப்பித்தன், திஜா, எம்.வி.வி, கரிச்சான்குஞ்சு, தஞ்சை ப்ரகாஷ் போன்ற என் அபிமான அக்காலத்து எழுத்தாளர்கள் அளவிற்கு ஜெயகாந்தன் என்னை ஈர்க்கவில்லை. மேலும் தமிழ்மொழி குறித்தும், காஞ்சி மடம் குறித்தும், பெரியார் குறித்தும் அவர் கொண்டிருந்த கருத்துக்கள், செயல்பாடுகள் ஆகியவை எனக்கு எதிரானவையாக இருந்தன. ஜெயகாந்தன் எழுத்துக்களில் புலப்படும் அதிகப்படியான உரையாடல்கள் அக்காலத்திற்கு உகந்தவையாக, புதுமையாக இருந்தாலும், எனக்கு சற்று மிகையாக தான் தெரிந்தன. ஜெயகாந்தனின் கதாபாத்திரங்கள் அவரைப்போலவே நெகிழ்வற்ற பாத்திரங்களாக விளங்கின. மரபுகள் மீதான கலகமாய் ஜெயகாந்தனை நாம் கொண்டாட முடியாது. ஏனெனில் அவருடைய வெளிப் படையான பார்ப்பன, இந்துத்துவ ஆதரவு அதற்கு எதிராக இருக்கிறது. சினிமா உலகிற்கு ரஜினிகாந்த் போல இலக்கிய உலகிற்கு ஜெயகாந்தன் திகழ்ந்திருக்கிறார் போல. என்ன செய்வது, எனக்கு நடிப்பில் கார்த்திக் (முத்துராமன்) தான் பிடிக்கும்.

இப்போது நானும் இணையத்தளங்களில் கொட்டிக் கிடக்கும் ஜெயகாந்தன் பற்றிய வாழ்க்கை விவரணைக் குறிப்புகளில் இருந்தும், அவரது பல கட்டுரைகளில் இருந்தும் ஜெயகாந்தன் பற்றிய ஒரு புகழ் கட்டுரையை தேற்றி விடலாம் தான். ஆனால் அது ஜெயகாந்தன் உருவாக்க முனைந்த பிம்பத்திற்கு எதிரானது. உன்னை பிடிக்காது என்பதை ஜெய காந்தனிடம் நேரடியாக சொல்வதே, வெளிப் படையாக வாழ்ந்த அந்த எழுத்தாளனுக்கு நான் செலுத்துகிற உண்மை யான அஞ்சலி. அதைத் தான் அவரும் விரும்பு வார். மற்றபடி ஜெய காந்தனை நான் வெறுக் கிறேன். நான் வெறுக்க, நிராகரிக்க ஜெயகாந்தன் இருந்தார். இப்போது இல்லை. அந்த காரணங் களுக்காக வருந்துகிறேன்.




பூமணி

"நீங்கள் எழுதத் துவங்கிய காலத்தில், ஜெயகாந்தன் உச்சத்தில் இருந்தார். அவரது எழுத்துக்கள் உங்களை பாதிக்கவில்லையா?" என எழுத்தாளர் பூமணியிடம் தொடுக்கப்பட்ட கேள்விக்கு அவர் பின்வருமாறு பதில் சொல்லியிருக்கிறார்.


"நான் அவரது நாவல், சிறுகதைகள், எல்லாவற்றையும் படித்து இருக்கிறேன். அவரது ஒரு சில நாவல்களை தவிர, வேறு எதுவும் என்னை கவரவில்லை. அவர் எழுத்து வெறும், தர்க்க உரையாடலாகவே (லாஜிக்கல் கான்வர்சேஷன்) உள்ளது. ஒரு நுட்பமான படைப்பாளியாக என்னை அவர் கவர வில்லை. புதுமைப்பித்தன், கு.பா.ரா., மவுனி, சுந்தரராமசாமி படைப்புகளைப் போல, அகவெளியை திறந்து விடும் எழுத்தை ஜெயகாந்தன் எழுதவில்லை."

"எனது வளர்ச்சியின் முக்கியமான ஆரம்பக் கட்டத்தில் நான் விரும்பி வாசித்த ஒரு படைப்பாளி (ஜெய காந்தன்), பின்னர் என்னால் வாசிக்க முடியாதவராகப் போனது எவ்வாறு? சிலர் ஜெயகாந்தனின் கருத்துநிலை மாற்றம், வீழ்ச்சி, முரண்பாடு என்றெல்லாம் பேசுகிறார்கள். என்னைப் பொறுத்தவரை அது முக்கியமானதல்ல. என்னோடு கருத்துநிலை உறவு கொண்டிராத பல எழுத்தாளர்களை நான் விரும்பிப் படிக்கிறேன். என்னைப் பொறுத்தவரை படைப்பி லக்கியத்தில் ஆய்வறிவுத் தன்மையைவிட அனுபவத்தை நான் முதன்மைப்படுத்துகிறேன். ஒரு படைப்பு எந்த அளவு எனக்கு அனுபவ அதிர்வுகளைத் தருகின்றதோ அந்த அளவு நான் அதற்குள் நெருங்கிப் போகின்றேன். காலப்போக்கில் எனது வளர்ச்சி, எனது இலக்கிய அனுபவம், இலக்கிய முதிர்ச்சி என்பவற்றைப் பொறுத்து இது வேறுபடும். கல்கியை, அகிலனை, நா.பாவை, மு.வவை வாசித்து மகிழ்ந்த காலம் இனி வராது. அது ஒரு வளர்ச்சிக் கட்டம். ஜெயகாந்தன் பிறிதொரு கட்டம். கருத்துநிலைதான் இவரை



மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்தும் முக்கியமான பிரிகோடு என்று தோன்றுகின்றது. அந்தக் கருத்துநிலைப் புதுமை மங்கும்போது அவரும் மங்கிவிடுகிறார்" என பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் எழுதுகின்றார் (காலச்சுவடு; ஜூன் 2015).

ஜெயகாந்தன் படைப்புகள் உரத்த குரல் கொண்டவை, வாதாடக் கூடியவை, பிரச்சார நெடி அடிப்பவை, நேரடியாக அப்பட்டமாக தன் உள்ளுறைகளை விரித்துப்போடும் தன்மை கொண்டவை, ஆகவே கலைத்தன்மை குன்றியவை என்பது நம் சூழலில் பொதுவாக உள்ள கருத்து. இக்கருத்தை உருவாக்கியவர் க.நா.சுப்ர மணியம். மிக வலுவாக பரப்பியவர் சுந்தர ராமசாமி. இருவருமே ஜெயகாந்தனை விரிவான ஆய்வுக்கு உள்ளாக்க வில்லை என்று யோசிக்கும்போது துணுக்குறல் ஏற்படுகிறது . நம் சூழலை தீவிரமாகப் பாதித்த ஒரு படைப்பாளி ஆராயப் படாமலேயே விமர்சிக் கப்பட்டு ஒதுக்கப்பட்டு விட்டிருக்கிறார். பிற சூழலில் இதுபோன்ற ஒரு நிகழ்ச்சி நடக்குமா என்று தெரியவில்லை என்று ஜெயமோகன் கூறுகின்றார்.



மனுஷ்ய புத்திரன்

ஜெயகாந்தன் விமர்சனங்களுக்கு அஞ்சாமல் இயங்கினார் என்பதை அசோகமித்திரன் மிக அற்புதமாக சொல்லி யிருக்கின்றார். "அவர் மனம் வருந்த வேண்டும் என்று சில கோஷ்டிகள் முயன்ற வண்ணமே இருந்தன. ஜெயகாந்தன் என்ற சிங்கம் அவற்றைக் கொசு விரட்டுவதுபோல உடலை ஒரு முறை சிலிர்த்துவிட்டுக் கொண்டது."

"தமிழ்க் கதையை தமிழ் வாழ்வின் இருண்ட நிலப்பரப்புகளை நோக்கிச் செலுத்திய ஒரு பெரிய இயக்கம் ஜெயகாந்தன். பிச்சைக்காரர்களும் வேசிகளும் பொறுக்கி களும் குரூரமாக நசுக்கப்பட்டவர்களும் பிறழ்வு கொண்டவர் களும் ஜெயகாந்தனின் வழியே தமிழ் எழுத்துப் பரப்பிற்கு வந்து சேர்ந்தார்கள். நகர்ப்புற, அக்ரஹார எதார்த்தத்திலிருந்து தமிழ் வாழ்க்கையின் பிரமாண்டத்தை நோக்கிய முதல் திறப்பு அவர். பாரதிக்குப்பின் தமிழ் எழுத்தாளன் குறித்த ஒரு கம்பீரமான படிமத்தை ஜெயகாந்தன் வழங்கினார். அவரைப்பற்றிய கடும் விமர்சனங்களை இன்று ஒருவர் எழுப்பலாம். ஆனால் அவர் ஒரு தலைமுறையின் பெரும் சக்தி" என்று "உயிர்மை" ஆசிரியர் மனுஷ்ய புத்திரன் சான்றிதழ் வழங்குகின்றார்.

ஜெயகாந்தன் முன்வைத்த கருத்துகளும் அவரது படைப்புகளும் அவ்வப்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன. இதன்காரணமாக அவர்மீது கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. ஜெயகாந்தன் யாருக்கும் அஞ்சாமல் தன் மனத்தில் பட்டதை கூறும் இயல்புடைய படைப்பாளி என்றும் சொல்லப்படுவதுண்டு. "காலச்சுவடு" ஆசிரியர் கண்ணன் உண்மை நிகழ்வொன்றுடன் தொடர்புபடுத்தி ஜெயகாந்தன் என்ற பிம்பத்தின் உண்மை பக்கத்தை பிரக்ஞை பூர்வமாய் நிறுவிக்காட்டியுள்ளார். அந்த நிறுவல் பின்வருமாறு உள்ளது.

"2006ஆம் ஆண்டு கோவையில் நானும் (கண்ணன்) இணைந்து ஒழுங்குசெய்த, ஜெயகாந்தன் கலந்துகொண்ட, ஒரு சந்திப்பின் கேள்வி நேரம். ஒருவர் எழுந்து, "புதுவையில் 1988ஆம் வருடம் நீங்கள் பேசுகையில் "கம்பன் ஒரு முட்டாள்" என்று சொன்னீர்கள். இப்போதும் அதே கருத்துதானா?" என்று கேட்டார். அரங்கம் அமைதியானது. ஒலிவாங்கியை ஜெயகாந்தனிடம் நீட்டினேன். "அப்படி சொல்லிவிட்டேனா? சொல்லியிருந்தால் தப்புதான். (அரங்கில் கைதட்டல், சிரிப்பலைகள்) ஆனால் அப்படிச் சொல்லியிருந்தாலும் அது ஒரு கருத்துதான். அதை நீங்கள் ஏற்க வேண்டும் என்பதில்லை. தாராளமாக மறுக்கலாம்" என்றார் ஜெயகாந்தன்.

"எதையும் சொல்லும் உரிமை எனக்குண்டு. அதையும் மறுக்கும் உரிமை உனக்குண்டு" என்ற விவேகமே அன்று வெளிப்பட்டது. இதை நாம் உளமாற ஏற்றால் எந்த அடிப்படைவாதமும் தமிழ்ச் சமூகத்தை அண்டாது.


தமிழின் கேட்க விரும்பாத அனைத்துக் கருத்து களையும் உரக்கச் சொல்லி தமிழ்ப் பண்பாட்டின் மையத்தில் நிலைபெற்றதே ஜெயகாந்தனின் தனிச் சிறப்பு" (காலச்சுவடு; மே 2015).

**அப்படியாயின், ஜெயகாந்தன் பற்றிய விமர்சனம் எப்படி அமைதல் வேண்டும்?**

**2. வாழ்வும் படைப்பும்**

"தமிழ்நாட்டில் இன்றுவரை தோன்றியுள்ள மிகச் சிறந்த எழுத்தாளர்கள் சிலருள் ஜெயகாந்தன் ஒருவர்" என்று கு.அழகிரிசாமி குறிப்பிட்டுள்ளார். தமிழ் இலக்கிய உலகில் ஜே.கே என்று அழைக்கப்பட்ட எழுத்தாளர் ஜெயகாந்தன் (1934 – 2015) தமிழ் இலக்கிய வரலாற்றில் மிக வலிமையான ஆளுமை. ஜெயகாந்தன் ஒரு வேளாண் குடும்பத்தில் தென்னார்க்காடு மாவட்டம் கடலூர்–மஞ்சக்குப்பத்தில் 1934ம் வருடம், சித்திரைத் திங்கள் 12ம் நாள், செவ்வாய்க் கிழமையில் பிறந்தார் . ஜெயகாந்தனின் தந்தையார் பெயர் தண்டபாணிப் பிள்ளை, தாயார் மகாலெட்சுமி அம்மாள். பள்ளிப்படிப்பில் நாட்டம் இல்லாமையால், ஐந்தாம் வகுப்பிலேயே பள்ளி வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைத்தார். உலகியல் அனுபவம் பெறவேண்டி, வீட்டை விட்டு வெளியேறி விழுப்புரம் சென்றார். அங்கு, அவர் மாமாவின் மேற்பார்வையில் வளர்ந்தார். அவர் ஜெயகாந்தனைப் பொதுவுடைமைக் கோட்பாடுகளுக்கும் பாரதியின் எழுத்துக்களுக்கும் அறிமுகப்படுத்தினார்.

ஜெயகாந்தன் சில ஆண்டுகள் விழுப்புரத்தில் வாழ்ந்த பின் சென்னைக்குக் குடிபெயர்ந்தார். அங்கு பெரும்பா லான நேரத்தை சி.பி.ஐ (C. P. I) இன் ஜனசக்தி அலுவலக அச்சகத்தில் பணிபுரிந்தும், ஜனசக்தி இதழ்கள் விற்றும் கழித்தார். 1949–ஆம் ஆண்டு சி. பி. ஐ மீதும் அதன் உறுப் பினர்கள் மீதும் தடை போடப்பட்டது. ஆதலால் சில திங்கள்கள், தஞ்சையில் காலணிகள் விற்கும் கடை ஒன்றில் பணிபுரிந்தார். இந்த எதிர்பாராத இடைவேளை அவர் வாழ்க்கையில் முதன்மையான காலகட்டமாக அமைந்தது. அவர் சிந்திக்கவும் எழுதவும் அப்பொழுது நேரம் கிடைத்தது. இக்கால கட்டத்தில், தமிழ்நாட்டில் முக்கிய அரசியல் மாற்றங் களும் நேர்ந்தன. தி.மு.க மற்றும் தி.க – வின் வளர்ச்சியால், சி.பி.ஐ மெதுவாக மறையத் துவங்கியது. உட்கட்சிப் பூசல் களினாலும், கட்சியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளி னாலும், ஜெயகாந்தன் சி.பி.ஐ–யிலிருந்து விலகினார். பின்னர் காமராசருடைய தீவிரத் தொண்டனாக மாறி, தமிழகக் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். அவரது இலக்கிய வாழ்க்கை 1950களில் தொடங்கியது – சரஸ்வதி, தாமரை, கிராம ஊழியன், ஆனந்த விகடன் போன்ற ஏடுகளில் இவரது படைப்புகள் வெளியாயின. படைப்புகளுக்குப் புகழும் அங்கீகார மும்



கிடைத்தன. இருபதாம் நூற்றாண்டின் தலை சிறந்த தமிழ் எழுத்தாளர்களில் ஒருவராகப் போற்றப் பெற்றார். ஜெயகாந்தன் சில ஆண்டுகள், தமிழ்த் திரையுலகிலும் வலம் வந்தார். இவரது நாவல்களான "உன்னைப் போல் ஒருவன்" மற்றும் "சில நேரங்களில் சில மனிதர்கள்" ஆகியவை படமாக்கப்பட்டன. இதில் "உன்னைப் போல் ஒருவன்" சிறந்த மாநில மொழித் திரைப்படத்திற்கான குடியரசுத் தலைவர் விருதில் மூன்றாம் விருதைப் பெற்றது. மேலும், அவருக்கும் ஒரு நடிகைக்கும் ஏற்பட்ட உறவே "ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்" என்ற நாவலாக படைப்பாகியது. கடலூரில் வேளாண் குடும்பத்தில் பிறந்து ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே படித்த இவர், இலக்கியத்துக்கான மிக உயர்ந்த விருதான ஞானபீட பரிசு பெற்றதோடு, சாகித்ய அகாடமி, பத்ம பூஷன் ஆகிய விருதுகளையும் பெற்றுள்ளார்.

ஜெயகாந்தன் தான் செய்த வேலைகளைப்பற்றி பின்வருமாறு சொல்லுகின்றார்:

"நான் பிழைப்புக்காக என்னென்ன செய்திருக் கிறேன் என்றொரு நினைவுப் பட்டியல் போட்டால்... மளிகைக் கடைப் பையன், ஒரு டாக்டரின் பை தூக்கும் உத்தி யோகம், மாவு மெஷின் வேலை, கம்பாசிடர், டிரெடில்மேன், மதுரை சென்ரல் சினிமாவில் வேலைக்காரி சினிமா பாட்டுப் புத்தகம் விற்றது, கம்யூனிஸ்ட் கட்சி ஆபீஸில் இருந்து பத்திரிகைகள், புத்தகங்கள் விற்றது, ஃபவுண்ட்ரியில் எஞ்சினுக்கு கரி கொட்டுவது, சோப்பு ஃபாக்டரியில், இங்க் ஃபாக்டரியில் கைவண்டி இழுத்தது....ஃப்ரூஃப் ரீடர், பத்திரிக்கை உதவி ஆசிரியர்..."

"எழுத்துத் துறைக்கு நீங்கள் எப்படி வந்தீர்கள்?" என்று 1964ஆம் ஆண்டில் "ஆனந்த விகடன்" கேட்ட கேள்விக்கு



ஜெயகாந்தன் சொன்ன பதில்,

"நான் வரவில்லை, எங்கோ போய்க் கொண்டிருந்த வழியில், எழுத்தாளனாய் வரவேற்கப்பட்டேன். நான் கதைகள் எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்பியதில்லை. என்னைப் பத்திரிகைகள் ஆதரிக்கவில்லை என்று புலம்பியது மில்லை. நான் கல்லூரியிலோ, உயர்நிலைப் பள்ளியிலோ படித்தவனல்ல, அங்கே எழுத்தையோ இலக்கியத்தையோ கற்பதற்கு! நான் நடைபாதையில், குழாயடியில், சில நாட்கள் வேலைக்குப் போன சிறிய தொழிற்சாலைகளில் பொதுவான நடைமுறை வாழ்க்கையில்தான் இலக்கியத்தைக் கற்றேன். பிறகு, அங்கேதான் எழுத்தும் இலக்கியங்களும் பிறக்கின்றன என்று அறிந்தேன். அறிந்ததை - வாழ்க்கை எனக்கு அறிவித்ததை - திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். வந்தவன்தான் போவான். நான் வந்தவனும் இல்லை; போகிறவனும் இல்லை!"


ஜெயகாந்தன் சிறுகதை, குறுநாவல், நாவல் என்ற இலக்கிய வடிவங்களைப் படைத்ததுடன் நின்றுவிடாமல், சுவை ததும்பும் கட்டுரைகளையும், ஆழமான அறிவுபூர்வமான கட்டுரைகளையும் படைத்துள்ளார். அவற்றில் சுயதரிசன, சுய விமர்சனக் கட்டுரைகளும் உண்டு. மேலும் அரசியல், சமூகம், கலை இலக்கியம் மற்றும் பத்திரிகை அனுபவம் என்று கட்டுரை களின் பொருள் விரிந்து பரந்ததாக அமைந்துள்ளது. ஜெய காந்தன் சில ஓரங்க நாடகங்களையும் எழுதியுள்ளார். திரைப் படக் கதாசிரியராகவும், பாடலாசிரியராகவும், வசன கர்த்தா வாகவும், இயக்குநராகவும், தயாரிப்பாளராகவும் சிறந்துள்ளார்.

ஜெயகாந்தன் சிறந்த மொழி பெயர்ப்புப் பணிகளை யும் செய்துள்ளார். ராமன் ரோலண்ட் எழுதிய நூலை மகாத்மா என்ற பெயரிலும், புஷ்கின் எழுதிய நூலைக் கேப்டன் மகள் என்ற பெயரிலும் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளார். அவருடைய சிறுகதைகள் மற்றும் நாவல்கள் அனைத்திந்திய மொழிகளிலும், உலக மொழிகள் பலவற்றிலும் குறிப்பாக ஆங்கிலத்திலும், உக்ரைன் மொழியிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

ஜெயகாந்தன் தம் சிறுகதைத் தொகுப்புகளுக்கும் நாவலுக்கும் எழுதிய முன்னுரைகள் விமர்சனப் பார்வையில் அமைந்து சிறந்தன. அவை அனைத்தும் ஜெயகாந்தன் முன்னுரைகள் என்ற பெயரில் நூலாகத் தொகுக்கப்பட்டு 1978இல் வெளிவந்தன. ஜெய பேரிகை என்ற நாளிதழிலும், ஞானரதம், கல்பனா என்ற இலக்கிய இதழ்களிலும் இறுதி யாக நவசக்தி நாளிதழிலும் ஆசிரியராகப் பணியாற்றிய அனுபவமும் இவருக்கு உண்டு. 137 கதைகளைக் கொண்ட 15 சிறுகதைத் தொகுதிகள், 35 குறு நாவல்கள், 14 நாவல்கள், 20க்கு மேல் கட்டுரைத் தொகுப்புகள், சில மொழி பெயர்ப்புகள், ஒரு நாடகம், இவை தமிழுக்கு அவர் தந்த, அவரே சொல்லிக் கொள்வது போல, "மாஸ்டர் பீஸ்" படைப்புகள்.

அக்னிப் பிரவேசம், யுகசந்தி, உண்மை சுடும் போன்ற சிறுகதைகள், இவரைப் புதுமைப்பித்தனின் வாரிசாக அடையாளம் காட்டின. "க.நா. சுப்ரமணியன், 1950 – 60களில் உருவான நல்ல எழுத்தாளர்கள் இருவரே என்று கூறுவார். ஒன்று ஜெயகாந்தன், இரண்டு சுந்தர ராமசாமி" என்பது அசோகமித்திரன் கருத்தாகும்.

ஜெயகாந்தன் ஒரு நிரந்தர வெளிச்ச விரும்பி. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் இந்தியாவில் நிலவிவந்த நிச்சயமற்ற எதிர்காலக் கனவுகளுக்கும் விரக்திக்கும் கொந்தளிப்புகளுக்கும் அவநம்பிக்கைகளுக்கும் புதுமைப்பித்தனின் எழுத்துக்கள் சாளரமாக இருந்ததைப் போல சுதந்திரத்துக்குப்பின் தனது கால்களை ஊன்ற




முயற்சித்து புதிய நம்பிக்கைகளோடு தனக்கான அடை யாளங்களை மறுஆய்வு செய்து தேர்ந்தெடுத்துக் கொண்டி ருந்த புதிய இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தியவை ஜெய காந்தனின் படைப்புகள் என்று ஜி. குப்புசாமி குறிப்பிடு கின்றார்.

*1948*-இல் புதுமைப்பித்தன் மறைவுக்குப் பிறகு, ரகுநாதனின் "பஞ்சும் பசியும்" வரையிலான இடைக் காலத்தில் முற்போக்கு இலக்கியத்திற்கான வெற்றிடத்தை விந்தன் சிறிது நிரப்பினார். அதன் வீச்சை வெற்றிகரமாக்கி யவர் ஜெயகாந்தனே. தமிழின் தலைசிறந்த இலக்கிய விமர்சகரான கா.சிவத்தம்பி அவர்கள் *1965–66* காலத்திலேயே – சமகால ஜெயகாந்தனை, சரியாகக் கணித்து, "தமிழ்ச் சிறுகதையுலகில், இன்றுள்ள காலப்பிரிவை "ஜெயகாந்தன் காலம்" என்று குறிப்பிடவேண்டிய அளவுக்கு, ஜெயகாந்தன் கதைகள் இலக்கியத் தரமும், வாசக ரஞ்சகமும் உடையன வாகத் திகழ்கின்றன." என்று குறிப்பிட்டதோடு *1966*இல் "அக்கினிப் பிரவேசம்" வெளிவந்தவுடனே ஜெயகாந்தனில் நிகழ்ந்து வந்த "மாற்றம்" பற்றியும் உடனடியாக எழுதினார்.

**பிற்காலங்களில் ஜெயகாந்தனின் 'எழுத்துலக மாற்றம்' கலைத்துவமாக அமைந்ததா?**

**3. சிறுகதையும் யுகசந்தியும்**

*1950* க்குப் பின்வந்த எழுத்தாளர்களில் மிக முக்கிய மானவர் என்று குறிப்பிடப்பட வேண்டியவர் ஜெயகாந்தன். ஜெயகாந்தன் எழுதிய முதல் சிறுகதை "சௌபாக்கியம்" என்ற இதழில், 1950இல் வெளி வந்தது. "தமிழ்ச் சிறுகதைச் சரித்திரத்திலேயே இரண்டு எழுத்தாளர்களின் கதைகள் தான் வாசக சமுத்திரத்தைக் கடந்தன. கல்கியின் கதை களும் ஜெயகாந்தன் கதை களும். இருவருமே ஜனரஞ்சக மான எழுத்தாளர்கள்தான். ஆனால் வெவ்வேறான ஜன ரஞ்சகத் தன்மைகள் கொண்டவர்கள். வாசகர்கள் எதிர்ப்பார்ப்பில் தன்னை கல்கி கரைத்துக் கொண்டவர். ஜெயகாந்தன் தன்னில் வாசகர் எதிர்பார்ப்பைக் கொண்டார். ஜெயகாந்தனால் ஒரு புதிய விஷய உலகம் தமிழ்ச் சிறுகதைக்குக் கிடைத்தது" (சுந்தர ராமசாமி; மல்லிகை; *1986* மே; பக்.*16*).




ஜெயகாந்தனின் சிறுகதைகளின் மொத்தத் தொகுப்பு தொண்ணூறுகளின் இறுதியில் வந்த போது வாங்கி வாசித்து விட்டு ஜெயமோகனிடம் பேசியது நினை வுள்ளது. "ரொம்ப சுமார் தான், பெரும்பாலான கதைகள் தேறாது" என அவர் கூறினார். எனக்கு அன்றும் சரி இன்றும் சரி ஜெயகாந்தன் சிறுகதைகளைப் படிக்கையில் அவை அடிப்படையில் கதைகள் (tales) தாம், சிறுகதைகள் அல்ல எனத் தோன்றுகிறது. இன்னொரு புறம் ஜெயகாந்தன் சிறுகதைகள் சமூகத்தில் பெரும் அதிர்வுகளை உருவாக்கியவை என்பதையும், அவரது சிறுகதைகளை இப்போதும் பலர் வழிபடுகிறார்கள் என்பதையும் அறிவேன். ஆனால் இந்த வரலாற்று மதிப்பு என்பது எனக்கு முக்கியம் அல்ல. இப்போது படிக்கையில் ஒரு எழுத்தாளன் எனக்கு எப்படி தோன்றுகிறான் என்பது முக்கியம். தான் வாழ்ந்த காலத்தில் ஜெயகாந்தன் சமூகத்தை என்ன செய்தார் என்பது அப்போதுள்ள சமூகத்தின் அக்கறை. ஒரு இலக்கிய வாசக னாக அது என் அக்கறை அல்ல (அபிலாஸ்; மின்னற் பொழுதே தூரம் : இணையம்).

"கு.ப.ராவின் சிறுகதைகளில் வெளிப்படும் "மனக்குழைவு"களுக்கும், புதுமைப்பித்தன் சிறுகதைகளில் வெளிப்படும் "வன்மைச் சிதறல்"களுக்கும் கலாரீதியில் ஓர் ஒருமைப்பாடு உண்டு. அவை இரண்டு கலைப்படைப்புக்களின் இரண்டு பரிமாணங்கள். கு.ப.ரா.வின் படைப்பியற்பண்பு ஜானகி ராமனிடத்து ஓர் அகற்சியைப் பெற்றது. அதேபோன்று புதுமைப்பித்தன் சித்திரிப்புப் பண்பு ஆரம்பகால ஜெய காந்தனிடம் பொலிந்து நின்றது. புதுமைப்பித்தனைப் பிரதி செய்வது கடினம்" என்று பேராசிரியர் கா.சிவத்தம்பி எழுதி யிருக்கின்றார் (ஈழத்து தமிழிலக்கியத் தடம் *1980–2000*; *2000*: *86*).

புதுமைப்பித்தன் பாணி எழுத்தைப் பின்பற்றுவது கடினம். புதுமைப்பித்தனின் எழுத்தில் வரிக்கு வரி அவரது விமர்சனக் சாட்டையின் சொடுக்கு ஒலித்துக் கொண்டே இருக்கும். புதுமைப்பித்தன் அளவு தீவிரமாக, விமர்சன பூர்வமான மொழியைக் கையாளா விட்டாலும் ஓரளவு எழுதிப்பார்க்க முயற்சித்தவர்கள் என்று மூன்றே மூன்று பேர்களைச் சொல்லலாம். ஒருவர் தோ.மு.சிதம்பர ரகுநாதன். இன்னொருவர் சுந்தர ராமசாமி; அடுத்தவர் ஜெயகாந்தன். தொ.மு.சி. ஓரளவு எழுதிப் பார்த்து விட்டு விட்டார். ஆனால், சுந்தர ராமசாமியும் ஜெயகாந்தனும் புதுமைப்பித்தன் பாணியில் தொடர்ந்து சென்றனர். இவர்கள் இருவருமே புதுமைப்பித்தனைப் போல் அசலான எழுத்துக் கலைஞர்கள். புதுமைப்பித்தனைப் போல் ஜெயகாந்தனும் விதவிதமாக எழுதியிருக்கிறார் (வண்ண நிலவன்; தீராநதி; *2005* ஏப்ரல்; *5*).

ஜெயகாந்தனின் புகழ் பெற்ற சிறுகதைகளான யுகசந்தி, அடல்ட்ஸ் ஒன்லி, குருபீடம், லவ் பண்ணுங்கோ ஸார், மௌனம் ஒரு பாஷை, அக்கினிப் பிரவேசம், நான் என்ன செய்யட்டும் சொல்லுங்கோ போன்றவை தவறாமல் இலக்கிய



உரையாடல்களில் இடம் பெறுபவை. ஆரம்பகாலச் சிறுகதைகளிலும் குறுநாவல் களிலும் அடித்தட்டு மக்களைச் சொல்லிவந்த ஜெயகாந்தன் ஆனந்தவிகடனில் எழுதத் தொடங்கிய பிறகுதான் பிராமண சமூகத்தைத் தனது கதைகளில் கொண்டுவரத் தொடங் கினார். பழைய மதிப்பீடுகளைத் தமக்கு மிச்சம் வைக்கப் பட்டிருக்கும் ஆதார கௌரவங்களாக நினைத்து நடைமுறை வாழ்வை எதிர்கொள்ளத் திண்டாடிவரும் உயர்குடி மக்களின் எல்லாச் சிக்கல்களும் அநேகமாக ஜெயகாந்தனின் கதைப் பொருட்களாகியிருக்கின்றன. சில சிறுகதைகளில் பழைய காலத்தின் பிரதிநிதிகளே புதிய தலைமுறையினருக்கு அதிக மும் அலட்டிக்கொள்ளாமல் மாறுதல்களை ஏற்றுக்கொள்ள வும் தகவமைத்துக்கொள்ளவும் கற்றுத் தருகின்றனர். இத்தகைய "சீர்திருத்தக்கதை"களைப் பிராமண சமூகத்தை மட்டுமே வைத்து அவர் எழுதியதும் நன்கு யோசித்து செயல் படுத்திய உத்தியாகத்தான் தெரிகிறது. பல நூற்றாண்டு களாக முன்னேறியிருந்த அச்சமூகம்தான் இப்புதிய மாற்றங்களையும் திறந்த மனதோடு தாங்கிக்கொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் செய்யும் என்றறிந்து செய்த உத்தி. அக்கினிப்பிரவேசம், யுகசந்தி, ரிஷிமூலம் போன்ற சிறுகதை கள் இதற்கு எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன.

தன்னுடைய இலக்கியக் கொள்கையை ஜெயகாந்தன் பின்வருமாறு பிரகடனப் படுத்துகின்றார்:

"அர்த்தமே வடிவத்தை வளமாக்குகிறது. ஆகை யினால் இவற்றைப் பிரித்துக் கொண்ட வீண் அவஸ்தைக் குள்ளாகிற பிறரையும் தமது அறியாமையால் அவஸ்தைக் குட்படுத்தாமல், சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே நான் எழுதுகிறேன். கலைப்பணி என்றாலே அதனுள் சமூகப்பார்வை அடக்கம். பிரித்துப் பேசும் போக்கு வந்து விட்டால் பிரித்துச் செல்கிறேன். அது சேர்ந்துதான் இருக்கிறது."

"யுகசந்தி" என்ற உரைப்படைப்பு "ஆனந்த விகடன்" என்ற ஜனரஞ்சக சஞ்சிகையில் *21.07.1963* இல் வெளிந்தது. இக்கதை *1963* அக்டோபரில் வெளிவந்த "யுகசந்தி" என்ற தொகுப்பில் சேர்க்கப்பட்டது. தொன்மை சம்பிரதாய சட்டகங் களை உடைத்துக்கொண்டு, காலமாற்றத்திற்கு ஏற்ப புதிய மாற்றங்களை ஏற்றல் வேண்டும் என்பதே "யுகசந்தி"யின் பாடு பொருளாகும். ஆசாரமான பிராமணக் குடும்பம் ஒன்றினை அறிமுகம் செய்து, அக்குடும்ப பிரதிநிதிகள் புதிய யுகமாற்றங் களை எவ்வாறு எதிர்கொள்கின்றனர் என்பதை விளக்குவ தாக இக்கதை பின்னப்பட்டுள்ளது. காலமாற்றம் என்பது தானாகவே நிகழும் என்ற விடயத்தை தர்க்க ரீதியாக இப்பிரதியில் ஜெயகாந்தன் முன்மொழிந்துள்ளார். மூன்று தலை முறைகளின், சிந்தனை மாற்றங்களை இச்சிறுகதை யில் ஜெயகாந்தன் ஒரு "ஆவணப்படம்" போல படம்பித்துக் காட்டியுள்ளார்.

"யுகசந்தி" என்ற உரைபடைப்பினை இப்போது படிக்கும்போது ரொம்ப சாதாரணமாகத்தான் இருக்கும். ஆனால் கதை எழுதப்பட்ட காலங்களை கணக்கில் எடுத்துக் கொண்டால் பயங்கர முற்போக்கான கதை. சிறு வயதிலே தன்னைப் போல் விதவையாகிவிட்ட தன்னுடைய பேத்தி யுடன் நெய்வேலியில் வாழும் பாட்டி, தன்னுடைய மகனை சந்திக்க புதுப்பாளையம் வருகிறார். பாட்டி எடுத்துக் கொடுக்கும் கடிதம் அந்த குடும்பத்தையே உலுக்கி விடுகிறது, பாட்டியின் பேத்தி மறுமணம் செய்துக் கொள்ள தீர்மானம் செய்து விட்டாள். குடும்பத்தில் இருக்கும் எல்லோருமே அவளை வெறுக்க பாட்டி மட்டும் அவளுக்கு ஆதரவாக சென்று விடுகிறார். இதுதான் "யுகசந்தி"யின் சாரம்.


இருயுகங்களின் சந்திப்பு நிகழ்வதால் இக்கதைக்கு "யுகசந்தி" என பெயர் வைத்துள்ளார் ஜெயகாந்தன். ஆசாரங்களில் இளமைக்காலத்தினை கடத்திய கௌரிப் பாட்டியின் பழைய யுகமும், அவளது ஒரே மகன் வயிற்றுப் பேத்தியான கீதாவின் புதிய யுகமும் சந்திக்கும் தளமாக "யுகசந்தி" அமைந்துள்ளது. கால மாற்றத்திற்கு ஏற்ப சமூக மாற்றமும் நிகழ்தல் வேண்டும் என்ற நியதி இக்கதையில் நிறுவிக்காட்டப்பட்டுள்ளது. அமைதியான நதியாக நகர்கின்ற கௌரிப்பாட்டி, ஆவேசமாய் பிரவகிக்கின்ற புதிய யுகத்தினை வரவேற்பவளாக பக்குவ நிலையினை அடைவதே இக்கதையின் அத்திபாரமாகும். எனவேதான் "யுகசந்தி" என்ற தலைப்பு இந்த உரைபடைப்புக்கு உயிர்ப்பாக உள்ளது.

பத்துவயதில் திருமணம், பதினாறு வயதில் விதவையான கௌரிப்பாட்டிக்குக் குழந்தை இருந்து பேரன் பேத்திகளும் இருந்தனர். ஆசாரவாழ்க்கை, அதாவது கட்டுப்பாடான வாழ்க்கை! காலம் சுழல்வதை யாராலும் மாற்ற முடியுமா? அவள் பேத்தி கீதா திருமணமாகி பத்து மாதங்களில் விதவையாகி பிறந்தகம் வந்து பாட்டியின் மடியின் முகம் புதைத்துக் கதறி அழுதபொழுது பாட்டி அவளை அரவணைத்துக் கொண்டாள். அதற்கு பாசம் மட்டும் காரண மல்ல. இறந்தகாலத்தின் நிகழ்காலப் பிரதிநிதியாய் அவளில் தன்னைக் கண்டாள். கீதா வீட்டிற்குள் முடங்காமல் படித்து, ஆசிரியர் தொழில் பார்க்க அயல் ஊருக்குச் சென்ற பொழுது பாட்டியும் உடன் சென்றாள். தன் மகனைக் காண கிராமத்திற்கு வந்த பொழுதுதான் அந்த செய்தியை அறிகின்றாள். விதவைப்பெண் கீதா மறுமணம் செய்து கொள்ளப் போகின்றாளாம். பிறந்தவீடு தன்னை ஒதுக்கிவிடும் என்பதை உணர்வாள். தனக்கு வாழ்வு வேண்டிச் செல்வதை மறைக் காமல், தெரிவிக்க வேண்டியதைக் கடமையாக நினைத்துக் கடிதம் அனுப்பியிருக்கின்றாள். கீதாவின் உணர்வுகளை ஜெய காந்தனின் வார்த்தைகள் சொல்லும் அழகைப் பாருங்கள்:

"உணர்வுபூர்வமான வைதவ்ய விரதத்திற்கு ஆட்பட முடியாமல் வேஷங்கட்டித்திரிந்து, பிறகு அவப்பெயருக்கு ஆளாகிக் குடும்பத்தையும் அவமானப்படுத்தாமல் இருப்பதே சிறந்த ஒழுக்கம் என்று உணந்திருக்கின்றேன். ஆமாம், ரொம்ப சுயநலத்தோடு செய்த முடிவுதான். எனக்காகப் பாட்டியைத் தவிர வேறு யார்தான் தங்கள் நலனைத் துறந்து தியாகம் செய்துவிட்டார்கள்!"

கீதா இப்படியாகி வந்தபிறகுதான் பார்வதி அம்பியை யும் ஜனாவையும் பெற்றெடுத்தாள். அதற்கென்ன , அதுதான் வாழ்கின்றவர்களின் இயல்பு. வாழாத கீதாவின் உள்ளில் வளர்ந்து சிதைந்து, மக்கி மண்ணாகிப் பூச்சி அரித்து அரித்துப் புற்றாய்க் குவிந்திருக்கும் உணர்ச்சிகளை, நினைவுகளை, ஆசைகளை கனவுகளை அவர்கள் அறிவார்களா? மொட்டை யடிப்பதை விடுத்துப் பின்னல்போட அனுமதித்தவர், வெள்ளைத்துணியை கலர்த்துணியாக உடுத்தும் பொழுது ஒத்துக் கொண்டவர், வாழ்வுக்கு ஏங்கும் இயல்பில் மட்டும் கலா சாரம் போய்விட்டதாகக் கத்தும் போலித்தனத்தை கௌரிப் பாட்டியால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. வீட்டில் எதிர்ப்பு வரவும், "நான் பிறந்த யுகம் வேறடா" என்று கூறிவிட்டு புதுயுகம் போய்விட்ட பேத்தியைக் காணப் புறப்பட்டுவிட்டாள். ஜெய காந்தன் "யுகசந்தி"யில் இவ்வாறு இருயுக மாற்றங்களை ஜனரஞ்சக ரசனையோடு சொல்லியிருக்கிறார்.

அவரது சிறுகதைகளை ஒட்டுமொத்தமாக வாசிக்கும்போது, சமூகத்தில் சீர்செய்தாக வேண்டிய சிக்கல்களை வரிசையாக எழுதிவைத்துக்கொண்டு, ஒவ்வொன்றைச் சுற்றியும் ஒரு கதையை உருவாக்கி ஒட்ட வைத்து, அப்பிரச்சனையை எல்லாத் திசைகளிலிருந்தும் அணுகி அலசி ஆராய்ந்து தனது தீர்ப்பைச் சொல்லும் வித



மாக கதைகளை "உண்டாக்குகிறாரோ" என்று தோன்றும். ஆனால், இதுதான் நிஜம்! "யுகசந்தி" இதற்கு உதாரணம்.

"சுயதரிசனம்", "சமூகம் என்பது நாலுபேர்", "தவறுகள் குற்றங்கள் அல்ல", "யுகசந்தி" போன்ற கதைகளில் கடிதங்கள் அவருக்கு உசிதமான சாதனங்களாகி விடுகின்றன. அவற்றில் எல்லா விடயங்களையும் குறிப்பெடுத்துக் கொண்டுவந்து பாடம் எடுத்துவிடுகிறார்: பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் போல! "யுகசந்தி"யில் கீதா என்ற பாத்திரத்தின் இயக்கம் ஒரு கடிதத்தின் மூலமாவே இயங்குகின்றது. கதையின் திருப்பமும் கடித்ததின் மூலமே நிகழ்கிறது.

கதைகளுக்குள் பேசுவதும் கதையை முடித்து தீர்ப்பளிப்பதும் ஜெயகாந்தனின் இயல்புகள். நவீனத்துவம் அதை ஓர் பெரும் அழகியல் பிழையென பிரகடனப்படுத்தியுள்ளது. இதனை மட்டும் சுட்டிக்காட்டி அவரது படைப்புலகை முழுமையாக நிராகரிக்க முடியாது. . ஆனால் எந்த நவீனத்துவ எழுத்தாளனும் தொடாத பல இக்கட்டு நிலைகளை சாதாரணமாக ஜெயகாந்தன் கதைகள் கையாண்டிருப்பதை உணரலாம். கதைகளில் ஒலிக்கும் ஜெயகாந்தனின் குரலை அதன் பல்வேறு குரல்களில் ஒன்றாக மட்டும் காணும் இன்றைய வாசகன் அவற்றுக்கு பலதளங்களிலான வாசிப்பை அளிக்கமுடியும். அத்தகைய மறுவாசிப்புக்குரிய ஜெயகாந்தன் கதைகள் பல. அதில் ஒன்று யுகசந்தி!

ஜெயகாந்தனின் பெரும்பாலான கதைகளுக்கு யுகசந்தி என்று பெயரிடலாம். அவரைப்பற்றி சுகா எழுதிய கட்டுரை ஒன்றில் (வார்த்தை மாத இதழ்) அவரையே ஒரு "யுகசந்தி" என்று சொல்கிறார். ஜெயகாந்தனின் படைப்புகளை தொடர்ந்து வெளியிட்ட "மீனாட்சி புத்தக" நிலையத்தார் 1995இல் "ஒரு யுகசந்தியின் புதிய தரிசனங்கள்" என்ற பெயரில் ஜெயகாந்தனின் புகழ்சொல்லும் கட்டுரை நூல் ஒன்றினை வெளிக்கொணர்ந்திருந்தனர். தொன்மைக் கால மதிப்பீடுகளும் நவீன யுக மதிப்பீடுகளும் சந்திக்கும் மோதலையும் சமரசத்தையுமே தொடர்ச்சியாக ஜெயகாந்தன் படைப்பாக்கியிருக்கிறார். அவ்வகையில் பிற எழுத்தாளர்கள் எவரும் கவனிக்காத அளவுக்கு அம்மோதலின் உக்கிரமான, நுண்மையான புள்ளிகளை "செயற்கைத் தனத்துடன்" அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். "யுகசந்தி"க்கு இந்த இலக்கணம் சரியாகவே பொருந்துகின்றது.

ஜெயகாந்தனின் ஒரு மனம் மரபில் ஆழ வேரூன்றியது. இன்னொரு மனம் நவீனயுகத்தை புத்தெழுச்சியுடன் வரவேற்கும் மார்க்ஸிய நம்பிக்கை கொண்டது. ஆரம்பகால கதைகளில் புதிய காலத்துக்கான அறைகூவலாகவும் எக்காளமாகவும் மட்டும் நின்றன அவரது கதைகள். பின்பு அவர் தன்னுள் உறையும் மரபை அடையாளம் கண்டது. ஜெயகாந்தனைப் பொறுத்தவரை திருவள்ளுவர், தாயுமானவர், விவேகானந்தர், பாரதி ஆகியோரின் சொற்கள் வழியாகவே அதை அவர் கண்டு கொள்கிறார். மரபுமனத்துக்கும் நவீன மனதுக்குமான மோதல் அவரில் உக்கிரம் கொள்கிறது. அக்கால கட்டத்தில் தான் அவர் ஆனந்த விகடனில் "யுகசந்தி"யை எழுதினார்.

அவருக்கு நிகராகவே அன்று நவீனத்துவத்தை ஏற்க தன்னை மறு ஆக்கம்செய்தாகவேண்டிய நிலையில் இருந்த பிராமண சமூகம் அவருக்கு இயல்பாகவே களம் ஆகியது. அந்த அகமோதலுக்கு ஆளான பிராமணர்களே அவரது முதல் வாசகர்களாக ஆனார்கள். அவரது கணிசமான கதைகள் மரபின் வெற்று அடையாளத்தை உதறத்துடிக்கும் மனங்களை மையமாக்கியவை; நவீனத்துவத்தின் உள்ளூர உறையும் மனிதாபிமானத்தை ஜனரஞ்சக சுவாரஸ்யத்தோடு அடையாளம் கண்டு கொள்பவை; "யுகசந்தி" போல.

**இதுவா நவீனத்துவம்?**


**4. கௌரிப்பாட்டியும் ஏனைய பாத்திரங்களும்**

தமிழ் வாழ்வின் அனைத்து அடையாளங்களையும் அனைத்துக் கருத்துகளையும் ஜெயகாந்தன் தனக்கே உரித்தான விதத்தில் கையகப்படுத்தினார். அவற்றையெல்லாம் தன் பாரம்பரியச் சொத்துபோலவும் கருதிப் பெருமை கொண்டாடினார். அனைத்துக் கதா மாந்தர்களும் அவரது படைப்புலகில் நுழைந்தது இவ்விதமாகத்தான். அவர்கள் தம் தரப்பு வாதங்களை அடி தொட்டு முடிவரை பேசித் தீர்த்தார்கள். பல கதாமாந்தர்களின் உள்ளும் அவர் புகுந்துகொண்டதுண்டு. தன் ஆகிருதியை அவர் பல கதா பாத்திரங்களுக்கும் அளித்தார். தான் வரித்துக் கொள்வதான கோட்பாடுகளுக்கு செயற்கைத்தன்மை வாய்ந்த கதைகளை எழுதியபோதும், அதற்கும் அவர் ஒரு யதார்த்த பூர்வமான நம்பகத்தன்மையை வழங்கினார். அதனாலேயே வாசகர்கள் அவரது படைப்புக்குள் கட்டுண்டு மயங்கும் நிலை உருவானது. கம்யூனிஸத்தில் பிடிமானம் கொண்டவன் என்றும் சொல்வார்; சங்கர மடத்தின் வாழ்வையும் எழுதுவார். தனக்குள்ளிருந்த ஒரு தேடலை பாத்திரங்கள் மூலமாக வெளிப்படுத்தி, அப்பாத்திரங்களுக்கு அவர் இலக்கிய அந்தஸ்தை அளிப்பதில் வெற்றி பெற்றிருக்கின்றார்.

ஜெயகாந்தனின் கதைகள் பிரச்சினைகள் சார்ந்தவை என்று சொல்லலாம். பிரச்சினைகளும் முன் முடிபுகளும் சார்ந்தே இவர் கதைகளை ஜோடனை செய்கிறார். ஆனால் பிரச்சாரவாதிகளுடையது போல் இவரது ஜோடனைகள் நம்மை உறுத்துவதில்லை. அவை நம்பிக்கை கொள்ள வைப்பதில்லை. காரணம் இவரது கதாபாத்திரங்கள் மண்ணின் நன்மைகளை பூரணமாகப் பிரதிபலிப்பவர்கள். கருத்துச் சோனிகளாக இல்லாமல், அனுபவச் செழுமை அளிக்கும் புஷ்டியோடு, கதாபாத்திரங்களாக இவர்கள் திடகாத்திரத் துடன் இருக்கிறார்கள் (கௌரிப்பாட்டி போல). மன இயல்புகளையும் ஒரு எல்லை வரையிலும் இவர் இயற்கை நியதிகளை அனுசரித்துச் சித்திரிக்கக் கூடியவர். இச்சாதகமான அம்சங்கள், பிரச்சினைகளின் முற்போக்கான தீர்வுகளை திருந்த விடாமல் இயற்கையின் போலத்துக்குள் தன்னை அழைத்துக் கொண்டு விடுகிறது. இதுதான் ஜெயகாந்தனின் கலைவெற்றி என்று சுந்தர ராமசாமி (1986:16) கூறுகின்றார்.


"ஜெயகாந்தன், எத்தகைய பாத்திரங்களைப் படைத்தாலும் அந்தப் பாத்திரங்களின் சிறந்த அம்சங்களை குறிப்பிடத் தவறுவதில்லை. துவேஷத்தைப் பரப்புவது, அவருடைய இயல்புக்கு சற்றும் ஒவ்வாதது" என அசோக மித்திரன் குறிப்பிடுகின்றார். "யுகசந்தி"யின் மைய பாத்திரம் கௌரிப்பாட்டி. பாட்டியின் மகன் கணேசய்யர், இளம் விதவையாகிவிட்ட அவரது மகள் கீதா ஆகியோர் முக்கிய பாத்திரங்கள். கணேசய்யரின் மனைவி பார்வதி, பிள்ளைகள் மீனா, அம்பி, ஜனா ஆகியோர் உட்பட, நாவிதன் வேலாயுதம், வண்டிக்காரர்கள் முதலான பாத்திரங்களும் இக்கதையில் நடமாடுகின்றன.

கௌரிப்பாட்டி ஒரு பழைய யுகப்பிரதி. 16 வயதில் கணவனை இழந்து ஒரு குழந்தையுடன் (கணேசய்யர்) கைம்மைக் கோலம் பூண்டவள். உணர்ச்சிகளை சிதைத்து, தலைமழிக்கப்பட்டு முக்காடிட்ட தோற்றத்துடனும், வீட்டைவிட்டு எங்கும் போகாமலும், கடுமையான ஆசாரங்களுடன் கூடிய வாழ்வுக்குள் சிறைப்பட்டவள். இந்து சமூகத்தின் வைதவ்யக் கொடுந்தீயில் வடுக்கப்பட்ட கௌரிப்பாட்டி, பேத்தி கீதா விதவையாகிவிட்ட போது, கால



மாற்றங்களை ஏற்பவளாக, சமூகமாற்றங்களை ஏற்கும் மனத்திடம் கொண்டவளாக பரிபக்குவம் அடைகின்றாள். அது "காலம் மாறும்போது மனுஷாளும் மாறணும்" என்ற அடிப்படையில் அமைகின்றது. பொறுமையின் இலக்கண மாய், சகிப்புத் தன்மையின் சிகரமாய், பார்ப்பதற்கு சென்ற நூற்றாண்டின் சின்னமாய்த் தோன்றினாலும், இந்தக் காலத்திற்கேற்ப தன்னை தகவமைத்துக் கொள்ளும் ஆற்றல் மிகுந்த கௌரிப்பாட்டி ஒரு வித்தியாசமான படைப்பாக உருவாக்கப்பட்டிருக்கிறாள். இதனை ஜெயகாந்தனின் கீழ்வரும் வரிகள் உணர்த்தி நிற்கின்றன. "நேற்றுப் பிறந்த குழந்தைகளெல்லாம் அதோ ரிக்ஷாவிலும், ஜட்காவிலும், சைக்கிளிலும் பரந்து, பரந்து ஓடுகிறார்கள். மழையும், வெயிலும் மனிதனை விரட்டுகின்ற கோலத்தை எண்ணி பாட்டி சிரித்துக் கொண்டாள். அவளுக்கு இதுவெல்லாம் ஒரு பொருட்டா? வெள்ளமாய்ப் பெருகிவந்த வாழ்வின் சுழிப்பிலும், பின் திடீரென வறண்ட பாலையாய் மாறிப்போன வாழ்க்கை நெருப்பிலும் பொறுமையாய் நடந்து பழகியவளை, இந்த வெயிலும் மழையும் என்ன செய்யும்?" தீர்மானமான முடிவு எடுக்கும் திறன் கொண்டவளாக ஜெயகாந்தன் கௌரிப் பாட்டியை படைத்துள்ளார். கௌரிப் பாட்டி தீர்மானம் செய்வதில் முதன்மையானவள் என்பது மட்டுமல்ல; அதற்கான காரணங்களை முன் வைப்பதிலும் கைதேர்ந்தவள் என்பதை "யுகசந்தி" உணர்த்துகின்றது. ஜெயகாந்தனின் கதைகளில் மையப் பாத்திரங்களாக வரும் எந்தவொரு பாத்திரமும் தான் நினைத்ததைத் தைரியமாகச் செய்யக் கூடிய சொல்லக் கூடிய பாத்திரங்கள் என்பதை ஜெயகாந்தனின் தீவிர வாசகர்கள் அறிவார்கள் என அ.ராம சாமி கூறுகின்றார். அதுவரை நடைமுறையில் இல்லாத ஒரு வழக்கத்தின் மையத்தில் நிற்கும் பாத்திரமாக இருந்தாலும், அந்தப் பாத்திரம் தீர்மானமாக முடிவெடுத்து நடைமுறைப் படுத்துவதைத் தனது கதையில் வெளிப்படுத்துபவர் ஜெயகாந்தன். ஏனெனில், ஜெயகாந்தனே சொன்னது போல அவரது கதைகளில் வரும் எல்லாப் பாத்திரங்களும் அவர் தான். தன்னையே ஒவ்வொரு பாத்திரத்திலும் வைத்து எழுதிப் பார்க்கும் ஜெயகாந்தன் தனது முடிவுகளைப் பாத்திரங்களின் முடிவுகளாகத் தந்துவிடுகிறார். இப்படித் தருவதே அவரது கதைகளின் பலம் என்று சொல்லும் விமர்சகர்கள் இருக்கின்றார்கள்; அதுவே அவரது பலவீனம் என்று நிராகரிப்பவர்களும் இருக்கின்றார்கள். இது தமிழ் சினிமா பாணியிலான "நடைமுறை" என்று விமர்சிப்பவர்களும் இருக்கின்றார்கள். அத்தகைய விமரிசனங்களைப் பற்றி ஜெயகாந்தன் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. மாறிவரும் சமூகத்தின் புதிய கீற்றுக்களைச் சரியாக அடையாளப்படுத்தி அதன் பிரதிநிதி களை பாத்திரங்களாக எழுதிக் குவித்துள்ளார். ஆனந்த விகடனில் ஜெயகாந்தன் எழுதிய சிறுகதைகள் வெளிவந்த காலத்தில் பலத்த சர்ச்சைகளையும் எதிர்ப்புகளையும் எதிர்கொண்டன. "யுகசந்தி" பிரதியும் ஆனந்தவிகடனில் வெளியான போது சார்பு, சார்பற்ற விமர்சனங்களை எதிர் கொண்டது. "யுகசந்தி"யை திட்டமிட்டுக் கதைகளை எழுதுபவர் ஜெயகாந்தன் என்பதை உறுதி செய்யும் உதாரணக் கதை என்று சொல்லப்பட்டது. பேனா வழியாகக் கதை தன்னை எழுதிக் கொள்கிறது, பாத்திரங்கள் தங்களை எழுதிக் கொள்கிறார்கள் என்று சொல்லும் சில நவீன எழுத்தாளர்கள் போல சொல்பவர் அல்ல ஜெயகாந்தன். அவர் எழுத நினைக்கும் கதை அல்லது கதாபாத்திரம் முழுமையின் நிழலாக அவரது மூளைக்குள் இருப்பதாக நம்புபவர். அப்படி இருப்பது தானே சாத்தியமும் கூட (அ.ராமசாமி: இணையம்).


நெய்வேலியிலிருந்து கடலூரில் இருக்கும் மகன் வீட்டிற்கு வருவதற்காகப் பேருந்து நிலையத்தில் வந்திறங்கிடும் கௌரிப் பாட்டி, மகன் வீட்டில் ஒரு இரவு முழுவதும் தூங்காமல் தங்கி இருந்து விட்டு அடுத்த நாள் அவசர அவசரமாகத் தனது பேத்தி இருக்கும் நெய்வேலிக்குச் செல்ல வேண்டும் எனப் பேருந்து நிலையத்திற்குத் திரும்புவதோடு முடியும் கதை யுகசந்தி. எழுபது வயதுப்பாட்டி கௌரி, இளம் வயதிலேயே விதவையானவள். தனது விதவைக் கோலத்தை ஒவ்வொருவருக்கும் உணர்த்தும் விதமாக விதவைகளுக்கே உரிய ஆடையை உடுத்தி, தலையை மழித்து, உணவை உண்டு ஆசாரம் காத்து வந்தவள். அதே நிலை கணேசய்யரின் மூத்த மகள், கௌரிப்பாட்டியின் பேத்தி கீதாவுக்கும் ஏற்பட்ட போது அடைந்த வலி தாங்க முடியாத ஒன்றாய் உணர்ந்தவள். "மணக்கோலம் பூண்டு பத்தே மாதங்களில், தரித்திருந்த சுமங்கலி வேடத்தை, நாடகப்பூச்சைக் கலைப்பது போல கலைத்து விட்டுக் குடும்பத்தை அழுத்தும் பெருஞ்சோகமாய்க் கதறிக் கொண்டு தன் மடியில் வந்து விழுந்து குமுறியழுத நாள் முதல், தனது வாழ்க்கையில் நிகழ்ந்த கடைசிச் சோகமாய் அவளைத் தாங்கிக் கொண்டாள் கௌரிப் பாட்டி" என்று ஜெயகாந்தன் எழுதிக் காட்டியதன் வழி கௌரிப் பாட்டியின் சித்திரத்தை உய்த்துணரலாம். விதவையான மகளை விதவைக்கோலம் ஏற்கச் செய்யாமல், ஆசிரியப் பணிக்கு அனுப்பும் முடிவைத் தனது மகன் கணேசய்யர் எடுத்த போது அமைதி காத்தவள் மட்டுமல்ல; அவளோடு போய் அவளுக்கு உதவியாக இருக்கிறேன் எனக் கிளம்பி கீதா வேலை பார்க்கும் நெய்வேலியில் அவளுடன் இருப்பவள். அப்படி இருந்தாலும் தன் ஆசார அடையாளமான மொட்டை போடுவதற்காக ஒவ்வொரு முறையும் கடலூருக்கு வருபவள். வந்து வழக்கமாகத் தலை மழிக்கும் நாவிதன் வேலாயுதத் திடம் தலையை மழித்துக் கொள்பவள். அப்படித் தலையை மழித்து மொட்டை போட்டுக் கொள்ளத்தான் கௌரி அன்றும் வந்தாள். வரும்போது பேத்தி தன் தந்தை கணேசய்யரிடம் கொடுக்கச் சொன்ன கடிதத்தையும் கொண்டு வருவதில் தான் கதை தொடங்குகிறது. நாவிதனைக் கூட மாற்றிக் கொள்ளாமல் ஆசாரம் காத்த கௌரிப் பாட்டி, தான் அனுபவித்த விதவைத் துயரைத் தனது பேத்தி கீதா அனுபவிக்கக் கூடாது என நினைத்து எடுக்கும் முடிவு தான் அவளை யுகங்களின் சந்திப்பாக மாற்றுகிறது. தன்னுடன் பள்ளியில் வேலை பார்க்கும் இந்தி பண்டிட் ராமச்சந்திரனை மறுமணம் செய்வது என்று பேத்தி கீதா எடுத்திருக்கும் முடிவை வீட்டில் உள்ள அனைவரும் ஏற்றுக் கொள்ள வில்லை என்றாலும், நான் ஏற்று கொள்கிறேன்; இப்படியொரு முடிவை எடுத்த அவளுக்கு ஆதரவாக நான் இருக்க வேண்டும் என்று கருதி உடனடியாகத் தலையைக் கூட மழித்துக் கொள்ளாமல் திரும்பிச் செல்கிறாள் என்பதாகக் கதை முடிகிறது. "யுகசந்தி"யின் கதை முடிச்சே கௌரிப் பாட்டி கொண்டு வரும் கடிதத்தில் தான் இருக்கிறது. பேத்தி கீதா தன்னிடம் கொடுத்த கடிதத்தைத் திறந்து பார்க்காமல் அவளது அப்பா கணேசய்யரிடம், தன் மகனிடம் சேர்த்து விட்டு ஆயாசமாக அமர்ந்த கௌரியைக் கணேசய்யர் கடிதத்தைப் படித்து விட்டு அடைந்த அதிர்ச்சியும் ஆவேசமும் நிலை குலைய வைக்கிறது. மறுமணம் செய்வது எனக் கீதா எடுத்துள்ள முடிவைச் சொல்லும் கடிதத்தைப் படித்தவுடன் கணேசய்யர் "அவ செத்துட்டா.. தலையெ முழுகிட வேண்டியதுதான் என்று நிர்த்தாட்சண்யமான குரலில் உறுதியாகச் சொன்ன போது "பாட்டி திகைத்தாள்" என்று எழுதுகிறார் ஜெயகாந்தன். திகைத்தவள் தன் இயல்புக்கேற்ற நிதான புத்தியுடன் அந்தக் கடிதத்தை மீண்டும் கையிலெடுத்து



அந்தக் கடைசி வரிகளைப் படிக்கிறாள். அதில், இப்படி இருக்கிறது: "ரொம்ப சுயநலத் தோட எடுத்த முடிவு தான். எனக்காகப் பாட்டியைத் தவிர வேறு யார்தான் தங்கள் நலனைத் துறந்து, தியாகம் செய்துவிட்டீர்கள்..?" இந்தக் கேள்வி பாட்டிக்கு சுருக்கென்று உரைத்ததால் நாக்கைக் கடித்துக் கொண்டாள். எதுவும் பேசாமல் திரும்பத் திரும்பக் கடித வரிகளை நினைவுக்குக் கொண்டு வருவதும் கீதாவை நினைத்துக் கொள்ளாமல் இருந்த கௌரிக்கு அன்றிரவு தூக்கம் தொலைந்துவிட்டது. அடுத்த நாள் காலை நாவிதன் வேலாயுதம் வந்து நின்றதை நினைவுபடுத்திக் கணேசய்யர், "அம்மா வேலாயுதம் வந்திருக்கான்... அவள் செத்துட்டான்னு நெனச்சித் தலையைச் செரைச்சி தண்ணிலே போயி முழுகு" என்று சொல்கிறார். அப்போது கௌரி, "வாயை மூடுடா.." என்று குமுறி எழுந்து "காலங்கார்த்தால அச்சான்யம் பிடிச்ச மாதிரி என்ன பேச்சு!.. இப்ப என்ன நடந்துட்டுதுன்னு அவளைச் சாகச் சொல்றே? என்று தாங்க முடியாத சோகத்துடன் கேட்கிறாள். பிறகு தனது மகனிடம், "அவ காரியம் அவ வரைக்கும் சரிங்கறாளே அவதான். அதுக்கென்ன சொல்றே?" என்று கேட்டு அவரை அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டு தான் இதுவரை காத்த ஆசாரம், அனுஷ்டானம் போன்றவற்றின் தீவிரமான கேள்விகளைத் தொடுக்கிறாள். அந்தக் கேள்வி கீதாவுக்காகக் கேட்டதா..? இவ்வளவு காலமும் தன்னை விதவையாக ஆக்கிப் பார்த்த சமூகத்தின் கட்டுப்பாடுகள் மீது கேட்கும் கேள்விகளா? என்று திகைக்கும் படியாக அவளது வினாக்கள் மிதிவெடியென வெடிக்கின்றன. கௌரிப்பாட்டியின் தர்க்கங்களும் தன் மகன் கணேசனுடன் அவள் நடத்தும் விவாதங்களும் ஒரு கதைக்குள் நிகழ வாய்ப்புண்டா என்றால் இல்லை தான். உணர்ச்சிகரமான நிகழ்வுகளின் போது மனிதர்கள் தர்க்க ரீதியாகப் பேசிக் கொள்வதில்லை என்பது யதார்த்தம். என்றாலும் ஜெய காந்தனின் பாத்திரங்கள் அறிவுப் பூர்வமாகப் பேசவே செய்வார்கள். கௌரிப் பாட்டியும் அப்படித்தான் பேசுகிறாள். இது பற்றி எம்.ஏ.நுஃமான் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "தன் பிற்காலப் படைப்புகளில் தன் குரலை மறைக்க அவர் முயன்றதில்லை. அது ஓங்கி ஒலிப்பதையே அவர் விரும்பினார் என்று தோன்றுகின்றது. அதனாலேயே அவரது கதைசொல்லல் பிரசங்கபாணியாகவும் தர்க்க நடையிலும் அமைந்திருக்கிறது. எல்லாப் பாத்திரங்களிலும் அவரே அமர்ந்திருக்கிறார். சாரங்கனும் அவர்தான், கங்காவும் அவர்தான், ஓங்கூர் சாமியாரும் அவர்தான், ஹென்றியும் அவர்தான், கௌரிப்பாட்டியும் அவர்தான். அவருடைய தர்க்க மூளைதான் அவர்களுக்குள்ளே இருப்பது. அவரைப்போலவே எல்லோரும் தர்க்கரீதியாகப் பேசு கிறார்கள்" (காலச்சுவடு; ஜூன் 2015). கௌரி ஆசாரத்தைக் காத்தது போலக் கீதாவையும் விதவைக் கோலத்தில் இருக்கச் செய்யாமல் தொடர்ந்து படிக்கவும், வேலை பார்க்கவும் அனுமதித்த போதே ஆசாரம் மீறப்படுதல் நடந்து விட்டது: வேலை பார்த்த போது அவள் திலகம் இட்டுக் கொண்டாள்; வண்ண வண்ண ஆடைகளை அணிந்து கொண்டாள். அதையெல்லாம் அனுமதித்து விட்டு, இப்போது மறுமணம் என்றவுடன் ஆசாரம், அனுஷ்டானம் எனப் பேசுவது என்ன நியாயம் ? என்று கேட்ட அம்மாவுக்குப் பதில் சொல்ல முடியாமல் திகைத்து நிற்கும் கணேசய்யரிடமும் அவரது மனைவி பார்வதியிடமும் " வீட்டைச் சமத்தாப் பார்த்துக்கோ " என்று சொல்லி விட்டுக் கிளம்புகிறாள். கிளம்பும்போது வழியில் நின்ற வேலாயுதத் திடம், "நீ போடாப்பா.. நான் அவசரமாப் போறேன் நெய் வேலிக்கு.. " என்று அவனிடம் நாலணாவைத் தந்து அனுப்பினாள். "இனிமேல் இவனுக்கு இங்கு வேலை இல்லை.. அதற்கென்ன? உலகத்தில் என்னென்னமோ மாறுகிறது! நான் ஒரு நாவிதனைக்கூட மாற்றிக் கொள்ளக் கூடாதா?" என்று எண்ணிச் சிரித்துக் கொண்டாள் என்று, எம்.ஜி.ஆர் பாணி "புரட்சித்தலைவி"யாக கௌரிப்பாட்டியை படம் பிடிக்கும் ஜெயகாந்தன், அதே செயற்கையான உணர்வுடனேயே கதையை இப்படி முடிக்கிறார்: "அதோ, காலை இளவெயிலில், தூசில்லாத புழுதி மண்ணில் பாதங்கள் அழுந்தி அழுந்திப் புதிய ஒரு பக்கம் சாய்ந்து சாய்ந்து நடந்துக் கொண்டிருக்கும் பாட்டியின் தோற்றம்... வேகமாய் ஆவேச முற்று வருகின்ற புதிய யுகத்தை, அமைதியாய் அசைந்து அசைந்து நகரும் ஒரு பழைய யுகத்தின் பிரதிநிதி எதிர் கொண்டழைத்துத் தழுவிக் கொள்ளப் பயணப்படுவதென்றால்? ... ஓ! அதற்கு ஒரு பக்குவம் தேவை!" கீதா பாத்திரம் "ஒரு கடிதம்" என்று சொல்லலாம். "யுகசந்தி" யில் ஒரு கடிதமாக மட்டுமே கீதா உருவாக்கப் பட்டிருக்கிறாள். கௌரிப்பாட்டி எடுத்து வரும் கடிதத்திலேயே அவள் வெளிச்சமாக்கப்பட்டிருக்கிறாள். ஆனால் கௌரிப் பாட்டி பேத்தி கீதாவை மனமெழுகுவர்த்தி வெளிச்சத்தில் அவ்வப் போது காட்டுகிறாள். "யுகசந்தி"யில் ஒரு யுக வெளிச்சத்தை கொணருகின்ற புரட்சிப் பாத்திரமாக கீதா ஒப்பனை செய்யப்பட்டிருக்கிறாள். கதையின்படி கீதா ஒரு புதுயுக பிரதிநிதி. அவளின் புரட்சி ஒரு கடிதத்தின் மூலமாகவே நிகழ்த்திக் காட்டப்படுகின்றது. பின்வரும் கடித வரிகள் இதனை நிதர்சனமாக்குகின்றன:

"என்னோடு பணிபுரியும் ஹிந்தி பண்டிட் திரு. ராமசந்திரன் என்பவரை வருகின்ற ஞாயிறன்று நான் பதிவுத் திருமணம் செய்து கொள்ள நிச்சயித்து விட்டேன். நான் விதவை என்பது அவருக்குத் தெரிந்ததுதான். ஆறுமாத காலமாய் நான் எனது உணர்ச்சிகளோடு– இது பாபகரமான காரியம் என்ற அர்த்தமற்ற உணர்ச்சியோடு– போராடித்தான் இம்முடிவுக்கு வந்தேன். உணர்வு பூர்வமான வைதவ்ய விரதத்துக்குஆட்படமுடியாமல் வேஷங்கட்டித்திரிந்து, பிறகு அவப்பெயருக்கு ஆளாகிக் குடும்பத்தையும் அவமானப் படுத்தாமல் இருப்பதே சிறந்த ஒழுக்கம் என்று உணர்ந்திருக்கிறேன். இந்த முப்பது வயதில்– இவ்வளவு சோதனைகளைத் தாங்காமல்– இன்னும் ஐந்தாண்டு களுக்குப்பின் இதே முடிவுக்கு வர நேரிடுமோ என்ற அச்சமும் பிறந்தது இப்போதே செய்தல் சரி என்ற முடிவுக்கு வந்து விட்டேன்.... ஒரு புதிய வாழ்க்கையை, புதிய வெளிச்சத்தைப் பெற்று, ஒரு புது யுகப் பிரஜையாகச் சஞ்சரிக்கப் போகிறேன் என்ற லட்சிய நிறைவேற்றத்தில் நான் ஆறுதலும் மட்டற்ற ஆனந்தமும் கொள்கிறேன்" ஜெயகாந்தன் எப்பவும் சொல்ல விரும்புகின்ற, அல்லது நிகழ்த்திக்காட்ட விரும்புகின்ற பெண்ணியம் சார்ந்த எண்ணக்கருவே கீதா என்று சொல்லலாம். கீதா ஒரு யதார்த்த பாத்திரமா? ஜனரஞ்சக கதைகளில் துள்ளி நிற்கும் ஒரு வெறும் பாத்திரமா? கதையில் அவள் பெறுகின்ற கலை பெறுமானம் என்ன? புதுமைப் பித்தனின் சாபவிமோசத்தின் "அகலிகை" போல கீதா கலை நேர்த்தியுடன் படைக்கப்பட்டிருக்கின்றாளா? "யுகசந்தி"யில் கீதா ஒரு "குறும்படம்" போல! கீதாவை பற்றி இன்னுமொரு கோணத்தில் சிந்தித்துப் பார்க்கலாம்.

ஒரு புரட்சிகர படைப்பு உருவாக்கப்படுகின்ற போது, அதற்கு எதிர்நிலையில் ஒரு பாத்திரம் உருவாக்கப் படுவது மரபு. இது ஜனரஞ்சக கதைக்கு மட்டுமல்ல, சினிமா, நாடகம் என்று எல்லாவற்றுக்கும் பொருந்துகின்றது. "யுகசந்தி"யின் எதிர்நிலைப் பாத்திரம் தான் கணேசய்யர். இவர்



கௌரிப்பாட்டியின் மகன். "அம்மா பிள்ளை"யாக வளர்ந்தவர். பழமையான அசாரயுகத்தின் பிரதிநிதி. மகள் கீதவை ஆசிரியப்பயிற்சிக்கு அனுப்ப தயங்கிய போதிலும், தாயாரின் விருப்பத்திற்கு இணங்கி அனுப்பியவர். மகள் கீதாவின் மறுமணம் பற்றி அறிந்த போது கொதித் தெழுந்தவர். ஆசாரக் குறைவான செயல் அதுவெனக் கருதி மகளுடனான உறவை உதறி எறிந்தவர். விதவை மறுமணம் என்ற நிலை அதிகம் வெளியில் தெரியாமல் மாறிவிட்ட இன்றைய சூழலில் இந்தக் கதை முக்கியமான கதையாகத் தோன்றாமல் போகலாம். ஆனால் பால்ய விவாகம், அதனால் ஏற்பட்ட விதவைகள் பிரச்சினை என்று தமிழ்ச் சமூகத்தினை அலைக்கழித்த அந்தச் சிக்கலைத் தீவிரமாக எதிர்கொண்ட ஒரு எழுத்தாளன் எடுத்த முடிவை இந்தக் கதையின் பாத்திரங்களான கௌரிப்பாட்டி, கீதா ஆகியோர் உக்கிரமாக வெளிப்படுத்துகின்றனர்.

**கௌரிப்பாட்டி, கீதா ஆகிய பிரதிகளின் உருவாக்கத்தில் கலையாக்க செய்நேர்த்தியின் பங்கு என்ன?**

**5. சிறுகதைக்கான மொழி**

ஜெயகாந்தனின் அடிப்படையான குறை அவர் மொழியை துடைப்பம் போல் பயன்படுத்தினார் என்பது. மொழி என்பது ஆபரேசன் கத்தி போல் ஒரு நுணுக்கமான கருவி என்பது அவருக்கு புரியவில்லை. அவரைப் பற்றி யோசிக்கையில் எனக்கு அடிக்கடி அவரைப் பற்றி மனுஷ்யபுத்திரன் சொன்னது நினைவு வரும். நான் முதன்முதலாய் மனுஷிடம் ஜெயகாந்தன் பற்றி குறிப்பிட்ட நாள் அவர் வாயில் இருந்து வந்த வாக்கியம் இது: "ஜெய காந்தன் ஒரு பிரசங்கி". எவ்வளவு அழகான துல்லியமான சொல். இன்றும் கிறித்துவ போதகர்களை பிரசங்கியார் என அழைப்பார்கள். ஜெயகாந்தன் எழுத்தை ஒரு போதனை மேடையாகத் தான் பார்த்தார். மொழியின் பல அடுக்குகளை திறந்து பார்ப்பதிலோ, மனித உளவியலின் புதிர்கள் பற்றி வியந்து அதனுள் பயணிக்கவோ அவருக்கு அவகாசம் இல்லை (அபிலாஸ்; மின்னற் பொழுதே தூரம் : இணையம்).

"இவர் நடையைக் கூர்ந்து கவனித்தால் காகிதத்தில் எழுதுகிறார் என்பதைவிட மேடையில் நின்று பலரும் கேட்கக் கதையைச் சொல்கிறார் என்ற முடிவுக்கே தன்மைகள் காரணமாக நாம் வரவேண்டும். ஆக படிக்கும் ஆயாசம் இன்றி கேட்கும் சுகம் வந்து விடுகின்றது" என்று சுந்தர ராமசாமி எழுதுகின்றார்.

"ஜெயகாந்தனது உரைநடை அவரது தோற்றத்தை யும் பேச்சையும் போலவே கம்பீரமானதுதான். தான் எழுதிச் செல்லும் பகுதிக்குச் சற்றும் பொருந்தாத உரைநடைப் பகுதிகளை அவர் எழுதியதாகத் தெரியவில்லை. மொழியின் ஆழ- அகலங்களை நுட்பமாக உணரத் தெரிந்தவர் ஜெயகாந்தன்." இது வண்ண நிலவன் கருத்தாகும். சிட்டி சிவபாதசுந்தரம் ஜெயகாந்தனின் மொழிநடை பற்றி இப்படி சொல்கிறார். "ஜெயகாந்தன் நடை அடித்துப் பேசும் நடை. ஆனால், அதிலே ஓர் இனிமை இருக்கிறது. இசையிலே ஒன்றிய தாள கதியைப் போன்ற இனிமை. மிக வலுவாய் முடுக்கி விடப்பட்ட தந்தியில் வரும் நாதம் போல மிடுக்காய் செல்கிறது அவருடைய நடை. தந்தி அறுந்துவிடுமோ என்று நாம் அஞ்ச வேண்டியதில்லை. அறாத பேருறுதி அதற்கு இருக்கிறது."

ஜெயகாந்தனின் இலக்கிய மொழி பற்றி விமர்சனங்கள் இருந்த போதிலும், அவரது நடை கருத்தாழம் மிக்கது; விறுவிறுப்பானது; வேகமானது; கவர்ச்சியான உணர்ச்சித் துடிப்புள்ள தம் நடையின் மூலம், அவர் வாழ்வின் அவஸ்தைகளை - முக்கியமாக அவலங்களை மனத்தில் பதியும் முறையிலே சித்திரித்துள்ளார். அதாவது, இவருடைய நடை, படிப்பவரிடத்து அவர் ஏற்படுத்த விரும்பிய உணர்வை ஏற்படுத்தி விடுகின்றது. ஜெயகாந்தன் நடை உரத்துப் பேசும் நடை. ஆனாலும், அதில் ஓர் இனிமை இருக்கிறது. ஜெயகாந்தன் பலரும் பயன்படுத்தத் தயங்கும் சொற்களைத் தம் நடையின் ஊடே அங்கங்கே எடுத்தாண்டுள்ளார். அவர், பல இடங்களில் பேச்சுத் தமிழை எடுத்தாண்டுள்ளார். அதைப் பற்றி அவர் கூறும் போது, "பிறந்த குழந்தையின் உயிர்தான் சுத்தம்" உடம்பு அல்ல. அதுமாதிரி என்னிடம் பிறக்கிற கதைகள் இலக்கியச் சுத்தம் உடையவை. மொழிச் சுத்தம் உடையவை அல்ல. என் கதைகள் நஞ்சுக் கொடியோடு, நாற்ற நீரோடு, உதிரக் காட்சியோடு, உரத்த குரலுடன் பிறக்க வேண்டும் என்று நான் எண்ணுகிறேன்" என்று கூறியுள்ளார்.

ஜெயகாந்தன் கையாளும் தொடர்கள் மிக நீண்டவை. அந்த நீண்ட தொடர்கள் சொல்லப்படும் செய்திகளுக்கு ஒரு செறிவையும், குவிமையத்தையும் கொடுத்து வாசகர்களைக் குறிப்பிட்ட நோக்கு நிலைக்கு இழுத்துச் செல்ல உதவுகின்றன. ஜெயகாந்தன் நடையின் மற்றொரு சிறப்பு தர்க்க வாத முறையாகும். காரண காரிய முறைப்படி அமைந்த வேகமான விவாதமும், இடையிடையே பொறி பறப்பது போன்ற சிந்தனைகளும், புதுமையாகப் புகுத்தப்பட்ட சொற்பிரயோகமும் "இது ஒரு தனி நடை" எனப் பிரகடனப் படுத்துகின்றன.

ஜெயகாந்தனின் மிகப்பெரும் பலம் அவரது உரை நடை. தமிழில் மிகச்சிறப்பான உரைநடைக்கு உதாரணமாக அவரைச் சுட்டிக்காட்ட முடியும். அலங்காரமற்ற, தெளிவான, சீரான மொழி அவருக்கு. தனித்துவமான நடை என்ற பெயரில் தப்பும் தவறுமாக எழுதும் இன்றைய இளம் எழுத்தாளர்கள் ஜெயகாந்தன் சொல்வதைக் கவனிக்க வேண்டும்: "இலக் கணத்தை மீறியும், இலக்கணத்துக்குப் புறம்பாகவும் நவீனத் தமிழ் இலக்கியம் படைக்கிறவர்கள் எழுதுவதிலே தவறில்லை என்கிற கொள்கை உடையவன் நான். ஆனால் அந்த இலக் கணத்தை மாற்றுகிற காரியமும், இலக்கணத்தை உடைக்கிற செயலும் இலக்கணம் அறியாத பலவீனத்தி லிருந்து எழுந்து அமைதல் கூடாது. பிழையெனத் தெரியாமல் செய்கிற பிழை களையெல்லாம் திருத்திக் கொள்கிற முறைமையை மறுத்து, அதுவே சரியென்று ஆள் சேர்த்துக் கொண்டு நிலைநிறுத்தும் பேதைமையைப் படைப்பாளியின் சுதந்திரம் என்று வளர்த்துவிடலாகாது" (ஜி.குப்புசாமி; காலச்சுவடு; மே 2015).


"யுகசந்தி" என்ற படைப்பை சரளமான மணிப்பிர வாள உரைநடையில் ஜெயகாந்தன் எழுதியுள்ளார். சிறியதும் பெரியதுமான வாக்கிய அமைப்புகள் வசீகரமாய் அமைந் துள்ளன. பிராமணக்குடும்ப பின்னணிக் கொண்ட உரை யாடல்கள் உயிர் துடிப்புடன் வெளிப்படுகின்றன. உதாரணத்துக்கு சில உரையாடல்கள்:

"பாவம். அசந்து தூங்கி கொண்டிருந்தே.... இன்னும் செத்தே படுத்திண்டிறேன்..."

"அவ செத்துட்டா...தலையெ முழுகிட வேண்டியது தான்"

"அடி, பாவி மகளே... என் தலையிலே தீயை வெச்சுட்டியேடி"

உள்ளுறைந்து காணப்படும் பொருண்மை, கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குத் துணையாய் நின்ற உவமை, உருவகங்கள் சிறப்பான சொல்லாட்சி முதலாவை இணைந்து இந்த உரைப்படைப்பினை உயிர்புடையதாக ஆக்கியுள்ளன.



(அ) மௌனமாய் பெருகி வந்த வாழ்வின் சுழிப்பிலும், பின் திடீரென வறண்ட பாலையாய் மாறிப்போன வாழ்க்கை வெறுப்பிலும் பொறுமையாய் நடந்து பழகியவளை இந்த வெயிலும் மழையும் என்ன செய்யும்?

(ஆ) "யந்திரங்களைத் தவிர எதையுமே நம்பாத இவ்விருபதாம் நூற்றாண்டில்"

(இ) கௌரிப்பாட்டி தனது இறந்த காலத்தின் நிகழ்காலப் பிரதிநிதியெனத் தன்னையே அவளில் கண்டாள்.

**இவை 'யுகசந்தி' சிறுகதையின் சிறந்த சொல்லாட்சிக்கான உதாரணங்களாகும்.**

ஊரெல்லாம் பிளேக்நோய் பரவிக் கிடக்கும் போது வீட்டில் ஒரு எலி செத்துவிழக் கண்டவர்கள் போல, நாடகப் பூச்சைக் கலைப்பது போல, விளக்கெண்ணை குடிப்பது போல, வாகாய்முளைத்த பெருங்குடைபோல், பவளம் போன்ற மச்சம், மாயம் போல விடிவு முதலான உவமைகளும் வறண்ட பாலையாய் மாறிப்போன வாழ்க்கை, வாழ்க்கை நெருப்பு முதலான உருவகங்களும், தலையிலே தீயை வச்சுட்டியேடி போன்ற மரபுத்தொடர்களும் கதைக்குரிய மொழியை அழகுபடுத்தி கருத்தை தெளிவுபடுத்துகின்றன.

"யுகசந்தி"யின் உரையாடல்கள் மிகவும் யதார்த்த மாகவும், தர்க்கரீதியில் நியாயமானதாகவும் அமைந் துள்ளமை கண்கூடு. சிறுகதையில் எழுதப்படும் மொழி, எழுத்தின் வழிதோன்றி எழுத்துக்கு அப்பால் நிற்கும் உணர்வு களைத் தோற்றுவித்தல் வேண்டும் என்பார்கள்.

இந்த உணர்வினை "யுகசந்தி" தோற்று விக்கின்றதா?

**6. முடிவுரை**

ஜெயகாந்தன் சிறுகதைகளில் "முரண்" என்ற உத்தி பரவலாகக் காணப்படுகிறது. அதாவது, எந்த ஒரு வாழ்வியல் பிரச்சினையையும் உடன்பாடு, எதிர்மறை என்ற இரு நோக்குகளில் தம் கதைகள் மூலம் பார்த்துள்ளார் ஜெயகாந்தன். ஒருவருக்கு உடன்பாடாக இருக்கும் ஒன்று இன்னொருவர் வாழ்க்கைக்குப் பொருந்தாது போய்விடும். அவரவருக்கு எந்தக் கருத்தோட்டம் ஏற்புடையதோ, அதன்படி வாழ்வது அவரவர்களுக்குப் பொருந்தும். அதை வற்புறுத்தச் சமுதாயத்தில் யாருக்கும் உரிமை இல்லை. ஒருமித்த கண்ணோட்டம் என்பதை மனிதாமனங்களிடையே காணுதல் இயலாது என்பதைத் தம் சில படைப்புகளின் மூலம் சுட்டிக் காட்டியுள்ளார் ஜெயகாந்தன். இதற்கு "யுகசந்தி" என்ற சிறுகதை சான்றாகின்றது.

சமூகத்தில் எந்த நிலையில் இருந்தபோதிலும் பெண்கள் சிந்திக்கத் தெரிந்தவர்கள் என்பதைத் தனது படைப்புகள் மூலம், அழுத்தமாகப் பதிவு செய்தவர் ஜெய காந்தன். அவரது கதைகளில் மேல்தட்டுப் பெண்களை விடவும், நடுத்தர மற்றும் விளிம்பு நிலைப் பெண்களே மிகுதி யாக இடம் பெற்றுள்ளனர். "யுகசந்தி" கௌரி, கீதா மாதிரி!

"யுகசந்தி" ஜனரஞ்சக ரீதியில் வரவேற்பினை பெற்ற சிறுகதையாகும். தொனியும், குறிப்புணர்த்தலும், சிக்கனமும் சிறுகதைக்கு இன்றியமையாத குணங்கள் ஆகும். ஜனரஞ்சகத்தின் கூறுகள் இவற்றிற்கு நேர் எதிரானவை. "யுகசந்தி" புஷ்டியான கதையாக அமையாமைக்கு இதுவே காரணமாகும். இச்சிறுகதையில், அழகியல்/ கலை நுட்பம் நோய்த்தரும் வகையில் மெலிந்துப்போயுள்ளது. செயற்கைத் தனமே மேலோங்கியுள்ளது. "இன்றைய சூழலுக்கேற்ற உவமையைக் கையாள்வதானால், சிறுகதையை, அதிகபலம் உள்ளடக்கி வைக்கப்பெற்ற சிறு "கிறனெட்"டுக்கு ஒப்பிடலாம். அது "வெடிக்கும்" பொழுது ஆயிரம் சூரியரைக் கண்டது போன்ற ஒரு சத்திய தரிசனம், ஆன்மத் திகைப்பு/ குழைவு/ மீள்கண்டு பிடிப்பு ஏற்பட வேண்டும். சிறுகதை என்னும் இலக்கிய வடிவத்தின் தனித்துவமான அமிசம் என்று வலியுறுத்திக் கூறப்படுவது இதுவே." இது பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் ஆய்வுக்கணிப்பாகும்.

**ஜெயகாந்தனின் 'யுகசந்தி' சிறுகதையில் இந்த அமிசம் பொலிகிறதா?** ●

---

# சப்தம்

யாரோ நடப்பது போல்...
யாரோ சிரிப்பது போல்...
யாரோ அழுவது போல்...
யாரோ திறப்பது போல்...
யாருடைய குரலோ
கேட்டுக்கொண்டேயிருக்கிறது.

எழுந்து சென்றுவிட்டேன்
எவருமில்லை...
கண்களை மூடிவிட்டேன்
கேட்கிறது...
காதுகளை மூடிவிட்டேன்
கேட்கிறது...
ஜன்னலை இறுக்கிமூடி
கதவின் ஓட்டைவழி பார்க்கிறேன்
எவருமில்லை
சப்தம் மட்டும் கேட்கிறது .

யாரின் மீதான வெறுப்போ
யாரின் மீதான கோவமோ
யாரின் மீதான சாபமோ
யாரின் மீதான எள்ளலோ
கால்பரப்பி நடக்கும் சப்தமது.

தூஷணம் நாலுகூறி
நாற்புறமும் குருசிட்டு
செருப்புகளை காவல்
வைத்தபின்னும்
கேட்கவில்லை சப்தம்...
கேட்டுக்கொண்டேயிருக்கிறது...
அறைக்கு வெளியே
கிடக்கிறது காது
கழட்டி எறிந்த காதுகளில்
வெறியுடன் புணர்ந்து செல்கிறது
சப்தம்.

– மன்னார் அமுதன் –

க.சட்டநாதன்

# தீர்மானமாய்...

இரண்டு வருஷங்களுக்குப் பின்னர் அவளை அவன் மீளவும் கண்டான். அவனது உயிர்ப்பாக உயிர்மூச்சாக இருந்தவள், இருப்பவள் அவள். சதா சர்வ காலமும் அவளது நினைவில் தோய்ந்து கிடந்த அவனுக்கு வேறு நினைவுகள் எதுவும் இருந்ததாக தெரியவில்லை. அவளுக்கும் அப்படித்தான்.

அவள் முன்னைக்கு இப்பொழுது மிகவும் தளர்ச்சி அடைந்தவளாக இருந்தாள். தளதள என்று செம்பொன் நிறத்தில் இருந்த அவளது உடல் உலர்ந்து கருமை படர்ந்திருந்தது. அவளது அந்தக் கண்கள் மட்டும் ஒளி உமிழ்ந்தபடி, பெரிதாய் இருந்தன.


அவனைக் கண்டதும் கிட்டவாக வந்து, 'என்ன...?' என்பது போலப் பார்த்தாள்.

அவளது அழகிய கண்களைப் பார்த்தபடியே அவன் பேசினான்.

"கொழும்பில, இன்கம் ராக்ஸில இருந்து மாற்றலாகி வந்திட்டன். இனி யாழ்ப்பாணத் தோடதான். ராக்ஸ் ஒஃபிசர் இல்ல... பதவி உயர்வு. உதவி ஆணையாளர்.

"தெரியும்," கூறியவளது குரலில் லேசான மலர்ச்சி.

சயன்ஸ் அக்கடமியில் ஏ.எல். படித்த பொழுது ஏற்பட்ட அவர்களது நட்பும் தொடர்பும் - பத்து வருஷங்களுக்கு மேலாகியும்



தொடர்கிறது.

அவனது வலது கரத்தைத் தனது கைகளில் வாங்கிக் கொண்டவள், அவனைப் பார்த்துக் கேட்டாள்:

"நீங்க ஒரு சமயம்... இரண்டொரு வருஷத்துக்கு முன்னாலை எங்கட வீட்டுப்பக்கம் வந்தது ஞாபகமிருக்கா...?"

"இருக்கு. அதையெல்லாம் மறக்க முடியுமா...? உங்கட அம்மா சாதிப் பெருமை கொட்டிக் கொண்டது. 'சோளாவத்தைப் பொடியனா...? கோவியச் சோமன்ரை மகனா...?' எண்டு நாக்கு வளைச்சது எல்லாம் இப்ப நடந்தது போல இருக்குது."

"அவவுக்கு விசர்... அதையெல்லாம் மனசில போட்டு இப்பையும் குழம்ப வேணுமா...?"

அவளது உறுதியைக் குலைப்பது போல அவனது பதில் இருந்தது.

"விசரில்லை...அவவுக்குச் சரியான சாதித்தடிப்பு. தாவடிக் காரரிட்டை உள்ள இயல்பான மிதப்பு...!"

"ம்... அப்படி இல்லை..."

"இதென்ன சளப்பல்... உன்ரை அம்மான்ரை கதையளால... உன் மேல இருக்கிற பட்சம் கூடக் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைஞ்சு வடிஞ்சு போகப் பாக்குது. ஏ.எல். படிச்சகாலத்தில எங்களுக்கு இடையில இருந்தது காமமா இல்லைக் காதலா...? எண்ட குழப்பம் எனக்கு... அதை நான்

விடலைத்தனத்துக்குரிய இன்ஃபாச்சுவேஷனாகத்தான் நினைக்கிறன். கால நகர்வும் மன முதிர்ச்சியும் அதை முழுமையான காதலா இப்ப மாத்தியிருக்குது."

"காதலா...? இது... இந்தக் காதல் நிறைவேறுமா...?"

"நிறைவேறும்."

அவனது பதில் குளிர்ந்த சாரலாய் அவளில் இறங்கியது.

வாஞ்சையுடன், பிடித்த கரத்தை விடாதவளாய் அவனுடன் சேர்ந்து நடந்தாள். லிங்கம்ஸூக்குக் கிட்டவாக வந்ததும்:

"ஐஸ்கிறீம் சாப்பிடுவமா...?" என்றாள்.

குழந்தையின் குதூகலம் அவளது குரலில்.

லிங்கம்ஸில் படியேறியவர்கள், நட்சும் பழங்களும் போட்ட ஐஸ்கிறீம் சாப்பிட்டார்கள். ஐஸ்கிறீம் சாப்பிட்டானதும் ஒரு 'பக்கெற்' மிக்ஸர் வாங்கிக் கொண்டாள். எல்லாவற்றுக்கும் அவனே பணம் தந்தான்.

"அவசரம் ஏதும் இல்லையே...?" என்று அவன் கேட்டதும் - "இல்லை", என்று அவள் பதில் தந்தாள்.

"இப்ப நாலுமணி... ஐஞ்சு மணிக்கெல்லாம் நீ வீட்ட போகலாம். பஸ் ஸ்ராண்ட் வரை வந்து, நானே கச்சேரி பஸ்ஸில ஏத்தி விடுறன்"

சரி என்று கூறியவள், அவனோடு இணைந்து நடந்தாள். இருவருக்கும் எங்கே போவதென்று உத்தேசம் இருக்கவில்லை. அவன் தான் "நூல் நிலையத்துக்குப் போவம்... ரெவரன்ஸில இருந்து கதைக்கலாம்...!" என்றான்

"வேண்டாம்... சுப்பிரமணியம் பூங்கா நல்லம்."

அவளது விருப்பத்துக்கு அமைவாகச் சுப்பிரமணியம் பூங்காவை நோக்கி இருவரும் நடந்தார்கள்.

எதுவும் பேசாமல் மௌனமாக நடந்த அவளைப் பார்த்து அவன் கேட்டான்:

"வசு... ஏதென் பேசுமன்...!"

"எதைப் பேசுறது... எதை விடுறது... நாம ஏமாந்து போகாமல் இருந்தால் போதும்... ஊர்ப்பட்ட வேம்பான் துணை இருக்க வேணும்..."

"இப்பயும் ஊர்ப்பக்கம் போறனீரா...?"

"சித்திரைப் பூரணைக்கு மட்டும் பட்ட வேம்படி வைரவரிட்டை போறதுண்டு..."

"கடவுள் நம்பிக்கை உன்னைக் காப்பாத்தும்."

"உங்களையும் தான்!"

பூங்காவின் உள்ளாகச் சென்றவர்கள் ஆள்நடமாட்டம் குறைவான, தென்மேற்கு மூலையில், பூஞ்செடிகள் மறைப்புத்தர, நெருங்கி உட்கார்ந்து கொண்டார்கள்.

அவளது வெதவெதப்பான உடல், அவளைத் தீண்டுவதற்கு அவனைத் தூண்டியது. மெய்மறந்த நிலையில் இருந்தவன், அவளை அணைத்துக் கொண்டான். அந்த அணைப்பின் சுகத்தில் அவனது கரங்களில் - கிறங்கிக் கிடந்த வசு அவனைப் பார்த்தபடி சொன்னாள்:

"அம்மா முன்னை மாதிரி இப்ப இல்ல... அவளில கொஞ்சம் பட்டும்படாத போக்குத் தெரியுது. தன்ரை கட்டுப் பெட்டித் தனத்தைக் கொஞ்சம் தளர்த்தின மாதிரியும் இருக்கு..."

"அட அவவின்ரை சாதிச் சள்ளையில தளர்ச்சியா...?"

"அப்படி எல்லாம் பெரிசாச் சொல்லேலாது; ஆனாலும் ஒரு மாற்றம் அவவில தெரியுது. எங்கட பெரியம்மான்ரை மகன் சிவியா தெருப்பக்கம் ஒரு பெட்டையைக் காதலிச்சுக்கலியாணம் முடிச்சவன். புறுபுறுத்தாலும் - அந்தக் கலியாணத்துக்கு என்னை அவ போகச் சொன்னவ... நானும் போனனான்...!"

"அவவின்ரை இந்த மாற்றம் சந்தோஷமாய்த்தான் இருக்குது..."

"ஆனால் நமக்கு ஒண்டெண்டு வரைக்க, மனிசி நாண்டு கொண்டு நிக்கிற போக்கில மாற்றமில்லை..."

"ஓம் ஓம் அவவிட தடிப்பும் இறுக்கமும் எனக்குத் தெரியும்."

அவளது காதோரமாகக் குனிந்தவன், அவள் சற்றுத் தடுமாறுவதைப் பார்த்துச் சிரித்தபடி அவளது கன்னத்தில் முத்தமிட்டான்.

"சீ... இதெல்லாம் இப்பவே வேணுமா...?" என்று கண்களைச் சுருக்கிச் சிரித்தாள். அவளது குரலில் ஒரு செல்லக் கெஞ்சல்.

அதில் அள்ளுண்ட அவன், அவளது நீண்ட கழுத்தோரம் - கைகள் படர அவளை இழுத்து வைத்து கண்களிலும் உதடுகளிலும் மென்மையாக முத்தமிட்டான்.

"இதென்ன குறும்பு... கள்ளத்தனம்", என்று குலுங்கியவள் எழுந்து கொண்டாள்.

இருவரும் இணைந்தபடி வெளியே நடந்து வந்தார்கள்.

வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக வந்த பொழுது, பஸ் வந்தது. அவசர அவசரமாக அவனைப் பார்த்து, "ஒருக்கால் வீட்டுப் பக்கம் வாருங்க... வந்து அம்மாவைப் பாருங்க..." என்றவள், அவன் "ம்..." சொல்லுவதற்கு முன்பாக பஸ்ஸில் தொற்றிக் கொண்டாள்.

பஸ் போவதையே பார்த்தபடி அவன் அங்கு நின்றான். அவனது மனசில் லேசான சங்கடம். பரபரப்பு.

*

கைத்தொலைபேசியில வசுமதியுடன் தொடர்பு கொண்ட சபேசன்; சனிக்கிழமை காலை ஒன்பது மணியளவில் அவளது வீட்டுப் பக்கம் வருவது பற்றிக் கூறினாள். கூறியது போல அங்கு வரவும் செய்தான்.

வசுமதியின் வீட்டு முன் கதவு பூட்டிக்கிடந்தது. அழைப்பு மணியை அழுத்தினான். கதவு திறந்து கொண்டது. வசுமதிதான் முன்னே வந்தாள். அவளது முகம் கருமை கொள்ள கண்கள் சிவந்த படி கிடந்தன.

"என்ன இது அழுதனியா... ? எதுக்கு...?"

குழம்பிய நிலையில், படியில் காலடி எடுத்து வைத்த போது அந்த உவப்பில்லாத பேரோசை அவனுக்குக் கேட்டது.

"ஆரது சோமன்ரை மகனே...? சொன்னது போல வந்திட்டான் போல...!"

கேட்டபடி வசுவின் அம்மா பர்வதம் முன்னால் வந்தாள்.

வந்தவள், சபேசனை "வா" என்று கூட அழைக்காமல் வாசலை அடைத்தபடி நின்றாள். நரை திரையுடன் காணப்பட்ட அவள் ஒட்டி உலர்ந்து வத்தலாய் இருந்தாள்.

வசுமதிதான் அவனை உள்ளே அழைத்து வந்து, செற்றியில் உட்கார வைத்தாள்.

இருப்புக் கொள்ளாமல் தவித்த அவனைப் பார்த்து அம்மா கேட்டாள்:

"இப்ப... இஞ்ச யாழ்ப்பாணத்தில வேலை எண்டு வசு சொன்னவ. உங்க... இன்கம்ராக்ஸில என்ன வேலை... பியோனா...?"

அவளது குரலில் இளக்காரம்.

"இல்ல... உதவி ஆணையாளராக இருக்கிறன்..."

"சாதி கெட்டதுகளெல்லாம் இப்ப... நல்ல உத்தியோகத்தில தான் இருக்குதுகள்...! எங்கட ஊர் விதானைகூட சாதியில அப்படிஇப்படித்தான். ஆனால் நல்ல மரியாதையான பொடியன்."

தொடர்ந்து பேசியவள்:

"தம்பி வந்த விஷயம் என்ன...? வசுவைப் பார்க்கவா... இல்ல என்னைப் பார்க்கவா...?"

"உங்களைப் பார்க்கத்தான். உங்களைப் பார்த்து ஒரு விஷயம் கேக்க வேணும் அது தான்..."

"என்ன விஷயம் பயப்பிடாமல் சொல்லும்."

"இல்ல... வந்து... வசுவுக்கு என்னில நல்ல விருப்பம்... அதுதான்..."

"என்ன பிசத்தல... பத்து வருஷத்துக்கு முந்தி, ஏ.எல் படிக்கேக்கை தட்டுமறிச்சுத் தடுமாறின தெல்லாம் எனக்குத் தெரியும். அந்தக் கூத்தை யெல்லாம் திரும்பவும் என்னாலை பார்க்கேலாது. அப்ப சொன்னதத்தான் இப்பயும் நான் சொல்லேலும். இது வேண்டாமடாப்பா...! கிரிசை கெட்ட கலியாணமாய்ப் போயிடும். சபை சந்தியில எங்களை மதிக்க மாட்டினம். நல்லது கெட்டதிலையும் நாம கலந்து கொள்ளேலாது. கை நனைக்க முடியாது."

"சரி... சரி அன்ரி...! வசு பாவம் - மனசுடைஞ்சு போவா எண்டதால தான் இவ்வளவு தூரம் வந்தனான். கதைச்சனான். அவவுக்கு என்னில சரியான விருப்பம். சாய்வு. அந்தச் சாய்வைத் தடுக்க உங்களாலை முடியுமா...?முடியாது. அவ உங்களுக்கு இசைவா, உங்கடை சொல் கேட்டு நடந்து கொள்ளிற தெண்டா நடந்து கொள்ளட்டும். நான் குறுக்க வரமாட்டான்."

கூறியவன் எழுந்து, கிடுகிடுவென நடந்து வெளியே வந்து, கண்டி வீதியில் ஏறினான்.

கண்களில் நீர் திரையிட, அவன் போவதையே வசுமதி ஆதுரத்துடன் பார்த்தபடி நின்றாள்.

*

இறுகிய மனசோடு இருந்த வசுமதி, பேச்சிழந்து ஒடுங்கிப்போனவளாய், அவளது தாயரைப் பார்த்தாள். குரோத உணர்வின் பளபளப்பு அவளது கண்களில்.

"அந்த சாதி கெட்ட தடியனோட ஓடுற தெண்டால் ஓடிப்போ...! உன்ரை அமர் அடங்க அது தான் சரியான வழி. என்னைப் பார்த்துக்கொள்ள, கொண்டு நடத்த எனக்குத் தெரியும்."

"இது பொய்... சுத்தப் பொய். உனக்கு என்னை விடேலாது. விட்டிட்டு இருக்கேலாது. கலியாண வாசமே இல்லாமல், முதிர்கன்னியா... வதங்கி வத்தலாய்ப் போறாளே இந்தப் பெட்டை எண்ட இரக்கம் கூட உனக்கு இல்லை. அதோட என்ரை வங்கி வேலை கட்டோட உனக்குப் பிடிக்காட்டிலும் சுளையா நான் எடுக்கிற சம்பளம். அதெல்லாம் உனக்கு வேணும்; என்ரை சுக துக்கங்களுக்கு மேலாலை..."

"ஓம் ஓம் நல்ல வள்ளிசாய்க் கதைக்கிறை..."

"உலகத்து நோயளை எல்லாம் எந்த நோஞ்சான் உடம்பில தேக்கி வைச்சு அல்லாடிற உன்னைப் பூப்போல ஏந்தி ஏந்திப் பார்க்கிற எனக்கு, இதுவும் வேணும் இன்னமும் வேணும்."

மனம் வெதும்பிய வசுமதியின் சொற்கள் சற்றுக் கடுமையாகவே வெளிப்பட்டன.

"உன்ரை இந்தச் சுயநலமும்-சுய இழப்பு எதுவும் வந்து விடக்கூடாதே என்ற பதகளிப்பும் தான்-சாதியின்ரை பேரால... சபேசனை என்னிடம் இருந்து தூர விலத்தி வைச்சிருக்கு..."

"ம்... ம்... இதையும் சொல்லு, இன்னமும் சொல்லு..." வசுவின் பகைமை உணர்வை அவளது முகக்குறிப்பில் கண்டு கொண்ட பர்வதம் அவளைப் பார்த்து மேலும் சொன்னாள்:

"நாம தாவடிக்காரர்... சுண்டி எடுத்த சாதி வெள்ளாளர். அந்தப்பெருமையை நீ மறக்கப்படாது... உன்ரை பெரிய மாமா, சின்ன மாமா, அவையட பிள்ளையளெண்டு எல்லாரும் வெளிநாட்டில இருந் தாலும் சாதி சனத்தோடதான் அவையின்ர கொள்வினை கொடுப்பினை எல்லாம் இருக்குது."

பேசாமல் மௌனியாக இருந்த வசுமதிக்கு பர்வதத்தின் சீண்டல் மிகுந்த கோபத்தை கிளறியது.

"ஓம்... ஓம் அவையின்ரை வண்டவாளம் எல்லாம் எனக்கு நல்லாத் தெரியும். பெரிய மாமான்ரை மூத்த மகன் ஒரு சுவிஸ்காரியையும் இன்னொருத்தன் இந்தியாக்காரியையும் சின்ன மாமான்ரை மகள் ரேவதி சபேசன்ரை உறவுக்காரப் பெடியனையும் சடங்கு செய்திருக்கினை"

"இல்ல... அப்படி இருக்காது. இதை யெல்லாம் உனக்கு ஆர் சொன்னது... எங்களுக்கு அவையளோட கடிதத்தொடர்பு கூட இல்லையே ... அப்படியிருக்கேக்கை...!"

"எங்கட இந்தப் பீத்தல் வங்கிச மகிமை எல்லாம் கடல் கடந்து, காத்தோட வந்த செய்திதான். கொஞ்சம் கொஞ்சம் சபேசனும் சொன்னவர்."

"அதுக்காக எங்கட சவங்காவியளின்ரை சாதியில நாம கரைஞ்சு போகேலுமா...? அந்த வடுகப்பயலின்ரை சங்காந்தமே இனி உனக்கு வேண்டாம் பிள்ளை."

"வடுகனோ...? சபேசனை அப்படிச் சொல்லாத அம்மா. வக்கணையான உன்ரை பேச்சுக்கு நீ பெரிய அளவில விலை கொடுக்கப் போறை... பார்த்துக் கொண்டேயிரு..."

குரல் உயர்த்தி இரைந்த வசுமதி, தனது அறையில் நுழைந்து, கதவை இழுத்துச் சாத்திக் கொண்டாள்.

வசுவின் செயல் பர்வதத்துக்கு முகத்தில் உரப்பாக அறைந்தது போலிருந்தது. அதோடு லேசான ஒரு பயமும் படபடப்பும் அவளுள் படர்ந்தது.

பதைப்புடன், தனது அறையை நோக்கிச் சென்ற பர்வதம் - அவளது மருந்துகள் இருக்கும் சிறிய அலுமாரிக்குக் கிட்டவாக வந்தாள். அலுமாரியின் இழுப்புலாச்சியை இழுத்துப் பிரெஸர், கொலஸ்ரோல், நீர் இழிவு, மூட்டுவலி ஆகியவற்றுக்கான வில்லை களை எடுத்து வாயினுள் போட்டு, தண்ணீர் ஊற்றிக் கொண்டாள். எப்பொழுதும் தூக்க மாத்திரைகளை லாச்சியின் அடிப்பகுதியில் வைக்கும் அவள், லாச்சியைத் துளாவினாள். வில்லைகள் அங்கு இருக்க வில்லை. பதட்டமடைந்த பர்வதம்: "இவள்... இவள் வசு...விசர்த்தனமாய் தொகையாயிருந்த அந்தத் தூக்க மாத்திரைகளை எடுத்து விழுங்கித் தன்னைத் தொலைத்துக் கொள்ளப் போறாளா...?

மன உளைச்சலில் மிதந்தவள், இயல்பு தப்பிய வேகத்துடன் வெளியே வந்தவள், பூட்டப்பட்டிருந்த வசுவின் அறையைப்படபட எனப் பலங்கொண்ட மட்டும் தட்டினாள்.

அயர்ந்து போய்க்கிடந்த வசுமதி, விழித்தெழுந்து கேட்டாள்:

"என்ன... என்ன வேணும் உனக்கு...? குளிக் கிறதுக்கு வெந்நீர் போட்டிருக்கு. போ... போய்க்குளி. குளிச்சிட்டு, குயாக்கர் ஓட்ஸ் காய்ச்சி வைச்சிருக்கிறன், அதை எடுத்து மண்டு!"

வசுவின் குரலில் கோபம் இருந்தாலும் அவள் ஏதும் இசக்குப் பிசக்காய்ச் செய்யவில்லை என்று அறிந்ததும் அவள் மனம் சற்று ஆறுதல் அடைந்தது.

குளித்த பர்வதம் - காலை உணவை முடித்துக் கொண்டு, கட்டிலில் சரிந்தாள். நீண்டநேரம் தூங்கி யிருக்க வேண்டும். திடீரென விழித்துக் கொண்டவள், சுவர்க்கடிகாரத்தைப் பார்த்தாள். பிற்பகல் ஒரு மணிக்கு மேலாகி இருந்தது. திடுக்கிட்டவள், வசுவின் அறையை எட்டிப் பார்த்தாள். அங்கு ஆள் சிலமனில்லை. அடுப்படிப்பக்கத்திலும் அவளைக் காணவில்லை. பரபரப்படைந்தவள்; வீடு, வளவு என்று எல்லா இடங்களிலும் தேடிப்பார்த்தாள். வசுவின் மூச்சுக் காற்றுப் படிந்ததற்கான அடையாளம் எங்கும் இல்லை.

"தங்கச்சி திலகத்திடம் போயிருப்பாளா...? அல்லது அவளது சிநேகிதப்பெட்டையள் யாரிட மாவது...? சரணி, லாவண்யா, சசி..." குழம்பியவள், நடுங்கியபடி திலகத்தைத் தொலைபேசியில் அழைத்தாள். அவளிடம் வசுமதி பற்றி விசாரித்தாள்.

"இல்ல... இஞ்ச அவள் வரயில்லை..." என்று கூறிய திலகம் - தமக்கையின் குரலில் விரவிக்கிடந்த தடுமாற்றத்தையும் துயரத்தையும் உணர்ந்தவளாய்:

"நான் அங்க வாறன்... வந்து நடக்கிறதை யோசிப்பம்..."

திலகத்தின் குரலிலும் பீதியின் அழுத்தமான கீறல். வழுவழுப்பு.

தொலைபேசியின் ரிஸீவரை உரிய இடத்தில் வைத்த பர்வதம், கொந்தளித்துக் கிடந்த தனது மனதைத் தணித்துக்கொள்ள, கைகளை மேலும் கீழுமாக வீசிப் பலதடவைகள் நடந்தாள். அந்த நடை அவளை ஓரளவு சமனப்படுத்தியது.

"மதியம் போடிற பிரஸர் குளிசைகளைப் போடேல்லையே" என்ற நினைவு தீடிரென அவளுக்கு வர, அறைக்குச் சென்று லொசாற்றின் வில்லைகளை எடுத்தாள்; அப்போது தூக்க மாத்திரைகள் அடங்கிய சரை கூடவே வந்தது. "அட வசு தூக்க மாத்திரைகளை எடுக்கேல்லை...! என்ரை பெட்டை கோவக்காரி எண்டாலும் மிகவும் நிதானம் தப்பாதவள்."

மனசு முட்டமுட்ட வசுமதியின் நினைவு களோடு இருந்த பர்வதத்திற்கு, அவளது துயரத்தைப் பகிர்ந்து கொள்ள, ஆராவது வேணும் போல இருந்தது.

தங்கை திலகத்தின் வருகைக்காக அவள் அப்பொழுது ஆவலுடன் காத்திருந்தாள்.

*

திலகம் விதவை. வாடகை வீட்டில்தான் இருந்தாள்.

நோயாளியான பர்வதம் வசுமதியைப் பிரிந்து தனியாகத் தவிப்பது அவளுக்கு அதிக துயரத்தைத் தந்தது. வாடகை வீட்டை விட்டு வந்து, தமக்கையுடன் அவள் நிரந்தரமாகத் தங்கினாள்.

திலகத்தின்அந்தச் செயல் பர்வதத்துக்கு வரப் பிரசாதமாக இருந்தது. ஆனாலும், வசுவை அவளால் முழுமையாக மறக்க முடியவில்லை. வீட்டின் ஓரமாக ஒதுங்கி மகளை நினைத்துக் குமுறிக்குமுறி அழுதாள். அவளது இதயத்தின் அடியாளத்தில் தங்கிவிட்ட அந்தத்துயரம் அவளைப்பாடாய் படுத்தியது.

அந்தச் சமயங்களில் அவள் வசுவின் அறைவரை வந்து, அவள் தொட்டளைந்த பொருட்களைஎல்லாம் தானும் தொட்டுத் தொட்டுப் பார்த்து பரவசமுற்றாள். அது அவளுக்கு ஆறுதல் தருவதாய் இருந்தது.

அவள் பாவித்த தேநீர்க் கோப்பை, நீர் ஜாடி, உடுத்திய இரவு உடைகள், அவள் அடிக்கடி ஆசை யுடன் அணிந்து கொள்ளும் அடர் நீல வண்ணச் சேலை, ஒய்வாக இருக்கும் வேளைகளில் அவள் புரட்டிப்

பார்க்கும் தி.ஜானகிராமனின் நாவல்கள், தந்தத்தாலான மீராவின் அழகிய பொம்மை என்று எதையும் விட்டு வைக்காது தனது அறைக்கு எடுத்து வந்து அவற்றை ஆசையுடன் பாவிப்பதிலும் அணிந்து கொள்வதிலும் மகிழ்ச்சி அடைந்தாள். அவள் பாவித்த "இன்ரிமேற்" பெர்ஃபியூமையும் விட்டு வைக்கவில்லை. அதை எடுத்து வந்து தனக்காக வைத்துக் கொண்டாள். அவளது இந்தச் செய்கை வசுவடனான தனது இருப்பின் ஒருவித தப்பித்தல் உணர்வையே அவளுக்குத் தந்தது.

சித்தம் கலங்கிய பைத்தியக்காரி மாதிரி நடந்து கொள்ளும் தமக்கையைப் பார்த்துக் கொண்ட திலகம் ஒருசமயம் அவளைப் பார்த்துக் கேட்டாள்:

"இவ்வளவ மறுகி மறுகி கனிந்து கரைந்து அவளை நினைக்கும் நீ அவள் விரும்பிற மாதிரி நடக்கலாமே...! கனடாவில் இருக்கிற, சபேசன்ரை அண்ணற்ரை மகன் உன்ரை மச்சாளின்ரை பெட்டையை முடிக்கலாம் என்டால், சபேசனை இந்தப் பெட்டை வசு சடங்கு முடிச்சால் குடி முழுகிப் போயிடுமா...? உன்ரை உந்தச் சாதிச் செடிலால எல்லாமே தலைகீழாய்ப் போச்சு..."

திலகம் பேசியதன் உண்மை பர்வதத்தின் உள் மனதில் உறைத்தது.


"எனக்கே எனக்கான இந்தச் சொந்தம். பார்த்துப் பார்த்துப்பட்டுப்போல வளர்த்த என்ரை செல்லம். இந்த அருமை மகளுக்கு நான் இழைத்த கொடுமை கடுமையானது தான். பொல்லாத இந்த உலகத்தில் அவள் வடுபடாமல் வாழத்தானே நான் இந்தப்பாடெல்லாம் படிறன். அந்தக் குடிகார மட்டி, அவளின்ரை அப்பனிட்டை நான் மனசாலையும் உடலாலையும் காயப்பட்டதுபோல என்ரை... என்ரை பிள்ளையும் லோல் படவேணுமா...? கூடாது."

" இந்த ஆண்தனம், அதன் வக்கிரம் - அதில் கருகி வதைப்படுதல் எண்டு என்ரை பிள்ளைக்கு எதுவும் வேண்டாம் எண்டுதான் நான் அப்படி நடந்து கொண்டன். அடி ஊறலாய் என்னட்டை சாதி உணர்வு இருந்தாலும் அதைப் பெரிசு படுத்திப் பூச்சாண்டி காட்டினதெல்லாம் மனசார நினைச்சுச் செய்ததா...? இல்ல... இல்லத் திலகா! என்னவிலை கொடுத்தெண்டாலும் என்ரை பிள்ளையைக் காப்பாத்த வேணும் எண்ட வெறியால தான்! அது மட்டுமில்ல என்ரை கள்ளத்தனமும் கொஞ்சம் இருக்கத்தான் செய்யுது. என்ரை சொத்து துணை எல்லாம் அவள் தான். அவளை ஆருக்கும் விட்டுக் கொடுக்க என்னாலை ஏலாது..."

பனித்த கண்களைத் துடைத்துக் கொண்ட பர்வதம் - மெல்லிய முறுவலுடன் தன்னையே பார்த்த படி இருந்த திலகத்தை, நேருக்கு நேர் பார்க்க விரும்பாதவளாய்த் தனது முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

*

வீட்டை விட்டுப் போன வசுமதி எங்கே போனாள். என்ன செய்கிறாள் என்பது சகோதரிக்குத்



தெரியாமலே இருந்தது.

பர்வதத்தின் யோசனையின் பேரில், வசு வேலை பார்க்கும் ஸ்ரான்லிவீதி மக்கள் வங்கிக் கிளைக்குச் சென்ற திலகம், வசுமதி பற்றி அங்கு விசாரித்தாள்.

அவளது விசாரிப்புக்கு அங்கு பணியாற்றியவர்கள் தந்த பதில் அவளுக்குத் திருப்தி தருவதாயில்லை:

"அவ ஒரு மாத லீவில... சுகவீன லீவில நிக்கிறா...!" என்று சொன்னார்கள். திலகம் அதை நம்பவில்லை. நம்பிக்கை இழந்த திலகம் சபேசனைச் சந்தித்து விபரம் அறியவே அதிக ஆர்வம் கொண்டாள்.

சபேசனை இறைவரித்திணைக்களத்தில்தான் அவள் சந்தித்தாள்.

சபேசன் எதுவித தடங்கலும் இல்லாமல் கந்தோருக்கு வந்து போவது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. எதற்கும் அவனிடமே விசாரித்து விடுவதென்ற உத்தேசத்துடன் வசுவைக் பற்றி அவள் அவனிடம் கேட்டாள்:

"அப்படியா... எனக்கு எதுவும் தெரியாது. தாயுடன் சரியான பிடுங்கலோ...? வீட்டைவிட்டு வெளியேறிற்றாளா...? பர்வதம் மாமி கொஞ்சம் அநுசரிச்சுப் போயிருக்கலாம். சாதி பற்றிப் பாராயணம் செய்து அவ கெந்தி அடிச்சதுக்கு அவ இப்ப கொடுத்திருக்கிற விலை அதிகம் தான்!"

"இல்ல... அவ இப்ப ஓரளவு அடக்கி வாசிக்கிற மாதிரித்தான் தெரியுது. வசுபோனதில இருந்து சரியாச் சாப்பிடறதில்ல. மருந்து மாத்திரையும் ஒழுங்கில்லை. நல்லா ஆடிப்போன...! வசு பற்றி எனக்கோ இல்ல அவளுக்கோ ஏதும் தெரியேல்லைத் தம்பி...! உங்களுக்கு ஏதென் தெரிஞ்சால் என்ரை கையடக்கத் தொலைபேசியில தொடர்பு கொண்டு கதையுங்க ராசா...!"

கூறிய திலகம், தனது தொலைபேசி எண்ணை அவனுக்குத் தந்தாள்.

தொலைபேசி எண்ணைப் பெற்றுக் கொண்ட சபேசன் கொடுப்பிற்குள் குமிழிடும் சிரிப்புடன் அவளுக்கு விடை தந்தான்.

அந்தச் சிரிப்பு அவளுக்கு ஏதேதோ

சொல்லியது. அதைக் கண்டு கொள்ளாதவளாகத் திலகம் அவனைவிட்டு விலகிச் சென்றாள்.

ஏறக்குறைய ஒரு மாத காலத்துக்குப் பின்னர் தான் பர்வதத்துக்கும் தங்கை திலகத்துக்கும் அச் செய்தி கசிந்தது.

"ஸ்பெசல் நொத்தீஸ்" போட்டு, சபேசனும் வசுமதியும் தமது நண்பர்களும் உடனிருக்கப் பதிவுத் திருமணம் செய்து கொண்டார்களாம். திருமணம் கரவெட்டி விவாக பதிவுகாரர்கந்தோரில் நடந்ததாம். வசுமதியின் நெருங்கிய தோழி லாவண்ணியாதான் திருமணத்தை முன்னின்று நடத்தினாளாம்என்பது தான் அந்தச் செய்தி. அது பர்வதத்துக்கும் திலகத்துக்கும் பெரும் அதிர்ச்சியாக இருந்தது.

"அப்ப இவள் வசு கரவெட்டியிலயா போய்ப் பதுங்கினவள்...இந்த ஒரு மாத காலமும் லாவண்ணியாவோட..., அவளின்டரை வீட்டில தான் இருந்திருப்பாள் போல...! சரியான அமுசடக்கி... இனி இந்தப் பக்கம் வங்கி வேலைக்கு வந்தாலும் வருவாள்...!

"அமுசடக்கி எண்டு சொல்லாத... அவள் காரியக் கெட்டி. அவளின்ர துணிவும் ஆதுரமும் சபேசனுக்குப் பிடிச்சிருக்கும் போல... அதால தான் அவள் கண்ணை மூடிக் கொண்டு, அவனுக்குப் பின்னாலை போயிருக்கிறாள். இனி உன்ரை சாதி, தாவடி பெருமை எல்லாத்தையும் குப்பையில கொண்டு போய்ப் போடு..."

"....................."

பர்வதத்தின் மௌனம் அர்த்தம் பொதிந்ததாக இருந்தது. அந்த மௌனத்தைக் கலைப்பது போலத் திலகத்தின் கைத்தொலைபேசி ஒலி எழுப்பியது.

"ஆரது..." பர்வதம் தான் கேட்டாள்.

"வசு... வசு...!" உதடுகள் உடையாமல் மெதுவாகத் திலகம் முனகினாள்.

"அவள் கதைக்கிறதை நானும் கேக்கிறன். ஸ்பீக்கரில விடு...!"

"சித்தி...! அம்மாவை எதிர்த்துக் கதைக்க எனக்குத் தெரியாது... அப்படி அவ என்னை வளர்க்கேல்லை. சபேசன் என்ரை உயிர். அவரை, அவ வேண்டாமெண்டு சொல்லிச் சாதிப்பூச்செல்லாம் பூசினது எனக்குப் பிடிக்கேல்லை. என்ரை குரல் அவவுக்கு எதிரா உயர்ந்ததுக்கு அதுதான் காரணம். உல்லாம் என்ரை குடிகாரக்குப்பன் ஐயாவால வந்ததுதான். அந்தச் சென்மத்தோட அவ வாழ்ந்த நரக வாழ்க்கைதான் அவற்ரை சாவுக்குப் பின்னரும் அவவை விடாமல் ஒரு கெட்ட கனவாத் தொடருது. அந்த அழுத்தமும் மனக்கிலேசமும் தான் ஆம்பிளை வாடை பட்டாலே அவவுக்கு வெப்பியாரமாய் இருக்கு. சபேசன் என்ன எந்த ஆம்பிளையாயிருந்தாலும் என்ரை மனலயிப்பு அவவுக்கு நெருப்புத்தணல் பட்ட கதையாத்தான் இருக்கு. அது தான் நான் திருமணம் செய்யாமல் இருந்தாலும் பரவாயில்ல எண்ட மனநிலைக்கு அவவை விரட்டியிருக்கு...!"

"என்ரை உடனிருப்பும் அநுசரிப்பும் அவவுக்குக் கட்டாயம் தேவை. அது எனக்கு நல்லாய்தெரியும். பூசை புனஸ்காரம் எண்டு தெய்வ பக்தியில் திளைத்துக் கிடக்கும் அந்த மனிசி இப்படி ஆனது தான் எனக்கு ஆச்சரியம்...! காலம் அவவின்ரை கொந்தளிப்பை அடக்கிச் சாந்தப்படுத்தும். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கு..."

"அவவுக்குச் சொத்துப்பத்தெண்டு ஏதுமில்லை. ஊர்க்காணியிலில இருந்து வாற குத்தகைப் பணம் மட்டும் தான். அதிலை... அதிலை யும் ஐயா அந்தக் குடிகார மட்டி சுவடினது எனக்குத் தெரியும். கால்வயிறு அரை வயித்தோட தன்னை ஒறுத்து என்னை ஏ.எல். வரைக்கும் படிக்க வைச்சா... எனக்கு வங்கி வேலை கிடைச்சது என்ரை முனைப் பாலையும் நற்போக்காலையும் தான்..."

"சித்தி! காலம் கனிய அம்மான்ரை கோவம் தணியும். அப்ப நானெண்டாலும் அவவை வந்து பார்ப்பன். சபேசன் கொஞ்சம் பின்னாலை வருவார்..."

"சித்தி முக்கியமான ஒரு விஷயம். அம்மான்ரை தேசிய சேமிப்பு வங்கிக் கணக்கில் ஒரு இருபத்தைஞ்சு போட்டிருக்கிறன். அதை, அவவை எடுக்கச் சொல்லுங்க. மருந்துச் செலவு அது இதெண்டு அவவுக்கு இருக்கும். நானும் சபேசனும் அவவோட வீட்டில வந்து இருக்கத் தான் விரும்பிறம்... ஆனா அது பட்ட வேம்பான்ரை கிருபையால தான் நடக்க வேணும். அது வரைக்கும் நீங்க தான் அவவுக்குத் துணையா இருக்க வேணும்."

குலுங்கி அழும் குரல்! திலகம் திரும்பி பார்த்தாள்.

ஸோபாவில் சோர்ந்து போய்க் கிடந்த பர்வதம் நலிந்த குரலில் அரற்றினாள்:

" என்ரை... என்ரை பிள்ளை என்ன மறக் கேல்லை. நான் தான் கடும்பிடி பிடிச்சிட்டன் பிள்ளை. அந்தப் பெடியன் சபேசனை அருவருப்போட பாக் கிறதை... அவதூறு செய்யிறதைக் கொஞ்சம் நான் விட வேணும்பிள்ளை. அவனை நான் எவ்வளவு அவமானப் படுத்திப்போட்டன். அவன்ரை முகத்தில நான் இனி முழிக்க முடியுமா...?"

இல்ல... இல்ல... அக்கா...!

"ஆச்சி திலகம்...! அந்த ஃபோனை ஒருக்கால் தாரும்."


திலகம் ஃபோனைத்தர, அதை வாங்கிய பர்வதம் அதனைப் பட்சமாகத் தடவிக் கொடுத்தாள்.

அவளது அருமந்த மகளின் அன்புமயமான செய்தியைக் காவி வந்த கருவி அது; அதில் அவள் அதீத பிரீதி கொண்டதில் வியப்பேதுமில்லைத்தான்.

விழி மலர்களில் நீர் சொரிய அவள் முறுவலித்தது தங்கை திலகத்துக்கு மிகவும் பிடித்திருந்தது.

அவளையே பார்த்தபடி இருந்த திலகம் "கடவுள் கருணை உள்ளவர்..." என முணுமுணுத்தாள். அவளது முணுமுணுப்பு பர்வதத்தின் காதிலும் லேசாய் விழுந்தது. ●

உபாலி லீலாரத்ன
தமிழாக்கம் – வே.சிவராஜலிங்கம்





# தெணியானின் "மரக்கொக்கு" நாவலின் சிங்களமொழிபெயர்ப்பு "குலப்பெண்கள்" (குல அங்கனாவோ) (வடக்கின் கிராமப்பிறழ்வு) – ஓர் அறிமுகம்

இந்தப்படைப்பு 1994 ஆம் ஆண்டு அரசினர் இலக்கிய விருதினைப் பெற்றுக்கொண்ட தெணியான் என்று அழைக்கப்படும் படைப்பாளியான கந்தையா நடேசுவின் தமிழ்நாவல் மரக்கொக்கு. தெணியான் இலங்கையில் வாழுகின்ற மூத்த தமிழ் எழுத்தாளர் என்பது பலரும் அறிந்த ஒன்று. இலங்கைத்தமிழ் இலக்கியத்தில் மூத்த எழுத்தாளராக மதிக்கப் பெற்ற கே. டானியலினுடைய இலக்கியச் சேவையினைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கின்ற முற்போக்கு வாதியான எழுத்தாளராகத் தமிழ் இலக்கியப் பரப்பில் வரவேற்புப்பெற்று வாழ்ந்து வருபரே இந்தத் தெணியான்.




யாழ்ப்பாணம் வல்வெட்டித் துறை, பொலிகண்டி என்னும் கடலோரக் கிராமத்தில் பிறந்தவர். ஆசிரியராகச் சேவை செய்யும் காலத்திலேயே இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபாடு கொண்டு, வடக்கின் தாழ்ந்த குலத்தைச் சார்ந்த மக்கள் படுகின்ற துன்பங்களைத் தொனிப்பொருளாகக் கொண்டு இலக்கியம் படைத்து வருகின்றார். அதே சமயம் உயர்சமூக பிராமண வம்சங்களில் நிகழும் அக்கிரமங்களையும் குலப்பழக்க வழக்கங்களையும் அவதானித்து மாறுபாடான சமூக உண்மை நிலையினை முகங்கொண்டு மனம்பொறுக்க முடியாத இவர், வாழ்க்கையின் முரண்பாடுகளை உணர்ந்து யதார்த்தமான அபூர்வமான சுயபடைப்புகள் மூலம் வெளிக் கொணர்ந்துள்ளார். அந்தவகையில் தெணியான் அவர்களால் வடக்கின் பிராமண சமூகத்தை அறிமுகப்படுத்தும் படைப்பாக "பொற் சிறையில் வாடும் புனிதர்கள்" என்னும் நாவல் 1989ல் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பிராமண வம்சத்தினர் மற்றும் உயர்சாதியினர் குறைந்த சாதி மக்களைத் தங்கள் கட்டளைகளுக்கு கீழ்ப்படியும் வகையில் அதிகாரம் செய்யும் முறைகளை மரக்கொக்கு என்னும் இந்த நாவலின் மூலம் பிரத்தியட்சமாக வெளிக்காட்டுகிறார். பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இருந்து கிராம விதானைமார் மற்றும் வேறுபதவிகளைத் தமக்குரித் தாக்கி, வடக்கில் கோவில்களின் உரிமையையும் தமதாக்கி, செல்வச்செழிப்புடைய உயர்சாதிகளால் சாதியின் பெயரால் குறைந்த சாதியினர் என்ற வரையறுக்கப்பட்ட மக்கள் பகுதியினர், மற்றும் கிராமங்களில் வாழும் ஏழை களான வறிய மக்கள் துன்பநிலைக் குள்ளாதல் என்பவை சிங்கள சமூகத்தில் அனேகமானோர் அறிந்திராத உண்மை யான ஒன்றாகும்.

வடக்கின் மூத்த தமிழ்ப்படைப்பாளி யாகியவருக்கும் சாதிபேத்தினால் துன்பம் அனுபவிக்க வேண்டியநிலை ஏற்பட்டது. அவர்கள் தமது இலக்கியப்பணியினை முன்னெடுத்துச் சென்றது இந்தத் துன்பப் பட்டமக்களின் பொருட்டேயாகும். ஆதலால் இன்றும் தமிழ்ச்சமூகத்தில் அவர்களைப்பற்றி உயர்சாதி மக்கள் மத்தியில் உயர்வான நிலைபெறும் அளவிற்குப் பண்புள்ள மனப்பாங்கு உருவாகவில்லை.

மரக்கொக்கு நாவலில் அடையாளப்படுத்த படுவது வடக்கின் கோவில்பரம்பரை உரிமையான வம்சத்தில் உயர் குலத்தில் பிறந்த அகந்தை கொண்ட ஒரு பெண்ணினைப் பற்றிதாகும். குடும்பகௌரவம், உயர்சாதியம், பிராமண வம்சம் போன்ற இந்து வாழ்க்கைக் கொள்கை. உடலில் தசை, இரத்தம், எலும்புகளும் மற்றவர்களில் இருந்த வேறுபட்டதாக எண்ணி வாழ்ந்து வரும் விஜயலக்ஷ்மி என்னும்

பெயருடைய அவர், வடக்கின் கோவில் உரிமையாள ரான செல்வம் மிக்க உயர் சாதியின் மிகச் சிறந்த பிரதிநிதியாகும். எனினும் காலவோட்டத்தில் உருவாகும் சமூகமாற்றம், அறிவுத்தெளிவினால் முதிர்ச்சி பெற்று அடுத்த புதியதலைமுறையின் எண்ணக்கரு மற்றும் செயற் பாடுகளும் இணைந்து உயர்குலவாதியினரின் செல்வாக்கு மிக்க அறைகூவலிற்கு உள்ளாகிறது.

உயர் குலத்தின் சக்திவாய்ந்தவர்களிற்குரிய கோவிலினுள்ளே பிரவேசம் செய்வதற்கு ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் போடப்பட்ட தடைக்கு எதிராகக் கிளர்ந்த எழுச்சி நீதிமன்றம் வரையில் கொண்டு செல்லப்பட்ட நிகழ்வுகள் இதற்குப் பிரசித்தமான சான்றுகளாகும். இடதுசாரி அரசியலினால் வடக்கில் வாழும் ஒடுக்கப்பட்ட சாதிக்குரிய மக்களின் ஒரு பகுதியினர் சாதியத்துக்கு எதிராக வழிநடத்தப்பட்டு செயற்பட்ட வரலாற்று நிகழ்வு செல்வாக்குடையவர்களின் சாதி அபிமானத்திற்கான சாவுமணியடித்த பலம் வாய்ந்த தாக்குதலொன்றாகும்.

இந்த நாவல் சிங்களத்தில் பிரதான நூலாசிரியர் மாட்டின் விக்கிரமசிங்க அவர்களின் "கம்பெரலிய" நாவலினைப்போன்று சமூகப்பிறழ்வொன்றினை உருவாக்குவதில் குறிகாட்டும் விதமாக அமைந்துள்ளதென அறிமுகப்படுத்தத் தகுந்ததாக உள்ளது. கம்பெரலிய சிங்கள மொழி நாவல் கிராமப்பிறழ்வாகத் தமிழ்மொழிக்கு மொழிமாற்றம் செய்யப்பட்ட பின்பு அனேகமான தமிழ் இலக்கிய விமர்சகர்கள் இந்தப்படைப்புப் பற்றி அறிந்து கொண்டார்கள்.

கம்பெரலிய நாவலைப் போல மரக்கொக்கு என்ற நாவலையும் தமிழ் இலக்கியத்தில் மிகவும் விசேடமான படைப்பாகக் கவனத்திற் கொள்ளப்படுகிறது. இந்த நாவலின் மூலம் யாழ்ப்பாணச் சமூகத்தில் முக்கியமான ஓர் உண்மை அப்பட்டமாகவே வெளிக்கொணரப்பட்டுள்ளது. மனிதாபிமான அவசியதேவையின் செயற்பாடு மற்றும் சமூகப் புரட்சி நிகழ்வு என்பன ஏற்பட்ட யாழ்ப்பாணத்தின் உயர் சமூகத்தில் அதிர்வை உருவாக்கியவிதம் மிகச்சிறப்பாக விபரிக்கப்பட்டுள்ளது. தெணியானின் இன்னொரு நாவல் "கானலின் மான்" 2002 ஆம் ஆண்டு இலங்கை அரசின் இலக்கிய விருதினைப் பெற்றுக் கொண்டது. நாவலாசிரியராகப் பேசப்படும் தெணியான் பிரபல்யமான சிறுகதை ஆசிரியராகவும் நன்கு அறியப்பட்டவராவார். அவரது "ஒடுக்கப்பட்டவர்" சிறுகதைத்தொகுதி 2011 இல் கொடகே தேசிய இலக்கிய விருது, தமிழ்நாடு சின்னப்பபாரதி அறக்கட்டறை விருது என்பவற்றைப் பெற்றுக் கொண்டது. 2014 ஆம் ஆண்டு "குடிமைகள்" நாவல் அரச இலக்கிய விருது, கொடகே தேசிய இலக்கிய விருது இரண்டினையும் பெற்றுக் கொண்டது. அரசினால் வழங்கப்பெறும் மிக உயர்ந்த கௌரவப் பட்டம் "சாகித்திய ரத்னா" விருது 2013 ஆம் ஆண்டில் தெணியானுக்குக் கிடைக்கப் பெற்றது.

எனது பார்வையின் கோணத்தில் தமிழ் இலக்கியத்தில் காணக்கூடியதாகவுள்ள சமூகமாற்றம் சிங்கள மொழி வாசகர்களிடம் கொண்டு செல்வதே நோக்கமாகும். அனேகமானோர் அறியாத பக்கங்களாக, சிங்கள சமூகத்துக்கு மறைக்கப்பட்டிருப்பவை இவை. அதனால் மரக்கொக்கு நாவல் சிங்கள மொழியில் மொழிமாற்றம் செய்து, சிங்கள மொழி வாசகர்களுக்கு உகந்த விதமாக, "குலப்பெண்கள்" எனப்பெயரிட்டு, "வடக்கின் கிராமப்பிறழ்வு" என உபதலைப்பிட்டு கொடகே நிறுவனத்தினூடாக வெளியீடு செய்திருக்கின்றேன்.

ஒரே நாட்டில் வாழும் அனைத்து மக்களுடனும் சகோதரத்துவத்துடன் வாழ்வதற்கு விருப்பமுடையவர் தெணியான். தெணியானின் மரக்கொக்கு நாவல் சிங்கள மொழிபெயர்ப்பாக வெளிவந்திருக்கும் "குலப் பெண்கள்"(குல அங்கனாவோ) என்னும் படைப்பால் வடக்கில் வாழ் மக்கள் சமூகத்தின் நிலைகளைச் சிங்கள மக்கள் புரிந்து கொள்வதற்கு கிடைத்தமையின் பிரகாரம் அவர்களின் கம்பெரலிய(கிராம பிறழ்வு) நாவலிற்குச் சமமான பொருத்தப்பாடு உடையதாக விமர்சகர்களால் பேசப்படுகிறது. ●




நூல்
ஆளுமைக் கொள்கைகள்
நூலாசிரியர்
இராசேந்திரம் ஸ்ரலின்
விலை - 450/-
வெளியீடு - ஜீவநதி



நூல்
கரைசேராப் படகுகள்
நூலாசிரியர்
திருநகர் நடராசா
விலை - 200/-
வெளியீடு - ஜீவநதி



நூல்
சமூகவெளி
தரிசனங்களும் பதிவுகளும்
நூலாசிரியர்
மு.அநாதரட்சகன்
விலை - 250/-
வெளியீடு - ஜீவநதி


நூல்
சாம்பற் பொழுதுகளில்
மீளெழுகைக்காலம்
நூலாசிரியர்
விஜிதா ரகுநாதன்
விலை - 250/-
வெளியீடு - ஜீவநதி



நூல்
நீரில் கிழித்த கோடுகள்
நூலாசிரியர்
கே.ஆர்.டேவிட்
விலை - 300/-
வெளியீடு - ஜீவநதி



நூல்
ஒரு புள்ளியில் ஓடும் முட்கள்
நூலாசிரியர்
செல்லக்குட்டி கணேசன்
விலை - 250/-
வெளியீடு - ஜீவநதி




குப்பிழான் ஐ. சண்முகனின்

# கோடுகளும் கோலங்களும்

தொன்னூறுகளுக்கு முன்னர் வெளியான ஈழத்துச் சிறுகதைத் தொகுப்புகள் குறித்து எழுதுவது என்று யோசித்தவுடன் தனித்துத் தெரியும் மற்றும் ஒருவர் குப்பிழான் ஐ. சண்முகன் அவர்கள். 70களில் ஈழத்தில் படைப்பிலக்கியம் தொடர்பாக தொடர்ச்சியாக இடம்பெற்ற வாதங்கள், உரையாடல்கள் ஆகியவற்றின் தொடர்ச்சியாக படைப்பிலக்கியங்களின் வடிவத்திலும், உள்ளடக்கத்திலும் பல்வேறு மாற்றங்களைச் சந்தித்தன. அந்த நேரத்தில் இருந்த அவர்கள் சார்ந்திருந்த இலக்கிய அணிகள், போக்குகள் என்பவற்றைப் புறந்தள்ளி ஒரு வாசகனாக தற்போது பார்க்கின்றபோது, மொழிக்கும் வடிவத்திற்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து, அழகியலை முன்னிலைப்படுத்திய படைப்பாளிகளில் ஒருவராக குப்பிழான் ஐ. சண்முகன் இருக்கின்றார்.

குப்பிழான் ஐ. சண்முகனின் முதலாவது சிறுகதைத் தொகுப்பான கோடுகளும் கோலங்களும், அலையின் இரண்டாவது வெளியீடாக 1976ம் ஆண்டு மார்கழியில் வெளியாகியிருக்கின்றது. இத்தொகுப்பில் 1969 முதல் 1974 வரை வெவ்வேறு இதழ்களில் வெளியான பதினொரு சிறுகதைகள் இடம்பெறுகின்றன. இந்த நூலை இப்போது பார்த்தாலும் உடனே கவர்வது அதன் அழகிய அட்டைப்பட வடிவமைப்பும் நேர்த்தியான வார்ப்புருவும். அட்டைப்படத்தினை வடிவமைத்தவர் ஓவியர் ரமணி. அச்சுக்கலையும் தொழினுட்பமும் வளர்ந்திருக்கும் இன்றைய நாட்களில் கூட புத்தகங்கள் ஏனோதானோ என்ற வடிவமைப்புடன் வெளிவருவதைப் பார்க்கின்றபோது நாற்பது வருடங்களுக்கும் முன்னைய இந்தப் புத்தக உருவாக்கம் நிச்சயம் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதாகின்றது.

இத்தொகுப்பில் இருக்கின்ற கதைகள் பெரிதும் தன் அனுபவக் கதைகளாக, அகவயம் சார்ந்தனவாக உள்ள அதேவேளை பல்வேறு வாசிப்புகளுக்கான சாத்தியத்தை கச்சிதமாகக் கொண்டிருக்கின்றன. "ஒரு றெயில் பயணம்" என்கிற கதை இந்த அளவில் மிக முக்கியமானது. ஏதோ ஒரு றெயில் பயணம் ஒன்றில் கதை நிகழ்கின்றது. கதைசொல்லி றெயில் பயணத்தில் ஒரு பெண்ணைக் காணுகின்றான், அவள் மீது ஒரு வித ஈர்ப்பு உருவாகின்றது, அவளுடன்



பேச எத்தனிக்கின்றான். அவளைத் தனக்கு சிங்களம் படிப்பிக்க முடியுமா என்று கேட்கின்றான். "நாம் இப்போது றெயிலில், இப்பயணத்தில் நானும் நீங்களும் நண்பர்கள், பின் நான் யாரோ நீங்கள் யாரோ" என்று கூறி அவள் பிரிந்துசெல்கின்றாள் என்று கதை செல்கின்றது. இங்கே றெயில் பயணம் என்பது எதை? வாழ்க்கையையா? அதன் அபத்தத்தையா? அதன் நிலையின்மையையா? எம் சக மனிதர்களுடன் எமக்கிருக்கும் சமூக உறவுகளைக் கூட நாம் ஒரு விதத்தில் றெயில்பயணமாகப் பார்க்கலாம் தானே? இவ்வாறான சாத்தியங்களுடன் வாசிப்பினைச் செய்யும்போது மிகுந்த சுவாரசிமாகின்றது இச்சிறுகதை.

குப்பிழான் சண்முகனின் மிகப் பெரிய பலம் அவர் காட்சிப்படுத்தும் விதம். அவர் எழுதும் ஒவ்வொரு காட்சியும் ஒரு தேர்ந்த ஒளிப்படக் கலைஞனின் நுட்பத்துடனும் கோணத்துடனும் மனதில் பதிவாகின்றது. இந்தத் தொகுப்பு முழுவதும் நிறைந்திருக்கின்ற அவரது நுட்பமான விபரிப்புக்கு உதாரணமாக இந்தக் கதையில் அவஉ கூறும் றெயில் காட்சியை ஒன்றைப் பார்ப்போம்,

"வண்டியில் கூட்டம் கூடியிருந்தது. கடந்த ஸ்ரேசனில் ரெண்டு, மூன்று பேர்கள் வண்டியில் புதிதாக ஏறியிருப்பார்களென எண்ணினேன். நான் நின்ற இடத்தில் ஒரு வாலிபன் நின்று கொண்டு ஏதேதோ கதைகளில் மூழ்கியிருந்தான். அப்பால் ஒரு மீனவன் ஒரு வெறுமையான கூடையைக் கவிழ்த்து அமர்ந்திருந்தான். சுவீப் ரிக்கெற் விற்கும் பையன் ஒருவன் தன்

சுவீப் ரிக்கெற்றுகள் கொண்ட பலகையை கையில் பிடித்தவண்ணம் கடற்கரையை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றான். அவனுக்கு அப்பால் இருந்த ஓர் தாடிக்காரக் கிழவன், என்னையும் அவளையும் வெறிக்க வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தான். யாரோ ஒரு பிச்சைக்காரக் கிழவி ஒரு நவீன சினிமாப் பாடலைப் பாடிய வண்ணம் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தாள். அவள், எனக்கும் அவளுக்கும் முன்னால் வந்து நின்று கொண்டு அந்தப் பாட்டைப் பாடிக் கையை நீட்டினாள்"

இந்தக் கதை நிகழும்போதே கதையில் குறிப் பிடப்படும் சில கதாபாத்திரங்கள் றெயில் பெட்டியில் இறங்குவதும் ஏறுவதுமாக இருப்பார்கள். குறிப்பாக பிறமிளா என்கிற பெண்ணுக்கு அருகில் கதை சொல்லி அமர்ந்த பிறகு வெவ்வேறு கதாபாத்திரங்கள் வெவ் வேறு நேரத்தில் பெட்டியைவிட்டு இறங்கிச் செல்வார்கள். இவர்கள் எல்லாம் சாதாரணமாக றெயிலில் காணக் கூடிய கதாபாத்திரங்கள் தான்; என்றாலும் அவர்கள் எல்லாம் வெறும் கதாபாத்திரங் கள் மாத்திரம் தானா என்று எண்ணத் தோன்றுகின்றது. உதாரணத்துக்கு கதைசொல்லி, பிச்சைக்காரக் கிழவிக்கு பணம் எதுவும் கொடுக்காமல், இல்லை என்று அனுப்புகின்றான். அப்போது அவனுக்கு அருகில் இருந்த பெண்ணின் (பிறமிளா) முகத்தில் இருந்த செந்தழிப்பு இல்லாது போகின்றது. அடுத்த நிறுத்தத் தில் சுவீப் ரிக்கெற் விற்பவனும் இறங்கிச் செல்கின் றான். இதனை நல்லெண்ணம் ஒன்றைச் சம்பாதித்துக் கொண்டிருக்கக் கூடிய வாய்ப்பினை (அதாவது அதிர்ஸ்டத்தை) அவன் இழந்ததாகக் கருதமுடி கின்றது. இன்னோரிடத்தில் இருவர் பார்வையும் முட்டிச் சிதறி அவள் நாணமிக்க புன்னகையுடன் முகத்தைக் கவிழும்போது,

"மீன்காரக் கிழவன் ஆதரே மம ஆதரே (நேசிக் கிறேன் நான் நேசிக்கிறேன்) என முணு முணுத்தான், தாயின் அணைப்பிலிருந்த குழந்தை கையைக் காலை ஆட்டி விளையாடியது. வாசலில் நின்ற இளைஞன் ஏதோ நினைவில் சிரித்துக் கொண்டான்"

என்றும் குறிப்பிடுகின்றார்.அவ்வாறு பார்க் கின்றபோது படிமங்களூடாகச் சொல்லப்பட்டதோர் கதையென்ற வாசிப்பொன்றையும் செய்யமுடிகின்றது. தவிர அவருக்கேயான நுட்பமாக விபரிக்கும் ஆற்றலி னால் திரைப்படக் காட்சி ஒன்றினைப் பார்ப்பதுபோன்ற உணர்வையும் ஏற்படுத்துகின்றார்.

இதுபோலவே "மௌனகீதம்" என்கிற இன்னொரு கதையும் அகவயமான உரையாடல்களின் ஊடாக பிரிவொன்றிற்கான காரணங்களை சொல்லிச் செல்லுகின்றது. இக்கதை எழுதப்பட்ட காலத்தில் இருந்த இலக்கியம் தொடர்பான நிலைப்பாடுகளைப் பற்றிய தன் கருத்துகளைச் சொல்வதற்கு கதையை ஒரு களமாக பாவித்திருக்கின்றார் குப்பிழான் சண்முகன் என்றே தோன்றுகின்றது. இதே உத்திதான் "தடங்கள்" என்கிற கதையிலும் கையாளப்பட்டிருக்கின்றது. இந்தக் கதையில் கதைசொல்லியும், நந்தகுமார், பொன்னுத் துரை ஆகிய மூன்று கதாபாத்திரங்கள் வெளிப்படுத்தும் கருத்துநிலையை வைத்து அக்காலத்தில் இருந்த இலக்கியம் குறித்திருந்த மூன்றுவகையான போக்கு களையும் ஓரளவு அவதானிக்கலாம். ஆயினும், இப்போது வாசிக்கின்ற போது அவை முழுமையாக சிறு கதை என்ற வடிவத்தை அடையவில்லை என்றே கருத முடிகின்றது.

"ஒரு பாதையின் கதை" என்கிற கதை குப்பிழான் சண்முகம் வழமையாகக் கையாளும் கதைக்களத்தை விட்டு வேறானது. இக்கதையில் ஆதிக்கசாதியைச் சார்ந்த, அதிகார வெறி பிடித்தவராக இருந்த ஒருவர் தன் குடிமையாக இருந்த ஒருவரின் மகனின் தர்க்க ரீதியான வாதங்களால் கவரப்பட்டு மனமாற்றம் அடைவதையும், அவ்வாறு "பாதையைச்" செப்பனிட்டு வீதியாக்கும் முயற்சியில் அவன் இறந்த பின்னர் அவர் அதனை நினைவுகூறுவதையும் கூறுகின்றது. இந்தத் தொகுப்பில் ஏனைய கதைகள் தனிமனித அகவயம் சார்ந்தனவாயும், அழகியல் வெளிப்பாடுகள் குறித்ததாயும் இருக்க இக்கதை சமூகப் பார்வையுடன் இருக்கின்றது என்ப தால் தொகுப்பில் வேறுபட்டுத் தெரிகின்றது. "இணை" என்கிற இன்னொரு சிறுகதை ஒரே சாதியைச் சேர்ந்த ஆனால் வர்க்கத்தால் பிரிக்கப்பட்ட இருவர் காதலித்துத் திருமணம் செய்வது பற்றிக் குறிப்பிடுகின்றது ஆனால் கதை சொல்லப்பட்ட விதத்தில் பண வசதி குறைந்திருப் பவர்களுக்கு தாழ்வுச்சிக்கல் இருப்பதாகக் குறிப்பிடுவது போன்ற உணர்வு ஏற்படுகின்றது. "வேட்டைத் திருவிழா" கதையில் வேட்டைத் திருவிழா ஒன்றையும் அதன் பரபரப்பையும் கண்முன்னே கொண்டுவருகின்றார். ஆனால் இந்தக் கதையும், உணர்ச்சிகள், எல்லைகள் ஆகிய கதைகளும் வாலிபம் தாண்டிய வயதுகளில் உருவாகின்ற உறவுச்சிக்கல்களையே பேசுகின்றது.

கோடுகளும் கோலங்களும் என்கிற இந்த நூலை ஒரு தொகுப்பாக வாசிக்கின்ற போது உறவுகள் பற்றியும், உறவுச்சிக்கல்கள் பற்றியும் குறிப்பிட குப்பிழான் சண்முகன் ஒரே பாணியிலான வசனங்களைத் திரும்பத் திரும்பப் பாவிப்பது போன்ற தோற்றம் வருகின்றது. இதனால் தொகுப்பில் உள்ள பல கதைகள், ஒரே கதையை மீள மீள வாசிப்பது போன்ற உணர்வினை ஏற்படுத்துகின்றன. காட்சிகளை நுட்பமாக விபரிப்பதை பல இடங்களில் சிறப்பாகச் செய்திருக்கும் குப்பிழான் சண்முகம், அதேயளவு சொற்சிக்கனத்திலும் கவனம் செலுத்தியிருந்தால் இன்னமும் சிறப்பானதாக இந்தக் கதைகள் அமைந்திருக்கும் என்றே கருத முடிகின்றது. அதே நேரம் அப்போது மலிந்திருந்த சற்றே வறண்ட, நேரடியாக பிரசார தொனி வீசுகின்ற படைப்பிலக்கியங் களில் இருந்து தனிமனித உணர்வுகளையும், உறவுச் சிக்கல்களையும், அக உலகையும் பேசுவதிலும், அதற்கான கவித்துமான மொழிநடையைக் கையாண்டு அழகியல் ரீதியான ஒரு இலக்கிய செல்நெறியை உருவாக்கிய முன்னோடிகளில் ஒருவராகவும் குப்பிழான் ஐ. சண்முகனின் படைப்புகள் மிக முக்கியமானவை என்பதை உறுதியுடன் கூற முடிகின்றது. ●

# புரட்சி மணாள்

என்னோடு
ஒட்டப்பட்ட
சடங்குகளை
கிழித்தெறிவேன்

சுதந்திரம் பறிக்கும்
மரபுச் சுவர்களை
இடித்தெழுவேன்

ஒரு தெய்வீகக் காதலை
உன்னோடு பகிர

நான்
சமுத்திர அலையாகி
உன் கரையோர மடியில்
எப்போதும்
தவழ்ந்திருப்பேன்

யாரும் கேட்காதபடி
நீரும் வேர்காதபடி
உன் மார்புப் பாலத்தில்
பாடும் குயிலாவேன்

அந்த காரப் பொழுதினிலும்
அந்தி நேரப் புழுதியிலும்
ஒன்றாகப் பூப்போம் நாம்

சுழன்றடிக்கும் புயலைக் கூட
இந்தப் பூ எதிர்க்கும்
உனக்காக

என் மூச்சின் முடிவிலும்
உனக்கான
பிரார்த்தனைகளை
முடிந்து வைப்பேன்

உன் ஈரதேகத்தின்
இதயவறைக்குள்
என்னை வை

என் நேசமே
உன் சுவாசம் பூக்க
உரமாக வேண்டும்
இறந்த நான்.

– மனால் (பொருநிதொட்ட)




# இவளோ பேதை

நீ!
கட்டித் தழுவிய போதெல்லாம்
கரைந்து போகாமலும்
விலகி ஓடாமலும் – நிமிடங்கள்
விரைந்து செல்லாமல் உறைந்துபோய்
இருந்ததும் – நீ
உதிர்க்கும் சிரிப்பில் – நான்
நிறைந்ததும் கனிந்ததும்
நினைக்க நினைக்க சொர்க்கமே!

உன் அன்பின் அரவணைப்பில்
மூழ்கிப் போனது
முத்தத்தின் சத்தத்தில்
மூர்ச்சையானது – இன்றும்
எண்ணியெண்ணி
மகிழ்கிறேன்!

நீ!
இன்று – பெரியவனாய்
மேதையைப்போல்
கேள்விகள் கேலிகள்
சேட்டைகள் – செய்கிறாய்
நானோ பேதை
உன் அன்பை தவிர
ஏதறிவேன்
எண்ணிப்பாராய் என் – குழந்தாய்!.

– நந்தா



# தெளிவாகத் தெரிகிறது

பரிசுத்தமாக வேண்டும்
தேசம் என்றால்
மண்வெட்டி கடப்பாறை
கத்தி வேண்டாம்!
மதிதெளிந்த புகழ் விரும்பா
மன்னர்கள் ஓரணியில்
சேர்ந்தாலே போதும்!

சாபக்கேடோ வரலாற்றுக்
குற்றமோ,
வலிந்து வரும் சோதனைக்குள்
வகையாகச் சிக்கிக் கொள்கிறது தேசம்!

சொத்துக் குவிப்பு
சொந்தங்களின் சுகம் –என்று
தனிக்காட்டு ராஜாவாக
தைரியமாக வலம்வந்தவர்கள்
மாற்றம் கண்டது, மாற வைத்தது
விமர்சிக்கப்பட வேண்டிய
ஒன்று தான்!
என்ன செய்வது..?
சக்கரங்கள் மாறி,
சாம்ராஜ்யங்கள் மாறினாலும்
வக்கிரங்கள் வலைக்குள்
வகையாக மாட்டிக் கொண்டு
எதிரும் புதிருமாக எல்லோரும் இன்று
வசைபாடிக் கொண்டிருக்கிறார்கள்!

போரின் ரணங்கள்
மாறினாலும்,
ஊனங்களும் – உதிரிகளும்
காலத்தின் காட்சிகளாக
தமிழரின் நெஞ்சங்களை
குத்திக் கொண்டு தான் இருக்கிறது!

வளங்களும் வனப்புக்களும்
தொலைந்து போனாலும் வாழ்வாதாரமாவது
வளமாகும் என்று நம்பிக்கையுடன்
வாக்கினைப் போட்டு ஏக்கத்தோடு இருந்தவர்களுக்கு
நாட்டின் நடப்புகள் நடக்கும் விபரீதங்கள்!

போரில்லாத
புது புது ஆக்கிரமிப்புகள் இல்லாத
இன்னொரு அடிமை வாழ்விற்கு
மீண்டும் மீண்டும் தமிழ் உலகு
தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது தான்
தெளிவாகத் தெரிகிறது!

– நா.ஜெயபாலன் (பிபிலை)

# நான் நீ கடவுள்

நான் என்னை நம்ப வேண்டும்
நீ உன்னை நம்ப வேண்டும்
கடவுள்(இறைவன்)
தன்னை நம்ப வேண்டும்
பாவம் ஒருவரும் தாம் தம்மை நம்பும்படியாயில்லை
ஒருவர் இன்னோர் உதவியை எதிர்பார்த்தபடி
ஒருவர் இன்னொருவரை
முழுமையாய் நம்பும்படியாயுமில்லை
பரிபூரணநம்பிக்கை
எங்குதான் இருக்கிறது.


நான் என்னை நம்பும்படியாக இருந்தால்
நீ உன்னை நம்பும் படியாக இருந்தால்
கடவுள் தன்னைத்தானே
நம்பும்படியாகவும் இருந்திருந்தாலும்
உலகில் குழப்பங்கள் ஏது?

மனிதன் தன்னையும் நம்புவதில்லை
கடவுளையும் கூட நம்புவதில்லை
கடவுள் தான் உலகைப் படைத்திருந்தால்
படைப்புக்கெல்லாம் அவனே பொறுப்பாளி

பரிணாமம் தானே படைப்பின் காரணிகள்
அறிவைக் கூட அவ்வாறே ஏற்றுக்கொள்வோம்.
மாற்றங்களை யேற்க மனதைப் பக்குவப்படுத்தி
மனுநீதியான உலகை மாற்றியமைத்திடுவோம்!

– இயலன்

# நேர்காணல்



## நேர்காணல்: கா.தவபாலன்
## சந்திப்பு : இராமன்

உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தில் 37 வருடங்களாக பல்வேறு பதவிகளை அலங்கரித்த பின் 2007ம் ஆண்டில் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர். மக்களின் அவலங்களை தனது சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் வாயிலாக வெளிக்கொண்டு வருபவர்.

**இராமன்:-** நீங்கள் உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தில் எப்போது, என்ன பதவியில் இணைந்து கொண்டீர்கள்?

**கா. தவபாலன்:-** நான் 1969 ம் ஆண்டில் அரசாங்க எழுதுவினைஞர் ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து, 1970 ம் ஆண்டில் மேற்படி திணைக்களத்தின் தலைமைக் காரியாலயத்தில் எழுதுவினைஞராக நியமனம் பெற்றேன்.

**இராமன்:-** எழுத்துத்துறைக்கு எவ்வாறு வந்தீர்கள்?

**கா.தவபாலன்:-** 2007 ஏப்ரல் மாத நடுப்பகுதி என எண்ணுகிறேன். சமஷ்டி ஆட்சிமுறை பற்றி ஒரு விரிவானகட்டுரையொன்றை எழுதி திரு சிவாஜியின் உதவியுடன் அதனை வீரகேசரி வாரவெளியீட்டின் அப்போதைய பொறுப்பாசிரியரான திரு தேவராஜ் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அவர் அதனை எவ்வித காலதாமதமுமின்றி பிரசுரித்து உதவினார். இதுவே எனது எழுத்துலகப் பிரவேசமாக அமைந்தது. திரு தேவராஜ் அவர்களுக்கு எனது நன்றிகள் உரித்தாகுக.

**இராமன்:-இலக்கியச் சஞ்சிகைகளில் சிறுகதை, கவிதை ஆகிய வற்றையும் எழுதி வருகின்றீர்கள். இவ்வாறு இலக்கியத் துறையில் எவ்வாறு ஈடுபாடு ஏற்பட்டது? இலக்கியத்துறையில் உங்களுக்கு குருநாதர் யார்?**

**க.தவபாலன்:-**பாடசாலையில் எனக்கு தமிழ் இலக்கணத்தையும், தமிழ் இலக்கியத்தையும் கற்பித்த வித்துவான்கள் ஆகிய திரு.திருமதி செல்லத்துரை, திரு திருமதி குமாரசாமி ஆகியோரையே “குரு” என்று கூற வேண்டும், நான் சிறுவனாக இருந்த காலத்தில் எனது தகப்பனார் மகாபாரதம், இராமாயணம் ஆகிய வசன நடைப்புத்தகங்களைத் தன்வசம் வைத்திருந்தார். அவர் “தம்பி இஞ்சை வா” என்று என்னை அழைத்துத் தன்பக்கத்தில் இருக்கச் சொல்லிவிட்டு மேற்படி புத்தகங்களை வாசித்து எனக்கு விளக்கம் சொல்வது வழக்கம். அனேகமான சந்தர்ப்பங்களில் என்னை வாசிக்கச் சொல்லி விட்டு அவர் கேட்டுக் கொண்டிருப்பார். இவ்வாறு எனக்கு சிறுவயதிலேயே வாசிப்புப் பழக்கம் ஏற்பட்டுவிட்டது. எனக்கு ஏறக்குறைய 15 வயது ஆனபோது வாசிகசாலைக்குச் சென்று வீரகேசரி, ஈழநாடு, சுதந்திரன், தொழிலாளி போன்ற பத்திரிகைகளை வாசிக்கத் தொடங்கினேன். குமுதம், கல்கி, ஆனந்த விகடன் போன்ற தமிழகச் சஞ்சிகைகளையும் அவ்வப்போது வாசிப்பேன். எனது சகோதரி தமிழக நாவல்களை அதிகமான வாசிக்கும் வழக்கம் உள்ளவர். அவரிடம் புத்தகங்களை வாங்கி நானும் வாசிப்பது வழக்கம். எனது தகப்பனாருக்கு கூத்துக் கலையைக் கற்றுக்கொடுத்த பேச்சிமுத்து அண்ணாவியார் எனக்குச் சிறுவயதில் பஞ்சபுராணங்களை இராகத் துடன் பாடக் கற்றுத் தந்தார். பிற்காலத்தில் அம்மா இந்தியாவுக்குப் போய்வந்தபோது பகவத்கீதை பெரிய புத்தகமொன்று வாங்கி வந்தா. அவ வாசித்துவிட்டு “இந்தா தம்பி நீயும் இதைப்படி” என்று என்னிடம் வற்புறுதித் தருவா. அரசாங்க சேவையிலிருந்து நான் ஓய்வுபெற்ற காலத்தில் யுத்தம் நன்கு தீவிரமடைந் திருந்தது. யுத்த அழிவுகளையும் மக்கள் படும் கஷ்டங் களையும் கண்டு மனம் நொந்து, எனது அவதானிப்புக் களை இலக்கியத்தின் மூலமாகவும் கட்டுரைகள் மூலமாகவும் வெளிக் கொணர வேண்டுமென்று தீர்மானித்தேன்.

**இராமன்:-** உங்கள் கவிதை, சிறுகதை என்பன எந்தெந்தச் சஞ்சிகைகளிற் பிரசுரிக்கப்படுகின்றன?

**கா.தவபாலன்:-**எனது முதலாவது சிறுகதையும், கவிதையும் ஞானம் சஞ்சிகையிற் பிரசுரமாயின. பின்னர் செங்கதிர், மல்லிகை ஆகிய சஞ்சிகைகளிலும் எனது சிறுகதைகள் பிரசுரமாயியுள்ளன. (துரதிஷ்ட வசமாக இன்று இந்த இரு சஞ்சிகைகளும் வெளிவருவதில்லை.) தற்போது ஜீவநதி, ஞானம், பூங்காவனம், தாயக ஒலி ஆகிய சஞ்சிகைகளில் எனது ஆக்கங்கள் வெளிவருகின்றன.

**இராமன்:-** தற்போது எந்த எந்தப் பத்திரிகையில் எழுதி வருகின்றீர்கள்?

**கா.தவபாலன்:-** தினக்குரல் கண்டி முகாமையாளர் திரு இராமன் மூலமாக திரு பாரதிராஜநாயகம் திரு தனபாலசிங்கம் ஆகியோருடன் தொடர்பு ஏற்பட்டது. அந்த வகையில் தினக்குரலில் எழுதி வருகின்றேன்.

**இராமன்:- என்ன வகையான கட்டுரைகளை எழுதுகிறீர்கள்?**

**கா.தவபாலன்:-** யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகள் பற்றியும், இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றியும், சமஷ்டி ஆட்சிமுறை பற்றியும் நிறைய எழுதியுள்ளேன். அடக்குமுறைகளுக்கு உள்ளாகும் பெண்களின் பிரச்சினை, மலையக மக்களின் பிரச்சினை, தலித் மக்களின் பிரச்சினை, மக்களின் கல்லாமை, வறுமை போன்ற பிரச்சினைகள் தொடர்பாக எழுதி வருகின்றேன். ஆட்சிமாற்றத்தின் அவசியம் பற்றியும் 19ம் அரசியல் யாப்பு திருத்தத்தின் முக்கியத்துவம் பற்றியும் 2014 டிசம்பர் இறுதிப் பகுதியில் எழுதியுள்ளேன்.

**இராமன்:- எழுத்துத் துறையில் உங்கள் இலட்சியம் யாது?**

**கா.தவபாலன்:-** "குரலற்ற மக்களின் குரல்" ஆக விளங்குதல்.

**இராமன்:- இலக்கியம் பத்திரிகைத்துறை தவிர்ந்த வேறு சமூக சேவைகள் ஏதும் செய்ததுண்டா? அவ்வாறாயின் விபரம் கூறுங்கள்.**

**கா.தவபாலன்:-** கண்டியில் வசித்த காலங்களில் நடனகலா வித்தகர் திருமதி உமா சிறீதரனை நடன ஆசிரியராகக் கொண்ட சத்தியசாயி கலாலயத்திலும், இசைக்கலை மாமணி திருமதி கலைவாணி ஜெகதீஸ்வரனைச் சங்கீத ஆசிரியராகக் கொண்ட இசைநடனக் கலாமன்றத்தி லும் செயற்குழு உறுப்பினராகப் பணியாற்றி, மலையகப் பிள்ளைகளின் மத்தியில் இசை, நடனத்துறைகளை வளர்க்க உதவிபுரிந்துள்ளேன். வருடா வருடம் "கலாஞ்சலி" என்ற பெயரில் கலை நிகழ்ச்சிகளையும் நடாத்தி வந்தோம். மேற்படி இரண்டு நிறுவனங்களையும் கண்டியில் ஆரம்பித்து வைத்த ஆரம்பகர்த்தாக்களில் நானும் ஒருவன் என்பதை பெருமையுடன் கூறிக் கொள்ள ஆசைப்படுகின்றேன். மேற்படி ஆசிரியர்மார் இரண்டு பேரும் இன்றும் தமது கலைச்சேவையை கண்டியில் தொடர்ந்தும் செய்து கொண்டிருக்கிறார்கள். இருவருமே யாழ்குடாநாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் என்ற தகவலையும் கூறிக் கொள்கிறேன். நான் தற்காலிகமாக வசித்த கண்டி மாவட்டத்தில் செய்த பத்து வருட சமூக சேவையைப் போல வேறெந்த மாவட்டத்திலும் சமூக சேவை செய்தது கிடையாது.

**இராமன்:- சங்கம் வளர்த்த அனுபவங்கள் உண்டா?**

**கா.தவபாலன்:-** ஆம், கண்டித் தமிழ்ச்சங்கச் செயற்குழு உறுப்பினராகவும் நூலகப் பொறுப்பாளராகவும், மலையக கல்வி மேம்பாட்டுக் கழகத்தின் உதவிப் பொதுச் செயலாளராகவும், இலங்கை உள் நாட்டு இறைவரிச் சேவைசங்கத்தின் செயற்குழு உறுப்பினராகவும், பேராதனை இந்துக் கல்லூரி அபிவிருத்திச் சங்கச் செயலாளராகவும் சேவை புரிந்துள்ளேன்.

**இராமன்:- மத்தியமாகாணம், ஊவா மாகாணம், சப்பிரகமுவ மாகாணம் ஆகிய மூன்று மலையக மாகாணங்களிலும் வசித்துள்ளீர்கள். மலையகம் பற்றியும், மலையக இலக்கியம் பற்றியும் ஜீவநதி வாசகர்களுக்கு ஓரளவு சுருக்கமாகக் கூறுங்கள்.**

**கா.தவபாலன்:-** மலையகம், மலைகளையும், ஆறுகளையும், நீர்வீழ்ச்சிகளையும், பச்சைப் பசேலென்ற வயல்களையும், தேயிலை, றப்பர், கோப்பித் தோட்டங்களையும், கொண்ட அழகான பிரதேசம். பெருந்தோட்டத் தொழிலாளர் மீதான முதலாளி வர்க்கத்தின் அடக்குமுறையும், சுரண்டலுமே மலையக இலக்கியத்தை பிரசவித்தது எனலாம். இற்றைக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் பிரிட்டிஷ்காரரால் இலங்கைக்குக் கூட்டி வரப்பட்ட தமிழக மக்களின் வழித்தோன்றல்கள் தான் இன்றைய மலையக மக்கள். முன்னரில் இருந்து மலைநாடுவரை இரவுபகலாக நடந்தே சென்ற தமிழக மக்களிற் பலரும், பின்னர் மலைக்காடுகளை வெட்டி வெளியாக்கிய தமிழ் மக்களிற் பலரும் மிருகங்களின் தாக்குதல், பாம்புக்கடி, தொற்றுநோய்கள், நோய்களுக்குரிய உரிய மருத்துவம் இன்மை போன்ற காரணங்களால் தமது இன்னுயிரை இழந்தார்கள். பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் இன்றுவரை வழங்கப்படாமை, குடும்பங்களுக்கென்று தனிக்காணிகள் வழங்கப்படாமையால் தொழிலாளர்கள் அகதிமுகாம் போன்ற லயன் காம்பராக்களில் இன்றுவரை வாழும் அவல வாழ்க்கை, மதுப்பாவனை அதிகரிப்பு, குடும்ப வன்முறை, பாலியல் வன்முறை, தொழிலாளர்களிடையே காணப்படும் வறுமை, கல்லாமை போன்ற பிரச்சினைகளே மலையக இலக்கியத்தின் பேசு பொருளாக உள்ளன என்று பொதுவாகக் கூறலாம்.

**இராமன்:- சஞ்சிகை ஆசிரியர்களுக்கும் உங்களுக்கும் ஏற்பட்ட அறிமுகம் பற்றிக் கூறுங்கள்?**

**கா.தவபாலன்:-** எனக்கு நடனம், சங்கீதம் போன்ற துறைகளில் சிறு வயதில் இருந்தே விருப்பம் இருந்து வந்தது. கண்டியில் வசித்த காலங்களில் அங்கு நடைபெறும் கலை இலக்கிய நிகழ்ச்சிகளை (2001-2010) தொகுத்து ஞானம், "சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்" பகுதிக்கு அனுப்பி வந்தேன். அத்துடன் ஞானம் "வாசகர் பேசுகிறார்" பகுதிக்கும் வாசகர் கடிதங்களை எழுதி வந்தேன். ஞானம் சஞ்சிகையில் எனது முதலாவது சிறுகதையும்,முதலாவது கவிதையும் பிரசுரமானது. ஞானம் ஆசிரியரை நேரிற் சந்தித்து எனது மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக் கொண்டேன்,

மனைவி சங்கிலியைக் கள்ளன் அறுத்துக் கொண்டு ஓடியதாக எழுதிவிட்டு கதையை முடிக்கும் போது பறிபோன சங்கிலி வெறும் இமிற்றேஷன்தான் என்று கூறும் கதையொன்றை எழுதிச் செங்கதிருக்கு அனுப்பினேன் அதன் ஆசிரியர் செங்கதி ரோன் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பிரசுரத்துக்கு ஏற்றதாக கூறியபோது மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.

அதன் பின்னர் முறிப்புக்குளம் என்ற தலைப்பில்

சிறுகதையொன்றை எழுதிக் கொண்டு அதனை மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா அவர்களிடம் நேரிற் கையளிக்கும் முகமாகக் கொழும்புக்குச் சென்றேன். புறக்கோட்டையில் அமைந்திருந்த மல்லிகைக் காரியாலயத்திற்குச் சென்ற போது அவர் தனது ஆசனத்தில் அமர்ந்தபடி ஏதோ வாசித்துக் கொண்டிருந்தார். நான் வணக்கம் சொன்னதும், நிமிர்ந்து பார்த்து விட்டு இன்முகத்துடன் "வாங்கள், அமருங்கள்" என்று ஆசனத்தைக் காட்டினார். அமர்ந்து கொண்டேன். "வந்தது என்ன விஷயம்" என்று கேட்டார். "நான் ஒரு எழுத்தாளர் ஒரு சிறுகதையைக் கொண்டு வந்துள்ளேன். அதனை மல்லிகையில் பிரசுரிக்க முடியாமா" என்று கேட்டேன். கதையை வாங்கி மேலோட்டமாக வாசித்துவிட்டு மேசைமீது வைத்துக் கொண்டார். மல்லிகைப்பந்தல் நூல்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஆசிரியரின் சுயசரிதை உட்பட சில நூல்களை வாங்கி பணம் கொடுத்துவிட்டு விடைபெற்றுக் கொண்டேன். அடுத்த மாதமே எனது கதை மல்லிகையில் பிரசுரமானது கண்டு மிகவும் மகிழச்சியடைந்தேன்.

எனது ஆக்கங்களை ஜீவநதி சஞ்சிகையில் தொடர்ந்து பிரசுரித்து வரும் திரு க. பரணீதரன் அவர்களை 2011 இல் நடைபெற்ற எழுத்தாளர் மாநாட்டில் கண்டு அறிமுகமானேன். அமைதியான தோற்றமுள்ள இளைஞர். இவ்வளவு குறைந்த வயதில் ஒரு இலக்கியச் சஞ்சிகையை வெளியிடுவது என்னை பிரமிக்க வைத்தது.

தாயகஒலி சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் திரு தம்பு சிவா அவர்கள் வருமானவரி திணைக்களத்தில் பணியாற்றியவர். என்னைவிட 4 வருடங்கள் சீனியர். அக்காலத்தில் கற்பகம் என்ற சஞ்சிகையை வெளியிட்டவர். ஒரு இடதுசாரி எழுத்தாளர். 1970 ம் ஆண்டில் இருந்தே இவருடன் நான் பழகி வந்துள்ளேன். சிங்களப் பெண்ணைத் திருமணம் செய்து தனது பெயரையும் சிங்களப் பெயராக மாற்றிக் கொண்ட தமிழர் ஒருவர் 1983 கலவரத்தின்போது தனது சொந்தத் தாய் தகப்பனையே காப்பாற்ற முடியாமற்போனது தொடர்பான ஒரு கதையே "தாயகஒலி" யில் நான் எழுதிய முதலாவது கதை ஆகும்.

பூங்காவனம் சஞ்சிகையின் ஆசிரியர் "செல்வி றிம்சா" என்னுடன் தொடர்பு கொண்டு தமது சஞ்சிகைக்கும் ஆக்கங்களை அனுப்புமாறு கேட்டக் கொண்டார். அதன்பின் அச்சஞ்சிகைக்கும் ஆக்கங்களை அனுபத் தொடங்கினேன். மேற்கூறிய 6 சஞ்சிகை ஆசிரியர்களுக்கும் மீண்டும் எனது நன்றிகளை ஜீவநதி ஊடாக தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**இராமன்:- யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் கல்வித்துறையும், இலக்கியத்துறையும் எந்த அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளன?**

**கா.தவபாலன்:-** முல்லைத்தீவு மாவட்டம் நீண்ட காலமாகவே ஒரு பின்தங்கிய மாவட்டமாக இருந்து வந்துள்ளது. யுத்தம் முடிந்த பின்னர் கல்வித்துறையிலும் இலக்கியத்துறையிலும் படிப்படியான வளர்ச்சி ஏற்பட்டு வருகின்றது. சஞ்சிகை அறிமுக விழாக்களை நடத்தி இப்பகுதியில் வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்க வேண்டும் என்பது எனது அபிப்பிராயம்.

**இராமன்:- முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கலை இலக்கியச் செயற்பாட்டாளர்கள் பற்றிக் கூற முடியுமா?**

**கா.தவபாலன்:-** கா.தவபாலன், முல்லை மைந்தன், யோ.புரட்சி, வன்னியூர் செந்தூரன், வே.முல்லைத் தீபன், அளம்பில் ரமேஷ், முல்லைகோணேஸ், அலெக்ஸ் பரந்தாமன், முல்லை முஸ்ரிபா, அ.பால மனோகரன், கலாநிதி முல்லைமணி, பேராசிரியர் நா.சுப்பிரமணியன் போன்றவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அரியான் பொய்கை செல்லத்துரை,(நாடகம்), க.சரவணபவன்(நாடகம்), மெட்றாஸ்மெயில்(கூத்து) ஆகியோர் காலமாகி விட்டார்கள். திருமதி விக்னேஸ்வரன்(கர்நாடக சங்கீதம்) தற்போது கண்டியில் ஆசிரியை ஆகப் பணிபுரிந்து வருகின்றார். நாடகத்துறை ஊடகத்துறை, வரலாற்றுத் துறை ஆகியவற்றுடன் தொடர்புள்ள அருணா செல்லத்துரை வற்றாப்பளையைச் சேர்ந்தவர். ஊடகத் துறையைச் சேர்ந்தவரும் தற்போது வெளிநாட்டில் வசிப்பவருமான இளைய அப்துல்லாவும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர் என நம்புகின்றேன். அனைவரும் ஒன்றிணைந்து முல்லைத்தீவு மாவட்டத்துக்கென்று தனியான கலை, இலக்கிய அமைப்பொன்றை உருவாக்க வேண்டுமென்று ஜீவநதி ஊடாக வேண்டுகோள் விடுக்கின்றேன். வவுனியா கிளிநொச்சி மாவட்டங்களுக்கென்று தமிழ்ச்சங்கங்கள் தனினாயக உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

**இராமன்:- இலக்கியம் பண்டிதத் தமிழில் படைக்கப்பட வேண்டுமா? அல்லது இலகு தமிழிற் படைக்கப்பட வேண்டுமா? இது பற்றிய உங்கள் அணுகுமுறை என்ன?**


**கா.தவபலான்:-** படித்த மக்களுக்காகப் படைக்கப்படும் இலக்கியத்தை பண்டிதத் தமிழில் படைத்தால் பரவாயில்லை. ஆனால் இலகு தமிழிற் படைக்கப்படும் இலக்கியம் மட்டுமே படித்தவர் பாமரர் அனைவரையும் சென்றடையும் என்பது எனது அபிப்பிராயம்.

**இராமன்:- ஜீவநதிக்கான உங்கள் செய்தி என்ன?**

**கா.தவபாலன் :-** ஜீவநதி என்ற தரமான இலக்கிய சஞ்சிகையில் எனது நேர்காணல் பிரசுரிக்கப்படுவது பற்றி மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த வகையில் அதன் ஆசிரியர் திரு. க. பரணீதரன் அவர்களுக்கு நன்றிகள்.

இ.சு. முரளிதரன்

# கிட்கிந்தா காண்டத்தில் "தவளை"



வாலற்ற ஈரூடகவாழியான தவளை அறிவியல் வகைப்பாட்டில் அனுரா (Anura) என்றழைக்கப்படும் வகுப்பினைச் சேர்ந்ததாகும். ஆர்டிக், அண்டாட்டிக் துருவப் பகுதிகள் தவிர்த்து, உலகெங்கும் ஐயாயிரத்திற்கும் அதிகமான பன்முக இனங்களாக வாழும் தவளைகளை, பாடும் உயிரியாக இலக்கியங்கள் விதந்து பேசுகின்றன. மீனிலிருந்து தவளையும், தவளையிலிருந்து குரங்கும், குரங்கிலிருந்து மனிதனும் கூர்ப்படைந்ததாக பரிணாமக் கோட்பாடு குறிப்பிடுகின்றது. யப்பானியக் கவிதைகளில் தவளைகள் சிறப்பிடம் பெறுகின்றன. அவுஸ்திரேலியா "குயின்ஸ்லாண்ட்" பகுதி மக்கள் தவளைகளோடு பழகுவதில் தனியின்பம் காண்கின்றனர். தமிழிலக்கியங்களிலும் தவளைகள் குறித்த பல பதிவுகள் சுவாரஸ்யமாக இடம் பெற்றுள்ளன. அந்த வகையில் கம்பராமாயணம் கிட்கிந்தா காண்டத்திலே நுண்ணிழைமிகு கவித்துவத்தோடு தவளை பற்றிய அடர்த்தியான கற்பனையினை தரிசிக்க முடிகிறது.

சீதையைத் தேடியலைகின்ற இராம பிரான் பம்பை என்னும் பொய்கையினை அடைகின்றான். அப்பொய்கையின் பண்பினை எழிலான கற்பனையூடாகக் கம்பர்வெளிப்படுத்தும் பாங்கு அற்புதமானது. பம்பைப் பொய்கையிலே வாளை மீன்கள் வாள் போன்று நீரிலே செல்ல, நீர் நாய்கள் கழைக் கூத்தாடிகள் மூங்கிலின் மீது செல்வதைப்போலவும், கத்திகளின் குறுக்கே பாய்ந்து சாகசம் நிகழ்த்துவதைப் போலவும், வாளை மீன்களின் மேல் நடனம் புரிவதைப் போலச் செயற்பட அந்நிகழ்வைக் கண்டு புகழ்ந்து பாராட்டுவதைப் போல தவளைகள் கத்துவதாகக் கம்பனின் கருத்தேற்றம் தகுநயமாக அமைகின்றது.

"வலி நடத்திய வாளென வாளைகள் பாய
ஒலி நடத்திய திரை தொறும் உகள்வன நீர் நாய்
கலி நடைக் கழைக் கண்ணுள் என நடம் கவினப்
பொலிவுடைத்தெனத்தேரைகள்புகழ்வன போலும்"

மழை காலத்திலே இராமபிரான், சீதா பிராட்டியின் பரிவை எண்ணிப் புலம்புவதை வெளிப்படுத்தும் படலமாகக் "கார் காலப்படலம்" அமைகின்றது. அடர்த்தியான ஒப்புமையின் துணைகொண்டு கார் காலத்தின் இறுதியைக் கம்பர் கவித்துவ வாசனை கமழப் பதிவு செய்கிறார். முடிவிலி அர்த்தம் சுமக்கும் தவளையின் குரலை அழகுற வெளிக் கொணர்கிறார்.

"கல்வியில் திகழ் கணக்காயர் கம்பலைப்
பல்விதச் சிறார் எனப் பகர்வ பல்லரி
செல்விடத்து அல்லதொன்று உரைத்தல்செய்கலா
நல்லறி வாளரின் அவிந்த நா எலாம்"

ஆசிரியர்களிடம் கல்வி கற்கும் சிறுவர்கள் கூட்டாகச் சேர்ந்து சத்தமிட்டுப் படிப்பதே வழக்கமாகும். அச்சிறுவர்கள் போல ஒன்றிணைந்து பாடிய தவளைகள் மழைக்கால முடிவிலே ஓய்வடைந்து அடங்கிப் போயின. இந்நிகழ்வானது நல்லறிவுடையோர் உரிய இடத்திலே தவிர ஏனைய இடங்களில் எதனையும் பேசாது அமைதி காத்தலைப் போல அமைந்திருப்பதாகக் கம்பர் சிறப்பிக்கின்றார். இன்னிசையடுக்குகளை இயல்போடு கட்டியெழுப்பும் மழைக்காலப் பாடகனான தவளை குறித்த பதிவினை வசீகரமாக வெளிப்படுத்தியுள்ளார்.


சீதையைத் தேடிச் செல்லும் வானர வீரர்கள் தொண்டை நாட்டினை அடைகின்றனர். அந்நாட்டின் வளத்தினை வியக்கின்றனர். தொண்டை நாட்டின் செழிப்பினை நயாதீதம் மிளிரும் புனைவொன்றிலே கம்பநாடன் காட்சிப்படுத்தும் விதம் அலாதியானது. தேர் போன்ற உயர்ந்த தென்னை மரத்தின் பாளையைக் கண்டு நாரை என்று கருதிக் கெண்டை மீன்கள் நடுங்குகின்றன. கூர்மையான நுனியும் வலிமையான தலையாகிய அரும்பினையும் கொண்ட அல்லிமலர்த் தண்டைக் கண்டு தவளைகள் சாரைப்பாம்பெனக் கருதி நடுங்குவதாகக் கம்பர் காட்சிப்படுத்துகிறார்.

"தேரை வென்றுயர் தெங்கிளம் பாளையை
நாரை யென்று நடுங்குவ கெண்டை மீன்
தாரை வன்தலைத் தண்ணிள ஆம்பலைச்
சேரை யென்று புலம்புவ தேரையே"

என்று புனைவின் வழி நிகழ்த்தும் இந்திரஜாலத் தொடுகை (Magic Touch) கம்பநாடனின் ஆளுமையை பூரணமாக இனங்காட்டுகிறது.

•

அ. யேசுராசா



# நினைவுக் குறிப்புகள் - II

கொழும்பில் முதலில் வேலை பார்க்கும் போதே, *1968* அளவில் பிறமொழிக் கலைத் திரைப்படங்களுடன் அறிமுகம் ஏற்பட்டது. அதன் பிறகு, கொழும்பில் நடைபெற்ற எந்தத் திரைப்பட விழாப் படங்களையும் பார்க்கத் தவறவில்லை. பேராதனைக்குச் சென்ற பிறகும், திரைப்பட விழாக்கள் நடைபெறும்போது கொழும்பு வந்து செல்வது வழக்கமாகியது. மூன்றரை மணிநேரப் பேருந்துப் பயணத்தில் கொழும்பு வந்துவிடலாம்; தங்கி நிற்பதற்கு நண்பர்களின் அறைகள் இருந்தன. இரண்டாம் தடவையாகக் கொழும்பில் கடமையாற்றிய *1980 – 1984* காலங்களில், திரைப்பட விழாக்களுடன் யேர்மன் கலாசார நிலையம், பிரான்சிய நட்புறவுக் கழகம், சர்வதேச கத்தோலிக்கப் பட நிறுவனம் (O.C.I.C) ஆகியவற்றின் திரைப்பட நிகழ்ச்சிகளையும் தவறாது பார்த்துள்ளேன். யாழ்ப்பாணத்துக்கு மாற்றலாகிச் சென்ற பிறகும், *1990* வரை, திரைப்பட விழாக்களுக்காகக் கொழும்பு வந்து ஒரு கிழமை வரை தங்கிநின்று செல்வேன். அதன் பிறகு நெருக்கடிச் சூழலும், பயணப் பிரச்சினைகளும் பெரிதாகி, 'மூடுண்ட யாழ்ப் பாணத்தில்' வாழ்க்கை என்றான பிறகு, கொழும்பு வருவது நின்றுபோனது. மறுபடி கொழும்பு வந்ததே *2001* இல் இலண்டன் பயணத்துக்காகத்தான்.

1

பிறமொழிப் படங்கள் பார்க்கும் வாய்ப்பைத் தவறவிட ஒருபோதும் மனம் ஒப்புக்கொள்வதில்லை. பேராதனையில் வேலை செய்தபோது ஒரு நாள் – *14.12.1972* அன்று, நாவலப்பிட்டியில் இரண்டு நாள்கள் செக்கோ ஸ்லோவாக்கியப் பட விழா ஆரம்பமாகி இரண்டு நாள்கள் நடைபெறும் என்ற செய்தியை, வீரகேசரி நாளேட்டில் பார்த்தேன். அவ்வேளை மல்லிகை இதழில் எழுதிவந்த நாவல்நகர் மகாலிங்கமும் சிலரும் சேர்ந்துதான் அவ்விழாவை ஒழுங்கு செய்வதாகவும் தெரிந்தது. செக்கோ ஸ்லோவாக்கியப் படங்கள் பொதுவில் மிகச் சிறப்பானவை. எனவே, ஒரு நாளாவது செல்லவேண்டுமென நினைத்தேன். நாவலப்பிட்டி ஓரளவுக்குத் தொலைவில்தான் உள்ளது. எனினும், என்னுடன் அறையில் தங்கியுள்ள நண்பர் முருகதாஸ் தானும் வருவதாகச் சொன்னதில், முதல் நாளன்று இருவரும் சேர்ந்து இரவுக் காட்சிக்காகப் பேருந்தில் சென்றோம். அன்று The Key என்னும் படம் திரையிடப்பட்டது. அருமையான படம். படத்தைப் பார்த்துவிட்டுப் பேராதனைக்குத் திரும்பியபோது நள்ளிரவாகிவிட்டது.

அந்தப் படம் யன்சிகா என்ற கொம்யூனிஸ்ற் போராளியைப் பற்றியது. யேர்மன் நாசிப் படைகள் செக்கோ ஸ்லோவாக்கியாவைக் கைப்பற்றி வைத்திருந்த காலப்பகுதி. ஓர் உயர் இராணுவ அதிகாரியைக் கொல்வதற்கான முயற்சி தவறிப் போனபிறகு, தாக்குதலாளிகளைத் தேடும் நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டன. தலைமறைவு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் குழுவைச் சேர்ந்த, யன்சிகா என்ற முக்கியமான போராளி தங்கியிருந்த அடுக்கு மாடிக் குடியிருப்பும், தேடுதலுக்கு உள்ளாகிறது. குளியலறையில் முதலில் ஒளித்திருந்து அது பாதுகாப்பானதல்ல என்ற நிலையில், அந்த அறையின் யன்னலால் வெளியேறி, கையில் கயிறொன்றைச் சுற்றிக் கட்டியபடி, வெளியே அந்தரத்தில் தொங்குகிறான்... துரதிர்ஷ்ட வசமாகக் கயிறு அறுந்ததில் நிலத்தில் வீழ்கிறான்; வீழ்ந்த சத்தத்தைக் கேட்டதில் இராணுவ வீரர்கள் ஓடிவந்து சுற்றி வளைத்துப் பிடிக்கின்றனர்; அவனிடமிருந்து சிறிய திறப்பொன்றும் எடுக்கப்படுகிறது. காயத்துக்குச் சிகிச்சை அளித்தபின்னர், ஓர் அறையில் விசாரணை தொடங்குகிறது.

விசாரணையாளன், "நீ யார்.... ?" எனக் கேட்கிறான்.

அவன் பதில் சொல்வதில்லை.

"நான்...!" எனத் தனக்குள் நினைப்பவனின் கோணத்தில், பசுமையான மலையடிவாரப் பகுதியில், "யன்சிகா" எனக் காதலி அழைக்க, மகிழ்ச்சியுடன் அவளைத் தேடி அவன் ஓடுவதும் மகிழ்வுடன் கழித்த பொழுதுகளும் காட்டப்படும்.

" உன்னுடைய தோழர்கள் யார்...?" எனக் கேட்கப்படுகிறது.

"தோழர்கள்...." என நினைப்பவனின் பார்வையில், ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக, இலட்சிய அர்ப்பணிப்புடன் தலைமறைவாகக் கூடிச் செயற்பட்ட தோழர்களுடனான காட்சிகள் தெரிகின்றன.

"இது என்ன....?" எனத் திறப்பைக் காட்டி விசாரணையாளன் கேட்கிறான்.

தலைமறைவு எதிர்ப்பு நடவடிக்கையின்போது அவர்களின் குழு, மொஸ்கோவுடன் தொலை தொடர்புக் கருவிமூலம் இரகசியச் செய்திகளைப் பரிமாறுகிறது. தொலை தொடர்புக் கருவி ஒரு வயலின் பெட்டியுள் மறைத்து வைக்கப்பட்டுள்ளது; அப்பெட்டியைத் திறப்பதற்குரிய சிறிய திறப்புதான் அது!

பிடிபட்டதிலிருந்து ஒரு சொல்லேனும் யன்சிகா பேசுவதில்லை; எல்லாக் கேள்விகளுக்கும் மௌனமே பதில்! விசாரணையாளன் ஏமாற்றத்தில் களைப் படைகிறான். ஒரு நாள், கைவிலங்கிடப்பட்ட நிலையில்

தனி அறையிலுள்ள யன்சிகா, தண்ணீர்க் கிளாசை எடுத்து அதன் விளிம்பை உடைத்துத் தனது மணிக்கட்டை வெட்டிக்கொள்கிறான். காயத்திலிருந்து இரத்தம் பெருகி ஓட மயங்கிவிடுகிறான்; அப்படியே இறந்துவிடுகிறான்! தோழர்களைக் காட்டிக் கொடுத்து விடக்கூடாது என்ற ஓர்மத்திலேயே, அப்போராளி தற்கொலை செய்கிறான்! அவனது இலட்சிய அர்ப்பணிப்பும் தியாகமும் பார்வையாளரை உலுக்கி விடுகிறது. எதிர்ப்பு அரசியல் சூழலைக்கொண்ட ஒரு படமாயினும், காட்சிப்படுத்தப்பட்ட முறையில் பிரச்சார மெதுவுமில்லாத, திரைப்பட அழகியல் அம்சங்களைக் கொண்ட சிறந்த படமாக அது அமைந்திருக்கிறது. நமது 'முற்போக்காளர்கள்' மட்டுமல்ல தமிழ்த் தேசியப் படைப்பாளிகளும் கற்றுக்கொள்வதற்கு, இப்படத்தில் நிறைய விடயங்கள் உள்ளன எனவும் தோன்றுகிறது!

1971 இல் உருவாக்கப்பட்ட இப்படத்தை நெறியாள்கை செய்திருப்பவர், 'விளாடிமிர் செக்' ஆவர். ஏழாவது மொஸ்கோ திரைப்பட விழாவில், இத்திரைப் படம் 'வெள்ளி விருது' வென்றமையும் குறிக்கத்தக்கது.

முருகதாசுக்கும் எனக்கும் படம் மிகவும் பிடித்துக்கொண்டது; இவ்வளவு தூரம் வந்தது பெறுமதியானதே என்ற திருப்தியும் ஏற்பட்டது. பேருந்தில் திரும்பி வரும்போதும், பேராதனையில் தங்கியிருக்கும் அறைக்கு வந்த பின்னரும்கூட, படத்தின் உணர்வுச் சூழலிலேயே மனம் சஞ்சாரம் செய்தது. அறையில் சேர்ந்து வசிக்கும் முருகதாசும், தங்கராஜா என்ற மற்ற நண்பரும் உறங்கிய பின்னர், வெளிச்சத்தைத் தணித்தபடி மேசை முன் அமர்ந்தேன்; எனது மனதில் கிளர்ந்துகொண்டிருந்த உணர்வுகளை அன்றிரவே ஒரு கவிதையாக எழுதினேன்.

கவிதையின் தலைப்பு : 'சுவடுகளைத் தொடருதல்...'

அக்கவிதையின் வரிகள் சில வருமாறு:

"…. தோழா வா!
இந்த வழியில்தான்
நம்முடைய தோழர் முன்நடந்து, போனார்கள்.
ஓங்கி இரைகின்ற
காற்றில் அலையில்,
அவருடை மூச்சும்
கலந்து உளதே!;
கீழ், மேல் வானில் தெரிந்திடு சிவப்பில்
அவருடைக் குருதியும் படிந்தே உளது.

....
சுரண்டல்களில்லாப் புதிய பூமியில்
சுதந்தி ரத்தின் கதகதப்பான,
மூச்சுக் காற்றினை முகரும் முனைப்பில்
தங்கள் குருதியைச்
சதையினை உயிரினை,
எம்முடைத் தோழர் இழந்து போயினர்.

'ஜூலியஸ் பூசிக், நகுயென் வான்டிராய்,
சாரு மஜூம்தார், யன்சிகா' எனவும்

இன்னும்.... இன்னும்....
பேரறியாத எம்முடைத் தோழர்,
தங்கள் குருதியைச்
சதையினை எலும்பினை,
உயிரினையெல்லாம் இழந்தே போயினர்.


அவருடைக் குருதி படிந்துள சிவப்புக்
கொடியும் காலடித் தடங்கள் பதிந்த,
பாதையும் முன்னால்
விரிந்தே உள்ளன.
...."

அப்போது கொழும்பிலிருந்து செ. கணேசலிங்கன் மாதந்தோறும் வெளியிட்டுக் கொண்டிருந்த 'குமரன்' இதழுக்கு, இக்கவிதையை அனுப்பி வைத்தேன்; மாதங்கள் பல சென்றும் கவிதை வெளிவர வில்லை. ஒருநாள் யோ. பெனடிக்ற்பாலனுடன் கதைக்கும்போது, குமரனுக்குக் கவிதை அனுப்பியும் வெளிவராத கதையைச் சொன்னேன். அவருக்குக் கணேசலிங்கனுடன் நல்ல தொடர்பு இருந்தது; அவரது படைப்புகள் குமரன் இதழில் அடிக்கடி வந்துகொண்டு மிருந்தன. அவர் கணேசலிங்கனிடம் இதுபற்றித் தெரிவித்திருக்கிறார்; ஒருநாள் புதிய குமரன் இதழைப் பிரித்துப் பார்த்தபோது, எனது கவிதையைக் கண்டு ஆச்சரியமடைந்தேன்!

2

கம்பெரலிய(1964), (1965 இல் டெல்லியில் நடைபெற்ற மூன்றாவது உலகத் திரைப்பட விழாவில், தங்க மயில் விருதை இது பெற்றுள்ளது.), ரேகாவ(1956), சந்தேசய(1960), தெலொவக் அத்தர(1966), ரன்சலு (1967), கொளு ஹதவத்த(1968) ஆகிய சிங்களப் படங் களைப் பார்த்ததில், அவற்றின் நெறியாளரான லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ் மீது மிக்க ஈடுபாடு கொண்டிருந்தேன். அவர் ஆசியாவின் முக்கிய திரைப்பட நெறியாளரில் ஒருவருமாவார். கொழும்பு கலை இலக்கிய நண்பர் கழகம் இயங்கிக் கொண்டிருந்த காலம். மாவை நித்தியானந்தனும், தில்லைக்கூத்தனும் நானும், லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிசைச் சந்தித்து உரையாடத் தீர்மானித்து, அவருடன் ஒரு சந்திப்பை ஒழுங்கு செய்தோம். துரதிர்ஷ்டவசமாக அலுவலகக் கடமை காரணமாக, அச்சந்திப்புக்கு என்னால் செல்ல இயலவில்லை; நண்பர்கள் மாவை நித்தியானந்தனும் தில்லைக்கூத்தனும் சென்று லெஸ்ரருடன் உரை யாடினர்; பின்னர் அதுபற்றிய கட்டுரையை இருவரும் சேர்ந்து எழுதி மல்லிகைக்கு அனுப்ப, 1970 புரட்டாதி மல்லிகை இதழில் அது வெளியானது. அக்கட்டுரையில் மிக முக்கியமான யப்பானிய நெறியாளர்களான இசிக்காவோ, ஒசு ஆகியோரைப் பற்றிய குறிப்பும் இடம்பெற்றுள்ளது. இவர்களைப் பற்றி முதன்முதலாக அப்போதுதான் அறிந்து கொண்டேன். பிற்காலங்களில் அவர்களைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள முடிந்தாலும், அவர்களது திரைப் படைப்புகளைப் பார்க்கும் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை.

1997 – 1998 ஆம் ஆண்டுக் காலங்களில் தமிழகத்தில் தங்கியிருக்க நேர்ந்தது. இடைக்கிடை



யசுஜிரோ ஒசு

சென்னை சென்று, தாம்பரத்தில் பேராசிரியர் குடியிருப்பிலுள்ள ஐங்கரநேசனின் இல்லத்தில், ஒரு கிழமை வரை தங்குவேன். அவ்வாறு ஒருமுறை தங்கிய போது, தினமணி செய்தித்தாளில் ஒரு செய்தியைக் கண்டேன். ம. சிவகுமார் எழுதிய 'சினிமா ஓர் அற்புத மொழி' நூலின் வெளியீட்டு நிகழ்வு சோவியத் கலாசார இல்லத்தில் நடைபெறுமென்றும், தொடர்ந்து 'யசுஜிரோ ஒசு'வின் 'ரோக்கியோ ஸ்ரோறி' திரைப்படம் திரையிடப்படும் என்பதுமே அச் செய்தியாகும். சிவகுமார் மொழி பெயர்த்த, ஹங்கேரியரான பேல பெலசின் புகழ்பெற்ற 'சினிமாக் கோட்பாடு' என்னும் நூலினை, ஏற்கெனவே யாழ்ப்பாணத்தில் படித்திருக்கிறேன். எனவே, இரண்டு நிகழ்வையும் தவற விடக்கூடாது என்று தீர்மானித்துக் கொண்டேன். நூல் வெளியீட்டின்போது நூலாசிரியரின் கையெழுத்தையும் பெற்றுக்கொண்டேன். கையெழுத்திட்டு, 30.8.97 எனத் திகதியையும் அவர் குறித்துத் தந்தார். அந்த நூல் இன்னும் என்னிடம் பத்திரமாக இருக்கிறது.

**

ரோக்கியோ ஸ்ரோறி 1953 இல் உருவாக்கப்பட்ட கறுப்பு வெள்ளைத் திரைப்படம். தொலைவில் உள்ள சிறு நகரில் வசிக்கும் கணவனும் மனைவியுமான இரண்டு முதியவர்கள், ரோக்கியோவில் வசிக்கும் மூத்த மகனையும் மூத்த மகளையும், யுத்தத்தில் எட்டு ஆண்டுகளின் முன் மரணமடைந்த இரண்டாவது மகனின் மனைவியான மருமகளையும் சந்தித்து வர, தொடருந்தின் மூலம் வருகின்றனர். ஆசிரியையான இளைய மகளை வீட்டில் விட்டுவிட்டே வருகின்றனர். ரோக்கியோவில் மூத்த மகனின் வீட்டில் முதலில் தங்குகின்றனர்; பின்னர் மகளின் வீட்டுக்கும் சென்று தங்குகின்றனர். பேரப் பிள்ளைகளையும் காண்பதில் முதியவர் இருவரும் மகிழ்கின்றனர். மகள் அழகுபடுத்தும் நிலைய மொன்றை நடத்துகிறாள்; மகன் மருத்துவர். இருவரும் தொழிலில் அக்கறை காட்டுவதில், பெற்றோருடன் நேரத்தைச் செலவளிக்கத் தயங்கு கின்றனர். சுயநலத்துடன், பெற்றோருக்கு இடங்களைச் சுற்றிக் காட்டும் பொறுப்பினைத் தம்பியின் விதவையிடம் ஒப்படைக்க முயல்கின்றனர்; தனியார் நிலையத்தில் வேலை செய்யும் அவளோ லீவு எடுத்து, மகிழ்ச்சியுடன் மாமியாரையும் மாமனாரையும் ரோக்கியோவின் பல இடங்களுக்கும் அழைத்துசென்று காட்டுகிறாள். அவர்களும் மகிழ்கின்றனர்; மருமகள்மீது பாசம்கொள்கின்றனர். மகனும் மகளும் பிறகு, சிலநாள்களுக்கு ஓரிடத்திலுள்ள விருந்தகத்தில் தங்கிவருமாறு பணத்தைக் கொடுத்துப் பெற்றோரை அனுப்பி வைக்கின்றனர். அங்கு அவர்கள் மகிழ்ச்சியடையக் கூடியவை இருந்தாலும், இரவில் நடைபெறும் களியாட்டங்களினால் நன்கு நித்திரைகொள்ள முடியவில்லை. எனவே, இரண்டு நாளில் திரும்ப மகளின் வீட்டுக்கே வருகின்றனர்; மகளோ எரிச்சல் படுகிறாள்; அன்றிரவு பலர் கூடும் நிகழ்ச்சியொன்று வீட்டில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது என்றும் புறுபுறுக்கிறாள்.

முதியவர் இருவரும் வெளியே செல்கின்றனர். அன்றிரவு தகப்பன் தனது பழைய நண்பனைத் தேடிச் சென்று, இன்னொரு நண்பனுடனும் சேர்ந்து முன்னரைப்போல் குடிக்கிறார். முதியவரான தகப்பன், முன்பு கல்வித் திணைக்களத்தில் உயர் அதிகாரியாக இருந்து ஓய்வுபெற்றவர். பழைய கதைகளைப் பகிர்ந்து நீண்டகாலத்தின் பின்னான தமது சந்திப்பை மூவரும் கொண்டாடுகின்றனர். குடித்துத் தள்ளாடும் நிலையில், ஒரு நண்பனுடன் நள்ளிரவில் மகளின் வீட்டுக்கு வருகிறார்; மகள் அவர்களின் நிலைகண்டு கோபத்துடன் பேசியபடி, படுக்க இடம் அளிக்கிறாள். "பிள்ளைகள் பெற்றோரின் எதிர்பார்ப்புக்கு அமைய இருப்பதில்லை" எனக் கிழவர்கள் இருவரும், பல தடவைகளில் கதைக்கின்றனர்.

தாய்க் கிழவி அன்றிரவு மருமகளிடம் சென்று தங்குகிறாள். மருமகளின் அக்கறையும் பாசமும் பராமரிப்பும், கிழவியை நெகிழப்பண்ணுகின்றன. எப்போதும் சிரித்தபடி கதைக்கும் மருமகளிடம், அவள் மறுமணம் புரிய வேண்டுமென வலியுறுத்துகிறாள். தனிமை கொடியது என்பதால், அவளொரு துணையைக் கட்டாயம் தேடவேண்டுமென்கிறாள்; இறந்த தனது மகனை மறந்து, புது வாழ்க்கையை அமைக்கவேண்டும் என்கிறாள். மருமகளோ வெட்கத்துடன் சிரித்தபடி ஒன்றும் சொல்லாது சமாளிக்கிறாள். காலையில் மாமியார் புறப்படும்போது, மருமகள் கொஞ்சம் பணத்தைக் கொடுக்கிறாள்; மாமியார் பெற மறுத்தபோதும் வற்புறுத்திக் கொடுக்கிறாள்.

முதியவர்கள் இருவரும் பிள்ளைகளின் நடத்தையில் ஏமாற்றம் அடைகின்றனர்; ரோக்கியோவில்



தங்களை 'வீடற்றவர்களாக' உணர்கின்றனர். எனவே சொந்த ஊருக்குத் திரும்புகின்றனர்; தொடருந்தில் வரும் வழியில் ஓசாகா தொடருந்து நிலையத்தில், மூன்றாம் மகனைச் சந்திக்கவும் ஒழுங்கு செய்கின்றனர். ஆனால் கிழவி சுகவீனமடைந்ததில், ஓசாகாவில் அவனுடன் சில நாள்கள் தங்க நேர்கிறது. பின் வீடு வந்த சிலநாள்களில் கிழவி மறுபடியும் நோய் வாய்ப்படுகிறாள்; இறந்தும்விடுகிறாள். மூத்த மகனும் மகளும், மருமகளும் ரோக்கியோவிலிருந்து மரண வீட்டுக்கு வருகின்றனர். இளைய தம்பி நேரத்துக்கு வந்திராததைச் சுட்டிக்காட்டி, மூத்தவள் கோபிக்கிறாள் (வெளியூர் சென்றதில் தாமதமாகவே செய்தி அறிந்து, பின்னர் அவன் வருகிறான்). மரண வீட்டுக்கான உடையைக் கொண்டு வராததற்காக மைத்துனியையும், அவ்வுடையைத் தயாராக வைத்திராதமைக்காகத் தங்கையையும் அவள் கோபிக்கிறாள். தாயின் ஞாபகமாக, அவளது குறிப்பிட்ட - பெறுமதியான 'கிமோனோ'வையும் வேறு சில பொருள்களையும் தனக்குத் தரும்படியும், தங்கையை வற்புறுத்துகிறாள். ரோக்கியோவில் அதிக வேலைகள் உள்ளதெனக் கூறி, மறுநாளே மூத்தமகனும் மகளும் சென்றுவிடுகின்றனர்; அடுத்து இளையவனும் போகிறான். ஆனால் மரு மகளோ சிலநாள்கள் தங்குகின்றாள். அண்ணனும் அக்காவும் சுயநலம் மிக்கவரெனத் தங்கை அண்ணி யிடம் குமுறுகிறாள். "வாழ்க்கையில் பொறுப்புக்கள் இருக்கின்றன; மனிதர்கள் அதற்கேற்பத்தான் நடந்து கொள்கின்றனர்" என, அவள் சமாதானப்படுத்துகிறாள்.

இளைய மகள் பாடசாலைக்குச் செல்கிற போது, பின்னேரத் தொடருந்தில் தானும் பயணப்படுவ தான செய்தியை, அண்ணி அவளிடம் தெரிவித்து விட்டாள். தானும் வேலைக்குச் செல்லவேண்டுமென்ப தால் ரோக்கியோ புறப்படவேண்டும் என, மருமகள் மாமனாரிடம் பிறகு சொல்கிறாள். அவர் அவளை அழைத்துச் சென்று, மனைவி நீண்ட காலமாக அணிந்திருந்த மணிக்கூட்டை அவளுக்குக் கொடுத்து, அவள் அதை அணிவதன்மூலம் தனது மனைவி மகிழ்ச்சி அடைவாள் எனக் கூறுகிறார்; அவள்மீது மனைவி கொண்டிருந்த பாசத்தையும் வெளிப்படுத்துகிறார். ரோக்கியோவில் அன்றிரவு அவளுடன் தங்கிய இரவு தான் தனக்கு மிகவும் மகிழ்ச்சியான நாளாக இருந்தது எனவும், மருமகள் தான் சந்தித்த "மிகச் சிறந்த பெண்" எனவும் அவள்





தன்னிடம் தெரிவித்திருந்ததையும் சொல்கிறார். பிறகு, அவள் பொருத்தமான ஒருவரைச் சந்திக்கநேரும்போது கட்டாயம் திருமணம் செய்ய வேண்டுமெனவும், தனது இறந்த மகனின் நினைவை அகற்றி, அவள் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழவேண்டு மெனவும் தனது விருப்பத்தைக் கூறுகிறார். அவள் தமக்கு இரத்த உறவாக இல்லாத போதும், அவள்தான் தமக்கு மிகவும் நெருக்கமான பாசங்கொண்டவள் எனவும் கூறுகிறார்; அவள் நெகிழ்ந்துபோகிறாள். தான் அவ்வளவு நல்லவள் இல்லையெனவும், தனிமையில் தான் அடிக்கடி துயருறுவதாகவும், அவரது மகனை - தனது கணவனை - எல்லா நேரமும் தான் நினைப்பதில்லை எனவும் கூறிக் கண்கலங்குகிறாள். பிறகு ரோக்கியோ செல்கிறாள். ரோக்கியோவுக்குச் செல்லும் தொடருந்தைத் தனது வகுப்பறையிலிருந்து இளைய மகள் பார்ப்பதுடன், படம் நிறைவடைகிறது!

"திரைப்பட வெற்றிக்கு அதன் எந்த அம்சத்தை முதன்மையானதெனக் கருதுகிறீர்கள்?" எனக் கேட்டபோது, லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ் சொன்னார்:


"கதைதான் முதன்மையானது. சக்திவாய்ந்த ஒரு கதைக்கு படத்தில் மற்ற அம்சங்கள் குறைபட்ட போதிலும்கூட ரசிகர்களைக் கவர்ந்து வைத்திருக்கும் லயம் உண்டு."

இப்படமும் இக்கருத்தை உறுதி செய்கிறது. செறிவான நிகழ்வுகளைக்கொண்டு கதை கட்டமைக்கப் பட்டுள்ளது. பல்வேறுபட்ட மனிதரின் உணர்வுகளையும் நடத்தைகளையும், பின்னணிச் சூழல்களையும் இயல்பு ரீதியில், மிக்க உணர்திறனுடன் அது வெளிக்கொண்டு வருகிறது; அம்மானுடரை நாம் புரிந்துகொள்கிறோம். கூர்மையாகக் கையாளப்படும் உரையாடல் வசனங்களும் புரிதலுக்குச் சிறப்பான பங்களிப்பை வழங்குகின்றன.

எல்லாப் பாத்திரங்களும் இயல்பாக இருந் தாலும், முதியவரான கணவனும் மனைவியும் - மரு மகளும், எமது நெஞ்சுக்கு மிகவும் நெருக்கமானவராய் மாறிவிடுகின்றனர்!

ஒரு மாபெரும் திரைப்படக் கலைஞனின் படைப்புத் திறனைக் கண்டு, நாம் பரவசம் அடைகிறோம். மிகப் பிந்திய நாள்களில், ஒசுவின் 'லேற் ஸ்பிறிங்' (1949), 'ஏர்லி சமர்' (1951) ஆகிய படைப்புகளைப் பார்க்கும் நல் வாய்ப்பும், இலங்கையில் கிடைத்தது!

*- 20.06.2015*



மரபுக்கவிதைப் பாரம்பரியத்தின் ஊடாக வெளிவந்திருந்தாலும் இன்றையை நவீன கவிதை அறுவைச்சிகிச்சை தளத்தில் அதற் கேற்ப சற்றும் சளைக்காமல் இளமைத் துடிப்புடன் எழுதிக் கொண்டிருந்தவர். வே. ஐ. வரதராஜனுக்கென ஒரு தனித்துவமான மொழி இருந்தது. படைப்புகளை ஆழ்ந்த வாசிப்பின் ஊடாக நயக்கின்ற சிறப்பு இருந்தது. ஒரு படைப்பாளியின் ஆழ்ந்த வாசிப்பு அவரின் படைப்பில் ஆரோக்கியமான மாற்றத்தை உண்டு பண்ணும் என்கின்ற கருத்திற்கு இசைவாக அவரது ஆழ்ந்த வாசிப்பை பற்றி சொல்ல வார்த்தைகள் போதாது . எப்போதுமே நூல்களோடு காணப்படும் கவிஞர் அவர்கள் பல அரிய இந்தியப் படைப்பாளிகளின் நூலை தேடி வாசிப்பதை மாத்திரமன்றி அந்த வாசிப்பு அனுபவங்களை மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டு நூல்களை அறிமுகம் செய்கின்ற நற்பண்புகளை கொண்டிருந்தார். இந்தியாவிற்கு பரணியும் நானும் சென்று வந்த போதுகளில் சில நூல்களை வாங்கிவருமாறு கூறியிருந்தார். ஜீவநதியை பெரிதும் நேசித்தார். தனது கவிதைகள் ஒவ்வொரு இதழிலும் வெளிவர வேண்டும் என்ற உணர்வுடனும் உரிமை யுடனும் தொடர்ந்தும் படைப்புக்களை அனுப்பிக் கொண்டிருந்தார்.


# மனிதநேயம்மிக்க அமைதியான படைப்பாளி

பன்முகத் தன்மை கொண்ட காத்திரமான ஒரு இலக்கிய ஆளுமையை காலம் எங்களிடத்தில் இருந்து காவு கொண்டிருக்கின்றது . வே. ஐ. வரதராஜன் என்கின்ற நாமத்தின் ஊடாகவும் சாதுவான போக்கின் வாயிலாகவும் எல்லோராலும் நன்கறியப்பட்ட கவிஞர் வே. ஐ. வரதராஜன் அவர்கள் காலமான செய்தி இலக்கிய உலகிற்கு மாத்திரமன்றி அவரோடு பழகுகின்ற அனைவருக்கும் மிகுந்த அதிர்ச்சி நிறை துயரை தந்திருக் கின்றது. ஜீவநதியின் ஓட்டத்திலும் காத்திரமான வருகையிலும் மிகுந்த மகிழ்வோடு இணைந்து கொள்கின்ற கவிஞர் அவர்களின் கவிதைகள் ஜீவநதியின் பல இதழ்களிலும் தொடர்ச்சியாக வெளிவந்து கொண் டிருக்கும் ஒரு காலப் பெருவெளியில் இன்று அவருக்கான அஞ்சலிப் பதிவை சுமந்து வருவதில் ஜீவநதிக் குடும்பம் கனத்த துயரை அடைகிறது. ஜீவநதிக்கும் வே. ஐ. வரத ராஜனுக்கு மான தொடர்பு வெறும் இலக்கிய தொடர்பாக அல்லாமல் உணர்வு ரீதி யான ஒரு இரத்தத் தொடர்பின் வாயி லாக அமைந்திருந்தது. ஈழத்தின் மூத்த கவிஞரான எல்லோராலும் அறியப்பட்ட அரியாலையூர் வே. ஐயாத்துரை அவர்களின் மூத்த புதல்வரான வே. ஐ.வரதராஜன் தந்தை மேற்கொண்ட பணியை எழுத்து ரீதியாகவும் ஆன்மீக ரீதியாக வும் இறுதிவரை தொடர்ந்த ஒருவர்.

கவிஞரது முதலாவது கவிதைத்தொகுப்பை பலர் பதிப்பிக்க முன்வந்த போதும், தனது முதல் நூல் வெளிவருமாயின் அது ஜீவநதிக்கு ஊடாகவே வெளிவரும் என்பதில் மிகுந்த ஆணித்தரமாகவே எம்மிடம் கூறிக் கொண்டிருப்பார். அதன் வெளிப்பாடே ஜீவநதியின் வெளியீடாக வெளி வந்த அவரது “என் கடன்” தொகுப்பு. மிகுந்த மன மகிழ்வோடு அதன் வருகையில் பூரித்திருந்தார். பல நெருக்கடியான சூழல்களில் எல்லாம் பிரதம ஆசிரியர் பரணிக்கு உரிமையோடு பல ஆலோசனைகளை சொல்லிக் கொள்வார். நீண்ட காலமாக எழுதிக் கொண்டிருந்தாலும் ஜீவநதியில் வெளிவந்த பல படைப்புக்கள் இவருக்கு நல்ல கருத்துக் களையும் விமர்சனங்களையும் பெற்றுக் கொடுத்தன என்பதை எந்தவிதமான அடைமொழிகளோ ஆர்ப்பாட்டங்களோ இன்றி என்னால் சொல்லிக் கொள்ள முடியும். இதனை அவரது இறுதி நிகழ்வில் அவரது தம்பியான ஐ. குமாரதாசன் அவர்கள் எங்களிடம் ஜீவநதியில் எழுதத் தொடங்கிய பின்னரே அண்ணாவின் கவிதை கள் தனித்துவம் பெறத்தொடங்கின என்று கண்ணீர் மல்க பெருமையுடன் சொல்லிக் கொண்டார். ஜீவநதி சார் அத்தனை நிகழ்வுகளிலும் உடல் நலம் இயலாத சூழல்களில் கூட மு. அநாதரட்சகன் அவர்களோடு வந்து செல்கின்ற ஒருவர். அதையும் தாண்டி இரண்டாவது நூலுக்கான ஆரம்ப வேலைகளை பரணியிடம் ஒப்படைத்து சொல்லி கவிதை களின் ஒழுங்குபடுத்தல்கள் இடம் பெற்றுக் கொண்டிருந்த சூழலில் அவரினது இத் திடீர் இழப்பு மிகுந்த துயரை தருகிறது. இப்படியான பன்முகத்தன்மை கொண்ட இவரது திடீர் மறைவு ஜீவநதிக் குடும்பத்தை பொறுத்தவரை மிகவும் கனத்த துயரை தந்திருக்கின்றது. தான் இல்லாது போனாலும் தன் இரண்டாவது கவிதைத் தொகுப்பு வெளிவரவேண்டும் என பரணி யுடனான இறுதிச் சந்திப்பில் அவர் தெரிவித்து இருக்கின்றார். அவரது விருப்பின்பால் அவரது கவிதை கள் படைப்புகளை ஜீவநதி தொடர்ந்தும் சுமந்து வரும் என்பதைக் கூறிக் கொண்டு அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

க.பரணீதரன்

# ஏக்கம்



தம்பி மீண்டும் அமெரிக்காவுக்குப் போகப் போகின்றான்...

தம்பிக்குக் கொடுத்து விடுவதற்கான பொருட்களை எல்லாம் எனது மனைவியும் பிள்ளைகளும் மேசையில் அடுக்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

கோயில்களுக்குச் சென்று பிரார்த்தித்து வருவதற்காக தம்பியும் அவன் மனைவியும் வெளியே போயிருக்கிறார்கள்.

வீடு மிகவும் ஆரவாரமாக இருந்தது... எல்லோரும் விரைவாக ஏதோவொரு வேலையைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

சாய்மணக்கதிரையில் சாய்ந்தபடி எல்லோரையும் அவதானித்தபடி வீட்டுச்சுவரில் தொங்கும் ஐயா, அம்மாவின் படத்தையே பார்த்தவாறு இருக்கின்றேன்.

"என்னப்பா சளியாக்கிடக்கே... ஒரேயடியா சாய்மணக்கட்டிலுக்கையே கிடக்கிறியள். சித்தப்பா அவையின்ரை வேலைகளை எழும்பிக் கவனியுங்கோ..." மகள் தர்மவதி செல்லமாக எனக்குக் கட்டளை இடுகிறாள்.

மெல்ல எழுந்து, தம்பி அவையின்ரை அறையைப் போய் எட்டிப்பார்க்கிறேன். அறை சமான்களால் நிரம்பி இருக்கிறது. தம்பியின் வாசனை அறையெங்கும் பரவியுள்ளமையை என்னால் நுகர முடிகிறது. அவனது உடுப்புகளை எடுத்து தடவிக் கொடுத்து மடித்துக் கொண்டு இருக்கின்றேன்...

***

நாட் கூலியான ஐயா, சீதனம் வாங்காமல் அம்மாவைக் கலியாணம் முடித்து வாழ்ந்த வாழ்க்கையில்... என்னையும், தம்பியையும், மூன்று தங்கச்சிமாரையும் ஆசை அருமையாய் வளர்த்தார்கள்...

மழைக்காலம் வந்தால் ஐயாவுக்கு உழைப்பு குறைவு.

அம்மாவின் கெட்டித்தனத்தில் மூன்றுவேளையும் பசி இல்லாமல் நாங்கள் சாப்பிட்டிருக்கின்றோம்...

சில வேளைகளில் ஐயா அம்மாவுக்கிடையில் சின்னச்சின்ன தகராறு வரும்... ஐயா இடைசுகம் குடிப்பார்.

பாவம் வேலை செய்த களைப்பினால் குடிக்கிறார் போலும் என நினைத்து அம்மா, ஐயாவின் குடியைப் பற்றி கருத்தில் எடுக்கமாட்டா.

முதலாவது தங்கைச்சி வயசுக்கு வந்த கையோடு ஐயா தன்ரை குடிக்கு முழுக்குப் போட்டார்...

ஐயாவும் அம்மாவும் பிள்ளைகளைச் சரியாகப் படிப்பிக்க வேண்டும் என்றும், கல்வியாலை தான் எங்கடை குடும்பத்தின் கஷ்டங்களை போக்கலாம் என்றும் எண்ணி எங்களுக்கு நல்ல கல்வி புகட்டுவித்தார்கள்.

மாற்றுப் பாடசாலைச் சீருடைக்கு கூட வழியில்லாமல் நாங்கள் பட்ட கஸ்டங்கள் எங்களுக்குத்தான் தெரியும்.

அம்மாவுக்கு சித்திரைப்புதுவருஷம், தீபாவளி, தைப்பொங்கல் கொண்டாட்டம் நான்கு ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறைதான் வரும்... பாவம்



அம்மா... அவவை நினைத்தால் இப்பவும் எனது கண்களில் நீர் உடைப்பெடுக்கும்...

நான் முதற் தடவையிலேயே எஸ்.எஸ்.சீ. பாஸ்பண்ணி ஆசிரியராகி விட்டேன்.

எனக்கும் தம்பிக்கும் இரண்டு வயது வித்தியாசம். அவன் குடும்ப சுமையை என்னோடு சேர்ந்து சுமக்க எண்ணி ரியூட்டரியில் கணித பாட பிரத்தியேக வகுப்புக்களைக் எடுத்து கொஞ்சம் கொஞ்சமாக பணம் சம்பாதித்தான்... அவனால் தன் படிப்பில் கவனத்தை முழுமையாக செலுத்த முடியாமல் போனது.

நான் சுயநலக்காரன்... காதலித்தவளையே ஐயா அம்மாவின் சம்மதத்தோடு கலியாணம் செய்து கொண்டேன். ஐயாவின் மாரடைப்புச் சாவுக்குப்பின், பாவம் அவன் தான் தனியாக குடும்பச் சுமையைத் தாங்க வேண்டிய பொறுப்பாளி ஆனான்...

முதல் இரண்டு தங்கைமாருக்கும் அவர்களது படிப்புக்குத் தக்க வகையில் நல்ல இரண்டு மாப்பிள்ளைகளை அவனே பார்த்துக் திருமணம் முடித்து வைத்திட்டான்... கடைசித்தங்கச்சி படிப்பில் கெட்டிக்காரி. கவனமாகப் படித்து வந்தவளுக்கு வைத்தியத்துறைக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைத்த போதும் குடும்பச்சூழலால் படிப்பைக் கைவிடலாமா என்ற எண்ணம் இருந்தபோது தான், அமெரிக்காவின் கிராமப்புறங்களை அபிவிருத்தி செய்யுற நோக்கோடு இலவச "விசா" வழங்குகிறார்கள் என தம்பி அறிந்து கொண்டான். விசாவுக்கு விண்ணப்பித்து, கடவுள் கிருபையிலை ஒரு மாதத்திலேயே அமெரிக்கா போய் விட்டான்.

அமெரிக்கா போகும்போதே தம்பிக்கு முப்பத்தினான்னு வயது... எனக்கு மூன்று பிள்ளை கள்... என்னுடைய உழைப்பு எனது குடும்பத்துக்கு மட்டும் தான் போதுமானதாக இருந்தது. தம்பியின் அமெரிக்க உழைப்பு தங்கைச்சியை வைத்திய ராக்கியது. கடைசித்தங்கைச்சியையும் நல்ல சீதனம் கொடுத்து இன்சினியர் மாப்பிளைக்கு கட்டிக் கொடுத்த பின் தான் அம்மாவின் நச்சரிப்பினால் தனது முப்பத்தொன்ப தாவது வயதில் மணம் முடித்தான். தனது கலியாணத்துக்கு அம்மாவை அமெரிக்காவுக்குக் கூப்பிட அவன் எவ்வளவோ பாடுபட்டும், நாட்டு சூழல் அம்மா கொழும்புக்குக் கூட போக முடியாமல் போய்விட்டது.

எங்கள் குடும்பங்களின் தேவைகளுக் காக தம்பி வெயிலிலும் பனியிலும் உழைத்து உழைத்து உருகினான். தங்கச்சிமாரின் கலியாணங்களுக்குப் பின்பும் வீடு, காணி என வாங்கிக் கொடுத்தான்... சொன்னால் வெட்கம் எனக்கும் வீடு கட்டுவதற்கான செலவில் அரைவாசிக்கு மேல் அவன் தான் அனுப்பி வைத்தான்.

தனது பிள்ளைகள் சிறப்பாக இருப்பதை அம்மா தன் கண்குளிரப் பார்த்தா... ஆனால் தம்பியை நேரடியாகப் பார்க்க முடியவில்லை என்ற ஏக்கம் தான் அம்மாவின் கடைசிக்காலத்திலை அவவை உலுக்கியது.

படுக்கையிலை விழுந்து முன்று மாதங்களாக "தம்பி எப்ப வருவான்... தம்பி எப்ப வருவான்" என்றுகேட்டுக் கேட்டே அம்மாவுக்கு வாக்கு மாறிப் போனது.

அந்த சூழ்நிலையில் தம்பியால் இங்கு வரமுடியாத நிலைமை...

கொழும்பில் வைத்து வெளிநாட்டிலிருந்து வருகிறவர்களைக் கடத்திக் கொண்டு போய் விடுவார்கள். கொழும்பாலை தப்பி இங்கு வந்தாலும் வருகிற இடைவழியிலை வைத்து காசு பிடுங்கிப் போட்டுத்தான் விடுவார்கள்.

தம்பி, தம்பி என்று புலம்பிக் கொண்டிருந்த அம்மா, தம்பியைப் பார்க்கலாம் என எண்ணினாவோ என்னவோ ஒருநாள் எங்களை விட்டுப் போய்விட்டா.

அம்மாவின் செத்தவீட்டுச் செய்தி கூட, தம்பிக்கு ஒரு கிழமைக்குப் பின்பு தான் தெரிய வந்தது... அவன் பட்ட துன்பம் அவனின் கடிதத்தை வாசித்தபோது தெரிந்தது. பாவம் எவ்வளவு கஷ்டப்பட்டும் கடைசிக்காலத்திலை தன்ரை அம்மாவை பார்க்க முடியாமல் போனதை நினைத்து அவன் இப்போது வந்த பின்பும்கூட கண்ணீர் சிந்தினான்.

அம்மாவைத் தொடர்ந்து மூத்த தங்கைச்சியும் அம்மாவிடம் போய்ச்சேர்ந்தாள். அப்போதும் தம்பியால் வரமுடியவில்லை.

என் மூத்தவனின் கலியாணம், இரண்டாவது மகளின் சாமத்தியச் சடங்கு என்று ஒன்றுக்கும் அவனால் வரமுடியாமல் போனது...

தம்பிக்கு இரண்டு பிள்ளைகள்... அந்த நாட்டுச் சூழலில் வளர்ந்ததாலோ என்னவோ,

பதினெட்டு வயதானவுடன் தங்களுக்குப் பிடித்தவர் களுடன் தனியாகப் போய் விட்டார்கள்.

மூத்த தங்கச்சியின் கடைசிப்பெட்டையின் திருமணத்துக்காகத்தான் தம்பி இப்போது ஊருக்கு வந்திருந்தான். ஊருக்கு வந்தவனுக்கு இங்கு எல்லாம் புதுசு... ஊர் புதுசு, வீடுகள் புதுசு, பெடியள் பெட்டையள் புதுசு, கோயில் புதுசு, பாடசாலை புதுசு, எல்லாம் இந்த முப்பத்துமூன்று வருஷத்திலை மாறியிருந்தது. பல பிள்ளைகளுக்கு தம்பி புதிய ஒரு ஆளாகவே தென்பட்டான்... கலியாணம் கட்டிய "புதுப்பொம்பிளையை" ஊருக்குக் கூட்டி வந்து சொந்தக்காரரை அறிமுகப்படுத்துவது போல, தம்பிக்கு ஊரிலை எல்லோரையும் அறிமுகப்படுத்த வேண்டியிருந்தது...

தம்பி அம்மாவின்ரை சாயல்... வெளிநாட்டில் இருந்து வந்தும் அவன் எந்தவிதப் பெருமிதமும் இல்லாமல் சாதாரணமாக எல்லோருடனும் கதைத் தான்... ஆனால் அவனுடைய முகத்தில் ஏதோ ஒரு ஏக்கம் குடிகொண்டிருப்பதை என்னால் உணர முடிந்தது.

ஏன் தம்பி இப்படி இருக்கிறாய் என எப்படி அவனிடமே கேட்பது.

பாவம் அவன்... என்னைப் பிழையாக விளங்கிக் கொண்டால்...

அவனின் ஏக்கம் எல்லாம் அம்மாவைப்பற்றி யும் மூத்த தங்கைச்சியைப் பற்றியும் தான் என நினைத்துக் கொண்டேன்.

தம்பியும், மனைவியும் கோயிலால் திரும்பி வந்து விட்டார்கள்.

என் நெற்றியில் திருநீற்றை பூசிவிட்டு தம்பி என்னைப் பார்த்துக் கொண்டு நிற்கிறான்...

"தம்பி எல்லா ஆயத்தங்களையும் பிள்ளையள் செய்து தருவினம்... நீ கொஞ்சம் ஆறி இரு...

"சரி" அண்ணை என்றவாறு அவன் உள்ளே செல்கின்றான்.

மாலை ஆறுமணியை நெருங்கு கின்றது... என் நெஞ்சு வேகமாக அடித்துக் கொள்கிறது. தம்பியின் மூன்றுமாத விடுமுறை இன்னும் சொற்ப நேரத்தில் முடியப் போகிறது...

தம்பி என் அருகாக வருகின்றான்.

அவனை நிமிர்ந்து பார்க்கின்றேன்...

அவனும் என்னை உற்றுப் பார்க்கின்றான்...

அவன் கண்களைப் பார்க் கின்றேன்... சற்று சிவந்து வீங்கி இருக்கின்றன...

தளர்ச்சியான குரலில் அவன் சொல்லத் தொடங்கினான்...

"அண்ணை... ஐயாவும்... அம்மாவும் எங்களை எவ்வளவு கஷ்ரப்பட்டு வளர்த்தவை... இன்று நாங்கள் எல்லோரும் நல்ல வந்திட்டம்... எனக்கு உங்கள் எல்லோரையும் இவ்வளவு காலத்தாலை பார்த்தது மன நிறைவாக இருக்கு... எனக்கும் அறுபத்தேழு வயசாகுது... இனி நான் எப்ப வருவனோ... வரமாட்டனோ....

அவன் முடிக்கவில்லை அடக்க முடியாத அழுகை என்னையும் மீறி வருகின்றது. அவன் வாயை பொத்திக் கொள்கின்றேன்.

வாசலில் "ஹயஸ்" வாகனம் வந்து நிற்கின்றது...

பிள்ளைகள் தம்பியின் பயணப்பைகளை தூக்கிக் கொண்டு செல்கிறார்கள்... தம்பியின் மனைவி எங்கள் குடும்பத்தவர்கள், தங்கைமார்கள் உறவினர்கள் எனஅனைவரிடமும் விடைபெற்றுக் கொள்கின்றார்.

தம்பியும் நானும் கைகளைக் கோர்த்துக் கொண்டு கண்களைத் துடைத்தபடி வெளியே வருகின்றோம். பேரப்பிள்ளைகள் எங்கள் இருவரையும் பார்த்து எங்களை கேலி பண்ணியதைத் தொடர்ந்து எல்லோரும் சிரித்துக்கொள்கிறார்கள். ஆனால் எங்களில் எந்த மாறுதலும் இல்லை... முகங்களில் சோகம் அப்பிக்கிடக்கின்றது...

தம்பி "ஹயஸின்" கதவைத் திறந்தவாறே எல்லோருக்கும் சேர்த்துச் சொல்லுகிறான்.

"சுகமோ துக்கமோ எல்லாரும் ஒன்றாயிருக்கிறியள்... சந்தோசமா இருங்கோ..."

அவன் கதவை இழுத்துச் சாத்தும்போது எழுந்த ஒலி மட்டுமன்றி, தம்பி சொல்லிய வார்த்தைகளும் என் நெஞ்சை அதிர வைக்கின்றன.

"என் தம்பியின் ஏக்கத்தை ஏன் நான் விளங்கிக் கொள்ளாமல் போனன்...?"


என் நெஞ்சில் தம்பியின் ஏக்கமே நிறைந்திருக்கிறது. உறவினர் எல்லோரும் மெல்ல மெல்லக் கலைந்து போகிறார்கள்.

மூன்று மாதங்களாகத் தம்பியிருந்த அறையை எட்டிப் பார்க்கிறேன்.

எல்லாமே வெறுமையாகத் தெரிய... நெஞ்சில் வலி எடுக்கிறது.

●





த.ஜெயசீலன்

# எதிர்வினை : நினைவுக் குறிப்பு - 9 ன் ஒரு "பகுதி"க்கானது

தனக்கு "படைப்புந்தல்" தற்போது இல்லாத கன்றதால் படைப்புகளை தான் படைப்பதில்லை என்று பிரகடனப்படுத்தித் "தப்பிக் கொண்டு", அவ்வப்போது மற்றவர்களை அவர்களின் படைப்புக்களை மட்டந் தட்டி, தான் ஒரு இலக்கிய விமர்சன மேதாவி எனத் தனக்குத்தான் முடிசூடிக்கொண்டு, அதை நிரூபிக்க முனையும் திரு.அ.யேசுராசா அவர்கள் காலகாலமாகச் செய்தது போல் தன் மனவக்கிரங்களையும், மன அவசங் களையும் கொட்டுகிற குப்பைக் கூடையாக **இதுவரை "வசைபாடல்களுக்குக் களமமைத்திராத" "ஜீவநதி"யை** "நினைவுக் குறிப்புக்கள்" மூலம் பயன்படுத்த தொடங்கியிருப்பது துரதிஷ்டவசமானது. இது "ஜீவநதி" இதுவரை கட்டிக் காத்த பெருமைக்கும் மரியாதைக்கும் இழுக்கை ஏற்படுத்தவும் கூடும்.

அண்மையில் முகப்புத்தகத்தில் திரு.அ.யேசு ராசா பற்றி கவிஞர் சித்தாந்தன், மிகச்சுலபமாக தனது நிலைப்பாடுகள், செயற்பாடுகள், சம்பவங்கள், பலவீனங் கள் என்பவற்றை மறந்துவிட்டு, மறைத்துவிட்டு தன் கருத்தை, தன் நிலைப்பாட்டை நியாயப்படுத்த ஏதேதோ காரணங்கள் சொல்லி சப்பைக்கட்டுக் கட்டுவது திரு.அ.யேசுராசாவின் வழக்கம் என்றும் அதுவே தன்னைப் போன்ற பலர் அவருடன் முரண்பட காரணமாக அமைகிறது என்ற சாரப்படவும் கூறியிருக் கிறார். அது வெறும் கூற்று இல்லை.

வைகாசி 2015 ஜீவநதியின் 8ம் ஆண்டு நிறைவு 80ம் இதழில் "நினைவுக் குறிப்பு - 9" இல் பக்கம் 36ல் **"சில கூட்டங்களுக்கு பேச்சாளராக சென்றதில்..."** என ஆரம்பிக்கும் பத்தி எனது கவிதைத் தொகுதி வெளியீடு பற்றியும் என்னைப் பற்றியும் எழுதப்பட்டிருக்கிறது என்பதை என்னைப் பற்றி அறிந்த எவரும் புரிந்து கொள்வர். எனது முதலாவது கவிதைத் தொகுப்பான "கனவுகளின் எல்லை" 2001 கார்த்திகை மாதம் 11ம் திகதி யாழ் இந்துக் கல்லூரியில் கவிஞர் முருகையன் தலைமையில் வெளி யிடப்பட்டது. எனது பெயரை நேரடியாக கூறாமல் வழமைபோல தனக்கேற்ப பல விடயங்களை மறைத்து சிலவற்றை திரிபுபடுத்தி தனது நையாண்டி நக்கல் பாணியில் இந்தச் சேறு பூசலை திரு.அ.யேசுராசா என்மீதும் மேற்கொண்டிருக்கிறார்.

**"2001 கார்த்திகையில் ஓர் இளைஞர் எனது வீட்டுக்கு வந்தார். அவரது கவிதைகள் பல்வேறு வெளியீடுகளில் அடிக்கடி வெளிவந்தது தெரியும். ஆயினும் அவரது கவிதைகளில் எனக்கு ஈடுபாடில்லை..."** என தன் பத்தியை ஆரம்பித்திருக்கிறார். இக்கூற்றானது அக்காலத் தில் தான் நான் அவருக்கு அறிமுகமானது போன்ற அபிப்பிராயத்தை வாசிப்போருக்கு ஏற்படுத்தியிருக்கும்.

உண்மையில் **1994 ல் சிரித்திரன் சுந்தர் ஐயா** மூலம் இவர் எனக்கு அறிமுகமானார். அக்காலத்தில் இவரால் வெளியிடப் படவிருந்த "கவிதை" இதழுக்கு கவிதை தருமாறு இவர் சிரித்திரன் ஐயா ஊடாகக் கேட்டுக் கொண்டதன் படி முதலாவது "கவிதை" இதழிலேயே எனது "கணைக்காய்ச்சல்" என்ற கவிதை பிரசுரமாகி யிருந்தது. (சித்திரை- வைகாசி 1994 கவிதை இதழ்.). அதைத் தொடர்ந்து வந்த அவ் இதழில் **"மஹாகவி நினைவுக் கவிதைப் போட்டி"** யொன்று அறிவிக்கப்பட்டது. அதற்கு நான் எழுதிய **"இவன் கவிஞன்" என்ற கவிதை முதற்பரிசையும் பெற்றது.** இதனை 25.03.1995 திகதியிட்ட கடிதத்தின் மூலம் இவர் அறியத் தந்திருந்ததுடன் கவிதை இதழின் ஓராண்டு நிறைவு ஒன்றுகூடலுக்கு என்னையும் கலந்து சிறப்பிக்கு மாறு அழைத்திருந்தார். எனக்கு முதற் பரிசாக 500ரூபா திரு.அ. யேசுராசாவின் வீட்டில் வைத்து 29.03.1995 அன்று "கவிதையின் ஓராண்டு ஒன்று கூடலில்" வழங்கப் பட்டது. அன்று "கவிதை"யின் ஓராண்டு நிறைவை யொட்டி நாங்கள் நடத்திய "மஹாகவி நினைவுக் கவிதைப் போட்டி" யில் முதற்பரிசு பெற்றமைக்கு எமது பாராட்டுகளும் வாழ்த்துக்களும்" என்று தன் கைப்பட எழுதி எனக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்திருந்தார். அதனைத் தொடர்ந்து கவிதைப் போட்டியில் **முதலாம் பரிசு பெற்றவன் என்ற ரீதியில்** எனது நேர்காணல் ஒன்றைப் பிரசுரிக்க வேண்டும் எனக் கடிதம் மூலம் கோரி அதற்கான கேள்விகளையும் எனக்கு அனுப்பியிருந்தார். எனது **முதலாவது நேர்காணல்** தொடர்ந்த "கவிதை" இதழில் (சித்திரை - வைகாசி 1995 ல்) வெளி வந்தது. இவை எனது ஆரம்பகால கவிதை முயற்சியில் இடம்பெற்றவை.

பின் நாட்டுச் சூழலில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இவர் வன்னி சென்று திரும்பிய பின் 2001

நடுப்பகுதியில் தனது கட்டுரை நூல் ஒன்று திருமறைக் கலாமன்றத்தில் (பழைய அரங்கு) வெளியிடப்படுவதாக அழைப்பிதழும் அனுப்பினார். அதில் நான் கலந்தும் கொண்டேன்.

பின் எனது முதலாவது கவிதைத் தொகுப்பை வெளியிட நான் முயன்ற போது எனது கவிதைப் பயணத்திற்கு ஏதோ ஒரு விதத்தில் துணையாக நின்ற அனைவரையும் அவ் வெளியீட்டில் கலந்துகொள்ளச் செய்ய வேண்டும் எனக் கருதினேன். ஏதோ வகையில் எனது கவிதை முயற்சிகளுக்கு உதவியவர்கள் என்ற ரீதியில் கவிஞர் முருகையன், என் தமிழாசான் சொக்கன், ஆசான் சிவராமலிங்கம்பிள்ளை, பேராசிரியர் சண்முகதாஸ், கவிஞர்களான சோ.ப, கல்வயல் குமாரசாமி, அ.யேசுராசா, ஆறு திருமுருகன், இரா.செல்வவடிவேல், நண்பன் சிறீதரன் என்போரை அழைக்க நினைத்தேன். சிரித்திரன் சுந்தர் ஐயா அமரராகியிருந்தார். அப்போதைய சூழலில் என் கவிப் பயணத்தில் உதவிய கவிஞர் ச.வே.பஞ்சாட் சரம், கம்பவாரிதி ஜெயராஜ், "சாளரம்" விவேக் போன்றோர் கலந்து கொள்ளக் கூடிய சூழல் இருக்க வில்லை. அதனை எனது வெளியீட்டு விழாப் பதிலுரை யிலும் குறிப்பிட்டிருந்தேன்.

எனக்கு சஞ்சிகையூடான கவிதைப் போட்டியில் முதற்பரிசு வெல்ல வாய்ப்பைத் தந்ததோடு எனது முதலாவது நேர்காணலை பிரசுரித்து வெளியிட்டதன் அடிப்படையில் திரு.அ.யேசுராசாவை அழைக்க முனைந்து அவரின் வீடுதேடிச் சென்று இவ்விடயத்தையும் கூறினேன். அவர் தனது பத்தியில் கூறியிருப்பது போல, சற்று தயங்கினார். யார்யார் பேச்சாளர்கள், எங்கு நிகழ்வு எனக் கேட்டு எனது வெளியீட்டு நிகழ்வுச் சூழலைக் கருத்திற்கொண்டோ என்னவோ நிகழ்வில் கலந்து கொள்ளப் பின்னடித்தார். நான் எனது நிலைப்பாட்டைக் கூறியதுடன் அவர் பத்தியில் கூறியிருப்பது போல கூறி "அவரின் கருத்தைத் தெரிவிப்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை" என்றதன் அடிப்படையில் எனது நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டார். நான் எனது கவிதைப் பயணத்துடன் தொடர்புடையவர்களை அழைக்க விரும்புகிறேன் என்று அன்று கூறியதை ஒருவேளை அவர் தற்போது மறந்திருக்கவும் கூடும்.

அவரின் விமர்சனம் அவர் கூறியது போல இருந்தது என்பது முற்றிலும் உண்மை. ஆனால் நான் அவரின் பேச்சைக் கேட்டவுடன் ஏதோ பதற்றப்பட்டு உடனேயே தன்னுடன் முரண்பட்டது போல எழுதியிருக்கிறார். உண்மையில் அப்படி ஏதும் நடக்கவில்லை. "எனது தொகுப்பினூம் வெளியினும் நல்ல பல கவிதைகள் உள்ளது எனக் கூறிய அவர் தொகுப்பில் சில கவிதைகள் சுமாரானவை" என அவரது பேச்சில் தெரிவித்திருந்தார். (இப்போது என்கவிதைகளில் தனக்கு ஈடுபாடு இருந்ததில்லை என்கிறார்) நான், "ஒரு தொகுப்பில் எல்லாம் சிறந்த கவிதைகளாக வரும் என எதிர்பார்க்க முடியாது தாங்களும் சேர்ந்து தொகுத்த தொகுப்பான "மரணத்துள் வாழ்வோம்" தொகுப்பிலும் மிகச் சாதாரணமான கவிதைகளும் உள்ளன தானே" என்ற அர்த்தத்தில் அக்கூற்றையும் வஞ்சகமில்லாமல் மிகமிகச் சாதாரணமாகத் தான் கூறினேன். ஆனால் அவர் என் கூற்றின் தொனியை திரிபுபடுத்தியிருக்கிறார். நான் அவர் பேச்சில் ஏமாற்றமடைந்து உடனேயே பகையுணர்வோடு அவ்வாறு கூறியதாக எழுதியுள்ளார்.

அவ்வெளியீட்டு விழாவின் எனது பதிலுரையில் கூட நான் இவரின் கருத்துப் பற்றியோ இவர் கூறியிருப்பது போல எனது ஏமாற்றத்தையோ வெளிப்படுத்தியிருக்கவில்லை. உண்மையில் அவர் கூறியது போல நான் பதற்றப்பட்டு ஏமாற்றமடைந்திருந்தால் அன்றைய எனது பதிலில் நிச்சயம் அதன் தாக்கம் தெரிந்திருக்கும். (ஒலிநாடாப் பதிவைக் கேட்கலாம்)

ஆனால், உண்மையில் அவருக்கு தர்மசங்கடம் ஏற்படுத்தியது அவருக்கு பின் விமர்சன உரைகளை ஆற்றிய கவிஞர்களான கல்வயல் வே. குமாரசாமி, மற்றும் சோ.ப வின் பேச்சுகளாக இருந்திருக்க வேண்டும் என நினைக்கிறேன். அவர்கள் இருவரினதும் பேச்சுக்கள் திரு.அ.யேசுராசாவின் பேச்சுக்குப் பதிலளிப்பவையாக அன்று அமைந்துவிட்டது. இதற்கு நான் என்ன செய்ய முடியும்? அது என்னால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தொன்றல்ல. தான் கூறுவதை எல்லோரும் ஏற்றாக வேண்டும் என்று கருதுவதுடன் மாற்றுக் கருத்தைச் சகிக்க முடியாதவர் இவர் என்பதை இவ்விடயத்தையே தனக்கேற்ப இவர் திரிபு படுத்தியிருப்பதும் காட்டுகிறது. மேலும், "நானும் கவிஞர் வே.குமாரசாமியும் இன்னொருவரும் மதிப்பீட்டுரைகள் நிகழ்த்த வேண்டும்" என்று எழுதியுள்ளார். அந்த இன்னொருவர் கவிஞர் சோ.ப என நன்றாகத் தெரிந்தும் இன்றும் தான் மதிப்பதாக கூறிக்கொள்ளும் கவிஞர் சோ.ப வும் தன் கருத்துக்கு மாற்றுக் கருத்தைக் கூறினார் என்பதை சீரணிக்க முடியாது அதை மறைக்கவே சோ.ப வின் பெயரை தவிர்த்திருக்கிறார். தன் பேச்சை நியாயப்படுத்த "எனது விமர்சனம் தங்களைக் கவர்ந்ததாக கூட்டம் முடிந்தபின் இளைஞர் சிலர் என்னிடம் தெரிவித்தனர்" என்கிறார். இது ஆதாரமற்றது. இது உண்மையாயின் அன்றைய அவ்இளைஞர்கள் யார் என்று இதில் பகிரங்கப் படுத்தட்டும். சரி அவ்வாறு சில இளைஞரை இவரின் பேச்சு கவர்ந்தே இருந்தாலும் இக்கூற்றினூடாக எதை வலியுறுத்த இவர் முனைகிறார்?

இந்த இடத்திலே "தெய்வாதீனமாக" இவ் வெளியீட்டு விழாவின் முழுமையான ஒலிநாடாவும் என்னிடம் இன்றும் இருப்பதுடன் அது முழுமையாக எனது கவிதை இணையத்தளமான www.thanajeyaseelan.com இல் பதிவேற்றப்பட்டுமுள்ளது. வாசகர்கள், தேவையானோர், இவரின் கபடத்தனத்தை, உண்மையை அறிய விரும்புவோர், அவ்ஒலிப்பதிவைக் கேட்பதன் மூலம் திரு.அ. யேசுராசாவின் சுயரூபத்தை புரிந்து கொள்ள முடியும்.

தொடர்ந்து "அவர் தனது ஏமாற்றத்தை வேறு பிரயோகங்களில் தொடர்ந்தும் வெளிப்படுத்தினார். நான் தனது கவிதைகளை வானளாவப் புகழ்வேன் எனவே அவர் நம்பியிருக்க வேண்டும். அவரால் ஏமாற்றத்தைத் தாங்க இயலவில்லை" என்று கூறியிருப்பது

சிறுபிள்ளைத் தனமானது.

நான் திரு. அ.யேசுராசாவின் கவிதை தொடர்பான கருத்துகளை அவரின் கவிதை தொடர்பான நம்பிக்கைகளை ஆரம்பத்திலேயே அறிந்திருந்தேன். அவர் **தமிழின் மிக நீண்ட தொடர்ச்சியான கவிதை மரபை மரபிலக்கியங்களைப்** பற்றிய ஆழமான பரீச்சயம் அற்றவர் என்பதையும், குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழ்ச் சைவ கலாசார மரபை ஏற்றுக்கொள்ளாதவர் என்பதையும், தனது சமய, சமூக, கல்வி, பொருளாதாரச்சூழல், கொள்கை, பின்னணியின் படி தான் தமிழ்க் கவிதையை நோக்குபவர் என்பதையும், தமிழகத்தின் அக்கால நவீன கவிதையாளர்களை ஆதர்சமாகக் கொண்டு கவிதையை பார்ப்பவர் என்பதையும், வைரமுத்து, மேத்தா, அப்துல் ரகுமான் போன்ற புதுக்கவிதையாளர்களை அடியோடு மறுதலிப்பவர் என்பதையும், அவரின் விமர்சனம் எவ்வாறு இருக்கும் என்பதையும் நான் ஓரளவு ஊகித்திருந்தேன். **அவரின் கருத்து என்னவாக இருப்பினும்** அவரும் எனது கவிதைப் பயணத்தில் சிறு பங்கெடுத்தார் என்பதாலேயே அவரை எனது விழாவில் அழைத்திருந்தேன் என்பதை மீண்டும் தெளிவுபடுத்துகிறேன்.

எனது கவிதைகளை புகழாததால் நான் ஏமாற்றமடைந்தேன் என்று இவர் எழுதியிருப்பது மிகமிக நகைப்புக்குரியது. நான் கவிதைத் துறையில் ஈடுபட்டு சுமார் 22 வருடங்கள் கடந்து விட்டது. நான் கவிதை எழுதத் தொடங்கிய ஆரம்ப காலத்திலோ, எனது முதல் நூல் வெளிவந்த போதோ, அதற்குப் பின்னோ, சமகாலத்திலோ, அல்லது இன்றோ கூட எச்சந்தர்ப்பங்களிலும் இவரின் அங்கீகரிப்பை அல்லது பாராட்டை நான் எதிர்பார்த்திருந்ததில்லை, வேண்டி ஏங்கி நின்றதில்லை. தேவைப்பட்டுக் கேட்டிருந்ததில்லை, என்பதை இச்சந்தர்ப்பத்தில் பகிரங்கமாக உறுதிபடத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனாலும், எனது முதல்நூல் வெளியீட்டு விழாவைத் தொடர்ந்தும் நான் இவருடன் நல்லுறவைத் தொடர்ந்து பேணியேயிருந்தேன். நேரடியாக முரண்பட்டுக் கொள்ளவில்லை. ஆனால் திரு.அ.யேசுராசா என் நூல்வெளியீட்டைத் தொடர்ந்து என்னை ஒரு பகையாகக் கருதியிருந்தார் என்பதை பின் புரிந்து கொண்டேன். நான் அவருடன் நேரடியாக முரண்பட்டது அனேகமாக 2002ல். அதைப்பற்றியும் கூறத் தான் வேண்டும்.

2002 புரட்டாதி மாதம் சமாதான பேச்சு வார்த்தை காலத்தில் தியாகி திலீபன் நினைவு தின நிகழ்வு நல்லூர் ஆலய வீதியில் நீண்ட இடை வெளிக குப்பின் பிரமாண்டமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. அயலவன் என்பதால் மாலை வேளை யில் நல்லூர் வீதியில் நண்பர்களுடன் நான் கூடி அளவளாவுவது வழக்கம். அவ்வாறான ஒருநாள் இருள் சூழ்ந்த வேளை திரு. அ.யேசுராசா அங்கு நிகழ்வைக் காண வந்தார். அவரைக் கண்டவுடன் நானாக சென்று “எப்படி அண்ணை சுகம்” என நட்பு ரீதியில் விசாரிக்க முயன்றேன். அவர் என்னைக் கண்டதும் என்மீது சீறி விழுந்தார். “நீர் எப்படி இப்படி கவிதை எழுத முடியும்? இவ்வளவு கீழ்த்தரமான சொற்பிரயோகத்தை நான் என்றுமே கேட்டதில்லை” என்று துள்ளினார். எனக்கு என்ன நடந்தது என்று புரிய வில்லை. நான் “எதைக் கூறுகிறீர்கள்” என்று கேட்டேன். அக்காலத்தில் “தாயகம்” சஞ்சிகையில் வெளிவந்த (பின் “யாத்ரா” விலும் வெளிவந்த) எனது கவிதையொன்றில் “மயிர்” போன்ற சொற்களை நான் பாவித்திருந்தேன் என்றும் அது பாரதூரமான பிழை என்றும் அக்கவிதை தன்னைப் பற்றியதே என்றும் மீண்டும் மீண்டும் அவர் என்னைப் பேசவிடாமல் கூறினார். நான் மிக அமைதியாக அது தங்களை நினைத்து எழுதியதல்ல என்று எவ்வளவோ எடுத்துக் கூறியும் மிகவும் tension ஆகி ஏதேதோ சம்பந்தமில்லாத விடயங்களைக் கூறியவாறு மிகவும் முரண்பட்டு நல்லூர் நாவலர் மண்டபத்திற் கருகிலுள்ள கிணற்றில் நீரை அள்ளி மடமடவென்று குடித்து விட்டு சைக்கிளை எடுத்துக் கொண்டு சென்று விட்டார்.

நான் எனது விளக்கமொன்றை மறுதபாலில் எழுதினேன். நான் அவர்கூறிய சொற்களைப் பாவித்ததன் நியாயத்தையும், அவருடைய முந்தைய கட்டுரைகளில் எவ்வளவு அநாகரீகமான, பண்பாடற்ற, நையாண்டிகள், அருவருக்கத்தக்க சொற்பிரயோகங்கள், வசைபாடல்கள், அவரால் பயன்பட்டுள்ளன என்பதையும் சுட்டிக்காட்டி இருந்தேன்.

அக்கடிதத்தில் அவரின் கலை, கவிதை பற்றிய நம்பிக்கையை, அவருடைய தனித்துவத்தை நான் மதிக்கிறேன் என்பதையும் எடுத்துரைத்த அதே வேளை எனது கலை, கவிதை பற்றிய நம்பிக்கைகளையும் எனது தனித்துவத்தையும் நான் விட்டுக் கொடுக்க மாட்டேன் என்பதையும் தெரிவித்திருந்தேன். அதன்பின் நான் அவருடன் தொடர்பைப் பேணவில்லை. பின் வெளிவந்த எனது நூல் வெளியீடுகளுக்கு அழைப்பிதழ்களை மட்டும் தபாலில் அனுப்பியிருக்கிறேன். அவர் எதற்கும் வந்ததும் இல்லை.

அவரைப் பற்றி நான் இதுவரை எந்த இடத்திலும் தவறாக பேசியதோ அல்லது விமர்சித்ததோ இல்லை. அவர் பற்றிய சர்ச்சைகள் பல சஞ்சிகைகளில் வெளிவந்த போதும், பல இளைய இலக்கிய நண்பர்கள் அவரை அவதூறாக விமர்சித்த போதும், அவருடனான எனது முரண்பாட்டை அறிந்த சில நண்பர்கள் என் வாயைக் கிளற முயன்ற போதும், நான் அவை பற்றிய கருத்தைதையும் பொதுவெளியில் கூறாமல் தவிர்த்திருந்தேன். ஆனால் யேசுராசா என்மீதான தனது பகையுணர்வை தொடர்ந்து பேணியதுடன் அண்மைக்காலம் வரை இடைக்கிடையே முகப்புத்தகத்தினூடாகவும் **நானாக வலிந்து** எனது பதவியை வைத்து நையாண்டி பண்ணும் கைங்கரியத்திலும் ஈடுபட்டு வருகிறார். இதன் அடுத்த படியாக “ஜீவநதி 8ம் ஆண்டிதழில்” எனக்கென தனது பத்தியில் ஒரு பகுதியை ஒதுக்கி அருளியிருக்கிறார்.

அவருடைய கவிதை தொடர்பான பார்வையை நம்பிக்கையை நான் என்றும் விமர்சித்ததில்லை. எனது கவிதை தொடர்பாக அவருக்கு மாறுபட்ட கருத்து

இருக்கலாம். அவரே அப்பத்தியில் கூறியிருப்பது போல எனது கவிதைகளில் அவருக்கு ஈடுபாடில்லாமலும் இருக்கலாம். அது அவருடைய தனித்துவம், விருப்பம். அது பற்றி எனக்கு எள்ளளவும் கவலையில்லை. அதே நேரம் எனது கவிதை தொடர்பான எனது நம்பிக்கைகளை கருத்துகளை பரிகசிக்க இவருக்கும் அருகதை இல்லை என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். "கவிதை எழுதுவது தெய்வீக வரம் கவிஞன் பிறக்கிறான். உருவாக்கப் படுவதில்லை" என்பதை இக்கணம் வரை நான் உறுதியாக நம்புகிறேன்.

ஆனால், தன்னை ஒரு இலக்கியக் கொடுமுடியாக, இலக்கியக் குருபீடமாக, ஒரு ஈடு இணையற்ற இலக்கிய விமர்சன மேதையாக, தான் சொல்வதே... ஏற்பதே... இலக்கியம் என்ற ரீதியில் இயங்கும் இவரின் - என்னுடன் தொடர்பான கீழ்த்தரமான செயற்பாடுகள் சிலவற்றை நாகரிகம் கருதி இதுவரை வெளியிடாமல் தவிர்த்து வந்திருந்தேன். ஆனால் அது தவறு என இன்று உணர்கிறேன்.

நான் எனது இரண்டாவது கவிதை தொகுதியான "கைகளுக்குள் சிக்காத காற்றை" 2004ல் வெளியிட்ட போது விமர்சனம் ஆற்ற இருந்த விமர்சகர்களுள் ஒருவரை வெளியீட்டு விழாவின் ஓரிரு நாளின் முன் சந்தித்த திரு.அ. யேசுராசா **"இவருடைய கவிதைகளை சிலாகித்து, சிறந்தவை என்று நீர் பேசக்கூடாது. அப்படிச் சொன்னால் இவருக்கு நினைப்பு கூடிவிடும்."** என்று கேட்டுக் கொண்டிருந்தார் என அவ் விமர்சகர் ஊடாகவே அறிந்தேன். இது எவ்வளவு அடாவடித் தனமானது? அடுத்து, எனக்கு மகாகவி நினைவுக் கவிதைப் போட்டி யில் முதற்பரிசை இவரே தந்துவிட்டு என்னுடன் முரண்பட்ட பின்நாளில் தான், முதற்பரிசு பெற்ற அக்கவிதையை ஏற்றுக் கொள்ளவில்லையென்றும் வேறு ஒரு கவிதைதான் முதலாமிடம் பெற இருந்த தென்றும் judges இவருக்கு பரிசைக் கொடுத்து விட்டனர் என்று ஆதங்கப்பட்டதாகவும் அறிந்தேன். இவை இவரின் "இலக்கிய" மனப்பாங்கு நேர்மைக்கு நல்ல உதாரணங்கள்.

இவருடைய என்னைப் பற்றிய பத்தியின் இறுதியில் **"விதானைமார் பொய்யாகப் புளுகினாலும் புளுகாவிட்டாலும் இலங்கையர் கோன் நாம் பெருமைப் படத்தக்க எழுத்தாளர் தான் என்பதில் ஐயமில்லை. ஆனால் இலக்கியம் பேசும் அரசாங்க அதிகாரிகள் சிலரின் நிலை அத்தகையதல்ல!"** என்று எழுதியுள்ளார். இது மிகமிக அபத்தமானது என்பதற்கு மேலாக தனிமனித உரிமையில் நம்பிக்கையுள்ள அனைவராலும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது.

என்னைப் போன்ற அதிகாரிகள் சிலர் எழுத்தாளர்கள் அல்லது படைப்பாளிகளே அல்ல என என்னை மையப்படுத்திக் கூற இவருக்கு என்ன அருகதையிருக்கிறது? எந்த அளவுகோலைக் கொண்டு இதனை இவர் முடிவுசெய்தார்? யார் இந்த அதிகாரத்தை இவருக்கு வழங்கினார்கள்? இவர் என்ன ஈழ இலக்கியத்தை முடிவுசெய்யும், தீர்மானிக்கும், தீர்ப்பெழுதும் "இலக்கிய உச்ச நீதிமன்ற" நீதியரசரா? இக்கூற்றானது எனது தனிமனித சுதந்திரத்தை, எனது எழுத்துரிமையை, எனது சுய கௌரவத்தை மறுதலிக்கும் கூற்றாக இருக்கிறது. "நாம் பெருமைப்படத்தக்க..." என்று கூறியிருப்பது, இவர் எந்த மனநிலையில் கற்பனை உலகத்தில் தன்னை கட்டமைத்து எல்லாம் அறிந்த மேதாவியாக, தானே தீர்மானிக்கும் சக்தி என்று நினைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதை எடுத்துக்காட்டுகிறது. இவரை நினைத்தால் பரிதாபமாகத்தான் இருக்கிறது.

விதானைமாரின், அல்லது திரு.அ.யேசுராசாவின், அல்லது அவர் போன்றோரின், அல்லது யாரும் அரசியலாளரின் கோட்பாட்டாளர்களின் விமர்சகர்களின் விருப்பு வெறுப்புக்கு கவிதை எழுதுபவன் நானல்ல என்பதையும் எனது எழுத்துரிமைக்கு, இலக்கிய சுதந்திரத்திற்கு எவரும் சவால்விட, தடைபோட முடியாது என்பதையும் ஆணித்தரமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ●

– வி.எழில்நிலா –

## சாதியை ஆதரிக்கும் மானிடரே...!

வர்ணம் பிரிக்கும்
வண்ண மானிடரே...!
வர்ணம் பிரித்து
இன்று வரையிலும்
எதை சாதித்தீர்?
யாவரும் உம்போல்
மானிடர் தானே
அது புரியாமல்
ஏனோ உமக்குள்
வர்ணப் பிரிவு?

பள்ளிப்பருவமதில்
பள்ளி செல்கையில்
பக்குவமாய் காதில்
அறிவுரைகளைக்
கூறும் பெயரில்
பிஞ்சு மனதில்
சாதி வெறியைப்
பொறித்து வழியனுப்பும்
சாதி வெறி பிடித்த
பெற்றோரோ...!
நீரும் பெற்றோர்தானா?

உயர் சாதிக் கோயிலுள்
தாழ் சாதிக்கு அனுமதியில்லை
அனுமதி மீறின்
வாள் வெட்டு
இறைவா இதற்கு
நீயும் உடந்தையா?
சாதி என்னும் பேய்
தலை விரித்தாட
ஏனோ நீயும்
மௌனித்து நிற்கின்றாய்?

பக்கத்து வீட்டில்
இழவு நடக்கையில்
சாதி வெறியால்
சடங்கிற் பங்கு பெறாது
பார் தேசமும் கேட்க
வானொலியில் ஒலியைக்
கூட்டி விடும்
சாதி வெறியரே
உமக்குள் மனச்சாட்சி
என்பது இறந்து விட்டதா?

காதலர்களைப் பிரித்து
வாழ்வை நாசமாக்கி
சாதித்து விட்டேன்
என்று சந்தோஷத்தில்
ஆர்ப்பரிக்கும் சாதி
என்ற பேயினை
ஆதரிக்கும் மானிடரே...!
சாதியோடு போராடி
சாதியைத் தோற்கடிக்கும்
வல்லமை உமக்கில்லையா?

கொ. பாபு

# ந.இரவீந்திரனின்
# இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்

அண்மைக்காலத்தில் வெளியிடப்பட்ட கலாநிதி ந.இரவீந்திரன் அவர்களது இந்நூல் தொடர்பில் சில கருத்துக்களை முன்வைக்கலாம் என எண்ணுகிறேன். ஒரே மொழிக்குழுமத்துள் காணப்படும் இரு தேசியங்களின் வரலாற்று வளர்ச்சி நிலைகளை ஆய்ந்து, புதிய மார்க்கத்தைக் கட்டியெழுப்புவதும், அதே போன்று இச்சமூக அமைப்பு பண்பாட்டுப் புரட்சி வாயிலாக சமூக மாற்றங்கள் நடந்தேறி வந்த வரலாற்றையும் இனங்கண்டு, அதற்கேற்ப சமூக விடுதலை தொடர்பில் முன்னேறுவதும் இதன் மைய இலக்காகும். மேலைத்தேய சிந்தனைமுறை, அதன் வரலாறு, அச் சமூக அமைப்பு முறைமை, முரண்பாடு களும் மோதல்களும் பற்றி அறிந்து வைத்த அளவிற்கு நாம் நமது சொந்த தேசங்கள் தொடர்பான வரலாற்று வளர்ச்சி தொடர்பில், அது வளர்ந்து வந்த இயல்பினை அறியாதவர்களாய் இருந்துள்ளதை இந்நூல் சுட்டிக் காண்பிக்கிறது. இரட்டை தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும் என்ற இக்கருப்பொருள், மறைபொருளாய், மறை உண்மையாய், அன்னியமாய் நிற்பது போன்ற தோற்றப்பாடு எழுவதற்கான மூலக்காரணம், தமது சொந்த தேசங்கள் தொடர்பான வரலாற்று அனுபவப் பற்றாக் குறையே பிரதானம் என்பதை, விளங்கிக் கொள்ளுதல் நன்று. இரு தேசியங்கள் ஒரே மொழிக் குழுமத்துள் வளர்ந்து வந்த போதும் அவற்றுள் ஒவ்வொன்றினுள்ளும் வளர்ந்து வரும் தனித்துவங்கள் கராரான மதிப்பிடலுக்கு இங்கு உள்ளாகிறது. மொழி வாரியாக நோக்கப்பட்ட தேசிய இனச்சிக்கல் வர்க்க நோக்கில் தெளிவுபட அடையாளம் காண வழி வகுக்கப்படுகின்றது. ஈழத்துள் இறுகிப் போன சிக்கல்களில் இருந்து மீள்வதற்கான மார்க்கமாக, இந்நூல் அமைந்த போதும், இந்திய - இலங்கை வரலாற்று நிகழ்விற்கு ஒரு பொதுத் தன்மையையும் உண்டாக்குவதன் நிமித்தம், தென்னி லங்கை சிங்கள மக்களுக்கும் இந்திய சமூகத் திற்கும் இது தமது வரலாறு தொடர்பான புரிதலுக்கும் புதிய வியூகங்களுக்கும் உறுதுணையாக அமையத் தக்கது.




வெளியீடு - புதியபண்பாட்டுத்தளம்
விலை - 400/-
பக்கம் - 223

மார்க்சிய தத்துவத்தைப் புரிதல். அத்தத்துவத்தை மார்க்சிய மூலவர்கள் பிரயோகித்துக் கொண்ட மார்க்கம் தொடர்பில் இந்நூல் பல்வகை உதாரணங்களுடன் இதன் சார்புக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட நிலையை அறிகின்றோம்.

குறிப்பாக இந்நூல் சில விடயங்களை மையப்படுத்தி வலிமையாக பேச முனைகிறது. அவ்விடயமாவன,

* ஒடுக்கும் ஒடுக்கப்படும் இரு தேசியங்களின் (வெள்ளாள - தலித்திய சாதியங்களின்) இருப்பை கூர்மையாக நோக்கு கின்றது.
* இந்திய - ஈழத்துச் சூழலில் நிகழ்ந்து வந்த பண்பாட்டுப் புரட்சியின் தொடர்ச்சியை அடையாளப் படுத்த முனைகின்றது.
* இந்த மண்ணின் பிரத்தியேகச் சூழலைப் பொதுமைகள் இன்றி தனித்துவமாய் அடையாளம் இடுவதில் உறுதியாய் ஒலியெழுப்புகின்றது.
* பிரிந்து செல்லாத சுய நிர்ணயப் போராட்டத்தை பொறுப்புணர்வோடு கையிலெடுத்து பல்லின ஐக்கியத்தையும் சமூக விடுதலையையும் இலக்காய் கொள்ளுதல்.
* பின் நவீன சூழலுக்குள் முடங்குண்டு செல்லும் இன்றைய தலித் மக்களது எழுச்சியை வர்க்கப் புரட்சிக்குத் தலைமை சக்திகளாக மாற வழி காட்டும் மார்க்கம் மிளிர்கின்றது.
* மார்க்சிய தத்துவம் குறிப்பான சமூக சூழலுக்கு ஏற்ப பிரயோகிக்கத்தக்கதாகும்.

இது போன்ற மையப்பட்ட சிக்கல்களை நோக்கிய, இதற்கான பரிகாரம் தேடும் மார்க்கத்தை தழுவியதாகவே இந்நூலின் குவி மையம் காணப்படுவதை உணர முடிகின்றது.

மார்க்சிய தத்துவம் ஒவ்வொரு தேச சூழல்களின் அமைவை ஸ்தூலமாக ஆராய்ந்து பொருத்தப் பாடான அணுகுமுறையை கைக்கொண்ட விதத்தை சுட்டிக்காட்டுவதன் மூலம் நமது சூழலில் அதற்கே உரித்தான பொருத்தப்பாடான அணுகு முறையின் அவசியம் வலியுறுத்தப்படுகின்றது.

மேம்போக்காக நோக்குகின்ற போது இரட்டைத் தேசியம் என்ற கண்டுபிடிப்பு, தலித் தேசியம் தொடர்பில் உரமாய் பேசப்படுவதும், வலிந்து தேடிப் பிடித்து ஒருவித திணிப்பாய் நின்று அடம்பிடிப்பது போன்ற தோற்றப்பாடு,

பலர் மத்தியில் ஏற்படலாம். ஆனால் இவை இன்றைய சமகாலச் சூழலின் பேசு பொருளாய், வெளிக்கிளம்புவதற்கான புறக்காரணிகள் பலவுண்டு. தமிழ்த் தேசியம் என்பது ஒற்றைப் பரிமாணத்துள் நோக்கத்தக்க ஒன்றல்ல. அது சாதிகளின் தேசியமாய் பரிணமித்த வரலாறு உண்டு. தலித் மக்கள் பிரிவு புற ரீதியான முரண்பாடுகள் மூலம் மட்டுமன்றி, அகரீதியான முரண்பாடுகள் மூலமும் சிக்கித் தவிக்கின்றார்கள். சமகாலத்தைப் பொறுத்த வரை தேசிய இனச் சிக்கல் இலங்கையில் முரண் கொண்ட, முனைப்படைந்த பிணக்காய் தொடர்ந்தும் தலை தூக்கியுள்ளது. தலித்திய நிலையில் தேசிய இன விவகாரம், சாதிய ஒடுக்கு முறை, வர்க்கச் சுரண்டல் போன்ற முரண் நிலைகளுள் முகங்கொடுத்து வருகின்றது. மார்க்கசிய நோக்கு நிலையில் இவ் ஸ்தூலமான சூழ்நிலையை கண்டுணர்ந்து பிரிவினை யற்ற சுய நிர்ணய விவாகரத்துள் அக்கறைப்பட்டு, சாதிய விடுதலையை முனைப்பாய் முன்னெடுத்து, பிராந்திய ஏகாதிபக்திய சக்திகளுக்கு எதிராக இத்தேசத்தில் உள்ள அனைத்து ஒடுக்கப்பட்ட சக்தி களும், ஐக்கியமாய் அணிதிரளுவதன் மூலமே, சிறு பான்மை இனங்களதும், சுய நிர்ணய உரிமையையும், சாதிய, சமூக விடுதலையும் சாத்தியமாகும் என்பதே இரட்டைத் தேசியமும், பண்பாட்டுப் புரட்சியும் என்ற இந்நூலின் கருப் பொருளும், வியூகமும் ஆகும்.

கடந்த காலத்தில் மார்க்சிட்டுகள் இரண்டு விதமான தவறுகளை இளைத்துள்ளனர். என்பதை நாம் எண்ணிப்பார்க்க தக்கதாய் உள்ளது.

1. வர்க்க விடுதலையில் மட்டும் குறியாய் இருந்து சுயநிர்ணய, சாதிய விவகாரங்களுக்கான மாற்றுத் தீர்வை முனைப்பாய் முன்னெடுக்காமை.
2. தமிழ்தேசிய இனப்பிரச்சினையில் கவனம் கொண்டு, சாதிய, வர்க்க விடுதலை தொடர்பில் பாராமுகமாய், அல்லது கைவிடப்பட்டமை.

இத்தவறுகளையே இன்று நாம் படிப்பினை யாக்கிக் கொள்ளத்தக்கது. வர்க்க விடுதலையிலும் பார்க்க சாதிய, சுயநிர்ணய விவகாரங்களுக்கு இந்நூல் கொடுக்கப்படும். முக்கியத்துவம் தொடர்பில் பலருக்கு மனக்கசப்பு, அல்லது ஆக்ரோசமான விமர்சனம் எழலாம். அகமன விருப்பு, வெறுப்புக்கள் கடந்து தமது சமூக இருப்பை நோக்குதலும் இச் சமூகம் வளர்ந்து வந்த வரலாற்றை தொடுவதும். இரட்டைத் தேசியம் தொடர்பான இந்நூலை கருத்தூன்றி வாசிப்பதும் மிக முக்கியம். நான் இந்நூல் தொடர்பில் அதிகளவு உடன்படுவதால், எனது சார்பு நிலைக்கருத்து இங்கு தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

சாதிகளின் தேசமாய் இந்திய சமூகம் வளர்ந்து வந்ததின் நிமிர்த்தம், அதனை ஒட்டிய ஈழத்து வரலாற்றிலும் சாதிய கட்டமைப்பின் செல்வாக்கை அவதானிக்க முடிகின்றது. தமது சாதிய கட்டமைப்பை இறுக்கமாகவும், அதிகாரமாகவும் இருப்பில் தக்க வைக்கும் சமயப் போர்கள் நிகழ்ந்த, கடந்தகால வரலாற்றை கற்றறிவதன் மூலம் அறியத்தக்கதாய் உள்ளது. சமணம், வைணவம், பௌத்த மதம் போன்ற உள்ளூர் சமயம் சார்ந்த மோதல்கள் இந்து சமயத்தால் மேற்கொள்ளப்பட்ட வரலாற்றையே இந்நூல் பண் பாட்டுப் புரட்சியின் வரலாறாக தொட்டுக் காண்பிக்கிறது. இந்து சமயத்துள் தோன்றி வளர்ந்த இந்து மேலாதிகச் சிந்தனை எல்லா வகையிலும் முறியடிக்கத்தக்க ஒன்று. அதே வேளை அந்நிய ஏகாதி பத்திய சக்திகளுக்கு எதிரான எதிர்புரட்சி வர்க்கப் புரட்சியாக அன்றி பண் பாட்டுப்புரட்சியாகவே நமது சூழலில் பரிணமித்துள்ளது. ஆகவே இது தொடர்பான ஆழமான இலக்கிய பார்வை நம் மத்தியில் தோன்றியெழுதலும் அதன் சரியான திசையை கண்டு உணர்தலும் இன்றியமையாதவை யாகும். இச்சமூக வரலாறானது ஐரோப்பிய சமூக வரலாற்றின் வளர்ச்சி முறையில் இருந்து முற்றிலும் மாறுபட்ட தனித் தன்மையையும், தனி இயல்பையும் கொண்டது. இச் சமூகக் கட்டமைப்பை பிரத்தியேகமாக மதிப்பிட வேண்டிய அம்சம் என்பதனை, கலாநிதி ந. இரவீந்திரன் அவர்கள் காத்திரமாய் எடுத்துரைக்கும் முக்கிய செய்தி. ஆகவே மரபு ரீதியான சமூகக் கட்டமைப்பு, வளர்ச்சி, வர்க்கப்புரட்சி, தத்துவம், சாதியம், சுயநிர்ணயம் போன்ற பல்வேறு விடயங்களை இந்த மண்ணின் சமூக பொருளாதார கட்டமைப்புத் தொடக்கம் அதன் பாரம்பரிய ஆதிக்க, அடக்கப்பட்ட மக்களது வரலாற்று இயல்புடனும் வர்க்க நல நோக்குடனும் அடையாளப்படுத்த முனைவதே, புதிய மரபு மீறல் போக்காக இங்கு குறிப்பிடலாம். மார்க்சிய தத்துவம், அதன் நடைமுறை, அதன் பிரயோக முறைமை என்பன பற்றிய, ஒரு யாந்திரீகப்பார்வை எமக்குள் குடிகொண்டு வருவதனாலேயே, மார்க்சிய மரபு மீறல் என்னும் சொற்பதத்தை இங்கு, பிரயோகிக்க வேண்டியுள்ளது. ஆனால் மார்க்சீய மூலவர்கள் பலர் இந்த மரபு மீறலை முன்னர் நிகழ்த்தியுள்ளனர். ஆகவே ந. இரவீந்திரன் அவர்கள் குறிப்பிடும் பண்பாட்டுப் புரட்சி அதிக கவன ஈர்ப்புக்கு உரியதாகமாறுகின்ற, அம்சத்தை இங்கு கவனித்தல் முக்கியமாகின்றது.

ஆரிய திராவிட இனக்குழுக்களின் சங்கமமாக இந்து சமயம் வெளிப்பார்வைக்கு தென்பட்டாலும், உள்ளார்ந்தமாக சமய, சாதிய, கலை கலாசார பண்பாட்டு அம்சங்களுள், இரு வெவ்வேறுபட்ட சமூக அலகுகளாக வளர்ந்து வந்த சரிதையைத் கண்டு உணர முடியும். சமய மோதல்கள் வாயிலாக சாதிய ஆதிக்க அரசியலே கட்டிக்காக்கப்பட்டு வந்துள்ளன. இந்திய ஈழத்துச் சூழலுக்கு வெளியில் இருந்து வந்த சமய மாகவே கிறிஸ்தவ சமயம் திகழ்கின்றது. அகரீதியாக உள்ளூர் சமய மோதல்கள் ஊடாக இருப்புக் கொண்ட இந்து சமயம் பின்னர் கிறிஸ்தவ சமயப் பரப்போடு மோதுகைக்கு உள்ளாகின்றது. சமய மோதுகை ஊடாக வளர்ந்து வரும் இந்த வரலாற்றையே பண்பாட்டுப் புரட்சியின் வரலாறாக கணிப்பீடு செய்து கொள்ள வேண்டும். இப்பண்பாட்டுப் புரட்சி மூலம் மாற்றம் பெறும் இத்தள இயங்கியலை கண்ணுற்று அதற்கு ஏற்றதான

எதிர்கால மாறுதல் போக்கிற்கு உரித்தான மார்க்கத்தை வகுத்துக் கொள்ளல் வேண்டும். என்பதனை உறுதிப்படுத்தி எடுத்துரைத்து நிற்கிறது. இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப்புரட்சியும் என்ற இந்நூலாகும். இத்தளம் இயங்கி வந்த வரலாற்றை ஒட்டிய போக்காக மேலும் எதிர்கால அரசியலாக புதிய பண்பாட்டுப் புரட்சி கருக்கொள்கிறது.

சாதிய விடுதலை, இன விடுதலை, வர்க்க விடுதலை கருதி ஆதிக்க வெள்ளாள சாதியத்திற்கும், பேரின வாத அரச யந்திரத்திற்கும், ஏகாதிபத்திய சக்திகளுக்கும் எதிராக ஒடுக்கப்பட்ட சாதியங்களின் ஒன்றினைவும் மார்க்சிய நோக்கிலான உபாயங்களும் இன்றியமையாதவை. பிராந்திய ரீதியாக மேலாதிக்கம் செலுத்தும் இந்திய அரசியல் பற்றி இந்நூல் முன் வைக்கும் கருத்துக்கள் மீள்பார்வைக்கு மட்டுமன்றி எமக்கோர் எச்சரிக்கை உணர்வையும் தோற்றுவிக் கின்றது. தன் பிடிக்குள் இலங்கையை பெயரளவு மாநிலம் போல் கைக் கொண்ட நிலைமாறி, இலங்கை யின் அனைத்து அரசியல் விவகாரங்களையும் தீர்மானிக்கின்ற, நிர்ணயிக்கின்ற சக்தியாக அவ்வரசு, உள்நாட்டு விவகாரத்தின் இறைமையை தன் வசமாக்கி வருவதை அவதானிக்க முடிகின்றது. இவ்வரசுக்குள் ஏற்படத்தக்க யாப்பு உருவாக்க திருத்தங்கள், மாற்றங் கள் இந்திய அரசின் ஆட்சி முறைமைக்கு குந்தகமில் லாது ஏற்பட வேண்டும் என்பதில் மிகக் கவனமாக உள்ளது. இந்திய மாநிலங் களுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்களுக்கு உட்பட்டதாகவே ஈழத்தில் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதிலும் கண்ணும் கருத்துமாக உள்ளது. வரலாற்று ரீதியாக தமிழின் வளர்ச்சி, இந்திய நாகரீகத்துடன் ஒட்டி வருவதாலும் இன மொழி வாரியாக காணப்படும் நெருக்கமும், புவியல் அமைவிட முக்கியத்துவம் அது போன்ற பல்வேறு காரணிகள் இந்தியா மீதான தமிழ் மக்களின் கரிசனைக்கும், நம்பிக்கைக்கும் பிரதான காரணமாகும்.

இந்திய அரசியலின் கபடத்தனங்களையும் சூழ்ச்சிகளையும் அறியாமல் தமிழ் மக்கள் மட்டுமன்றி பல்தேசிய இனங்களும் அறியாமை இருளுக்குள் மூழ்கி இருப்பது தொடர்பான கண்ணோட்டங்கள் திகழும் வண்ணம் இரட்டை தேசியம் நூலின் வாயிலான கருத்தியல்கள் மக்கள் மனங்களின் மீள்பார்வைக்கு உகந்தவை. தேசத்தின் முழு இறைமையும் இந்திய அரசியலின் ஆதிக்கத்திற்கு உட்பட்டுள்ளது என்ற நிகழ் உண்மையையும் நூலாசிரியர் சுட்டிக்காண்பிக்கிறார். தேசியம் தொடர்பில் மேலைத்தேய நாடுகளில் உதித்த தேசிய அரசுகளுக்கும் கீழைத்தேய நாடுகளில் உதித்த தேசிய அரசுகளுக்குமான அடிப்படை வேறுபாட்டை நோக்கத்தக்கதாய் உள்ளது, விவசாய வாய்ப்போடு திணை மேலாதிக்கத்தால் சாதியவாழ்வுமுறையை ஏற்படுத்திய எமது வரலாற்றுச் செல்நெறியை இன்றைய தேசிய உருவாக்கத்துடன் இணைத்துப்பார்க்க முயல் கிறது. என்ற இப்புத்தகத்தின் முறைமையை ஒட்டி தேசிய உருவாக்கத்தின் பண்முகத்தன்மைகளை அறியலாம். குறைப்பிரசவம் போல் காலனியத்தால் கைமாற்றப்பட்ட தேசிய அரசுகள் பண்பாட்டுப் புரட்சியின் வரலாற்று வளர்ச்சி சார்ந்தவை என்பது இங்கு இதன் மையக் கருத்தாகும். சுயநிர்ணய உரிமை தொடர்பில் இருவகைத் தன்மைகளை கவனிக்கலாம்.

1. பிரிந்து செல்லும் சுய நிர்ணயத்தன்மை
2. பிரிந்து செல்லாத சுய நிர்ணயத்தன்மை

ஒரு குறிப்பான சமூகப்பொருளாதார கட்டமைப்பில் பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்தில் வகுக்கப்படும் கோட்பாட்டின் நிமித்தம் பிரிவினை சார்ந்ததும், பிரிவினை சாராததுமான சுயநிர்ணயம் கட்டியமைக்கப்படுகின்றது. ஈழத்து சூழ்நிலையில் பல்லின ஐக்கியமும் சிறுபாண்மை இனமக்களின் சுயாதீனமும், வர்க்க ஒன்றினைப்பும் முக்கியம். சமஸ்டி முறையிலான சமூக மாற்றம் வேண்டத்தக்கதான இந்நூலின் எடுத்துரைப்பு பல்லின ஐக்கியத்துக்கு வலுவூட்டுவதாகவும், அவ்வினங்களிடையே ஊடுருவி நிற்கும் வீணான ஐயுறவுகள் விலகத்தக்கதாகவும் உள்ளது. சுயநிர்ணயம் தொடர்பான பாட்டாளி வர்க்க நோக்கு நிலையே அரச யந்திரத்தை ஆட்டங்கான வைக்கத்தக்க ஒன்று. கடந்தகால வரலாற்று அனுபவங் களின் ஒட்டு மொத்த திரட்சியாக வெளிப்படும் ஒரு சிந்தனை தெளிவே இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும் ஆகும்.

இது ஒரு கோட்பாட்டு வடிவம் கொள்தல் வேண்டும்.

அ. இரட்டைத் தேசியம் தொடர்பில் தெளிவுறல்.
ஆ. பண்பாட்டுப் புரட்சியின் வரலாற்றை அறிதலும், தொடர்தலும்.

இவ் எண்ணக்கரு கூட்டு விவாதம், கூட்டான ஒருமித்தல், ஸ்தூலமான தெளிவு நிலையில் சாதிகளின் வரலாற்றைக் கொண்டு வளர்ந்த இச்சமுதாயத்திற்கு புதிய வியூகத்தை வகுத்தல் வேண்டும். இந்நூலில் காணப்படும் ஒவ்வொரு அத்தியாயங்களும் கடந்த கால வரலாற்றுப் போக்கோடு படைப்பாளி தனது அனுபவங் களையும் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் முன் வைத்துள்ளார். கருத்துக்களை ஆழமாய், தரவுகளோடு, வரலாற்றுப் போக்குடன், சொற்சிக்கனத்துடன் நவீன மொழிவளர்ச்சியுடன் இவ் ஆய்வை படைப்பாளி முன்வைப்பதன் நிமித்தம், மொழி நடையியல் சிந்தனை இறுக்கமும் கட்டுக்கோப்பும் பெறுவதற்கு பிரதான காரணம் என்பதனை வாசகர்கள் புரிதல் நன்று. தேசியம், சுயநிர்ணயம், தத்துவம், பிராந்திய மேலாதிக்கம், பண்பாட்டு வளர்ச்சி, இரட்டைத் தேசியம், கோட்பாட்டு உருவாக்கம், தலித்தியம் போன்ற பல விடயங்களை ஆய்வுக்கு உட்படுத்தி இப்பின் நவீன சூழலில் மார்க்சிய தத்துவத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தையும், அதன் நடைமுறைக்கு புதிய அரங்கையும் கோட்பாடாய், அமைத்து தந்ததே இப்புத்தகத்தின் சிறப்பாகும். இனி வரும் காலங்களில் கீழைத்தேய நாடுகளின், சமுதாய வளர்ச்சி முறைமை கருத்தூன்றிக் கவனிக்கத்தக்க தான, சூழ்நிலை மாறிவரும்.

குறுங்கதை – 7

## பவிசு வந்த போது...

கண.மகேஸ்வரன்

ஒரு சிற்றூழியனாக ஆட்பதிவுத்திணைக் களத்தில் இணைந்தபோது வாலிபனான அவனுக்கு கொஞ்சம் கூச்சமாகவே இருந்தது.

நிறைய பெண்பிள்ளைகள் எழுதுநர்களாக நியமனம் பெற்று, ஒத்த வயதுடைய வாலிபர்களுடன் மனநிறைவாக மகிழ்ச்சியுடன் பேசிச் சிரித்து உலாவிய போது, கொஞ்சம் பொறாமையாகவுமிருந்தது.

காலையில் நேரத்துடன் வேலைக்கு வந்து, வந்ததும் வராததுமாக அலுவலக மேசைகள், கண்ணாடி ஐன்னல்களையெல்லாம் தூசு தட்டித் துடைத்து அலுவலகத்தையும் பெருக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவனை நிலை குலைய வைத்தது.

சரியாக ஓ.எல். தேறாததால், வலிந்து ஏற்றுக் கொண்ட வேலை என்பதால், தானும் ஊதியம் பெறுவ தான ஒரு மகிழ்வில் உள்ளம் பூரித்தாலும், அடி மனதில் ஒரு நெருடல் இருக்கவே செய்தது.

இவன் வயதையொத்த ஒருத்தி, தன் மேசையை வடிவாகத் துப்பரவு செய்யவில்லை என்று எழுந்து விலகி வழி விட்டதும், இவனுக்கு மிகுந்த தர்ம சங்கடமாக இருந்தது.

பற்களால் கீழுதட்டைக் கடித்துக் கொண்டே தன் பணியை நிறைவேற்றியபின், இவன் சொன்னான் -

"சரிதான் மிஸ்! ஆணைக்கொரு காலம் வந்தால், பூனைக்கும் ஒரு காலம் வரத்தான் செய்யும். இப்பிடி ஒரு ரேபிள்ளை நானும் ஒருநாள் சரிக்குச் சமனாக உட்காரயுக்கை, இதுக்காக மனவருத்தப்படுவீர்கள்! அப்ப பார்ப்பமே!?" என்று இவன் சவால்விட்டான்.

காலச் சுழற்சியில் அவள் காதல் வயப்பட்டு கல்யாணமாகி, சிறிது காலத்திலேயே விவாகரத்துப் பெற்ற போது, அவளுக்காக இவன் அனுதாபப்பட்டான்.

அவளுக்கு இடமாற்றம் வருமுன்னே, சிற்றூழி யருக்கான போட்டிப் பரீட்சையில் இவன் தேறி, அவளைப்போலவே எழுதுநராகப் பதவியுயர்வுடன் இடமாற்றம் கிடைத்தபோதும், அவள் நிலையெண்ணி மனமிரங்கியவனாய், வெறும் புன்னகையாலேயே அவளைப் பார்த்துக் கண் சிமிட்டி, தான் சாதித்ததை நினைவுறுத்தினான்.

அலுவலக கன்ரீனில் தன் நண்பர்களுடன் மகிழ்வைப் பகிர்ந்து கொண்டாடும் போது, இவனது நடவடிக்கையைக் கவனித்த சிப்பந்தி இவனுடன் முரண்பட்டான்.

வழமையாக, "கோபாலண்ணை! எனக்கு ஸ்ரோங்காய் ஒரு ரீ போடுங்க" என்று விநயமாகக் குழையும் இவனா! இப்ப மாறிவிட்டானே, கோபால் மூக்கின் மேல் விரலை வைத்தான்.

"கோபால்! ஒரு நாலு ரீ போட்டு எடுத்து வாரும்!" என, கட்டளையிடுவது போல் ஏவியது கோபாலுக்குப் பிடிக்கவில்லை.

அதனைக் காதில் வாங்கிக் கொள்ளாதவன் போல், மற்றவர்களைக் கவனிக்கத் தொடங்கியபோது இவனுக்குக் கொதிப்பேறியது.

"ஐஸே, நான் சொன்னது கேட்கயில்லையா?" என்று இவன் கூப்பாடு போட்டபோது, கோபாலும் தன் பங்கிற்கு ஆவேசமாகக் கத்தினான்.

"ஹலோ! உமக்கு கொம்பு முளைச்சால், அது என்னை ஒன்டும் செய்யாது! அற்பனுக்குப் பவிசு வந்தால் இப்படித்தான் இருக்குமென்டு இப்பதான் நல்லாய்ப் புரியுது!" என்றான், எரிச்சலுடன்.

"கொல்" லென்று சிரித்த கூட்டத்தைப் பார்த்து இவன் தலைகவிழ்ந்தான், மீண்டு எழ முடியாதவனாக.

குறுங்கதை

## பள்ளில காவின்

பாலமுனை பாறூக்

இரண்டு மூன்று "ஸப்போடு" நிறைவேறும் அஸர்த் தொழுகை இன்று ஜமாஅத்தாரால் நிறைந்து வழிந்தது. ஐவேளைத் தொழுகைக்கு ஒழுங்காகப் பள்ளிக்கு வரும் அகமது மாஸ்டருக்கு இது ஆச்சரியம்.

அஸர்த் தொழுகை முடிந்த கையோடு பள்ளியில் காவின் எழுதும் ஏற்பாடு செய்யப் பட்டிருந்ததை அவர் அறிந்திருக்கவில்லை.

கோட் சூட்டோடு மாப்பிள்ளை வந்திருந்தார்.

"தொப்பி போடாமலா பள்ளிக்கு வாற" ஓடி வந்த ஒருவர் சிவப்பு நிறத் தொப்பியொன்றை மாப்பிள்ளையின் தலையில் மாட்டி விட்டார்.

அத்தர் மணம்,சென்ற் வாசனை இவை தவிர ஒரு வித்தியாசமான நெடியும் வந்தது. சில இளசுகள் "குஷித் தண்ணியும்" போட்டிருப்பதாக ஒருவர் புறு புறுத்துக் கொண்டார்.

"ஆடம்பரமில்லாம இப்புடி சிம்பிளான அமைப்பில கல்யாணம் முடிக்கிறதத்தான் இஸ்லாம் விரும்புது. மஹர் கொடுத்து "ஆண் மகன்" பெண்ண எடுத்துக் கொள்ளணும் "குத்பா ஓதிய மௌலவி" ஆண் மகனை" அழுத்திக் கொண்டார்.

"மஹர் எவ்வளவு கொடுக்கிற?" லெப்பை கேட்டார் "ஒரு லெச்சம் பெறுமதியான தங்கத் தாலி" மாப்பிள்ளை பதில்; சொன்னார்.

அது காவினில் பதிந்து கொள்ளப்பட்டது.

சபையோர் சாஹிதாக நீங்கள் தந்த மஹருக்கு றைஹானா பீவியை ஹலால் மனைவியாக ஆக்கித் தந்தோம் ஏற்றுக் கொண்டீர்களா? கபில்து... கபில்து... கபில்து... மாப்பிள்ளையின் கைவிரலில் வெள்ளி மோதிர மொன்றை அணிந்து வைத்த பெண்ணின் சகோதரரை அகமது மாஸ்டர் கண்டு கொண்டார்.

அகமது மாஸ்டருக்கு தெரிந்தவர் அவர். வாப்பா காலமாகிய பின்னர் சவுதிக்குப் போய் ஐந்து வருடங் களாக நின்று உழைத்து நல்ல வீடொன்றை கட்டி முடித்திருக் கின்றார். ஒரு மாதத்திற்கு முன்புதான் சவூதியில் இருந்து வந்தார் தங்கைக்கு மாப்பிள்ளை கேட்டிருப்ப தாகவும் மாப்பிள்ளை வீட்டார், "நாங்க சீதனம் ஒண்டும் கேக்கல்ல எங்களுக்கு வேணா நீங்க ஒங்குட தங்கச்சிக்கு கட்டிரிக்கிற புது வீட்டயும் காசி இருபது லச்சமும் கொடுங்க கலி யாணத்த சிம்பிளா நடத்துவம்" என்று சொன்னதாகவும் அகமது மாஸ்டரிடம் சொல்லி யிருக்கிறார்.

பள்ளியில் "சிம்பிளாக" நிறைவேறிய காவினுக்கு துஆப் பிரார்த்தனை இடம் பெற்றது அகமது மாஸ்டர் துஆவுக்கு கையேந்த நிற்கவில்லை அவசரமாக வெளியேறினார்.

# ஒரு நட்பின் நினைவலை

காலையிலே தூய கனவாய் வந்தாய்
மாலையிலே மாய நினைவாய் கொன்றாய்
ஒன்றாய் திரிந்தோம் சில நாட்கள்
இரண்டாய் பிரிந்தோம் பல நாட்கள்

தெருக்கள் தோறும் மாங்காய் பொறுக்கி
தேனீக் கூட்டிற்கு கல்லும் எறிந்தோம்
சொத்தி நாயினைச் சுரண்டிப் பார்த்து
சொல்லிற்கடங்காத சாதனை புரிந்தோம்.


முருகன் கோவில் தென்னை மரத்தில்
முழுசி முழுசி தேங்காய் பறித்தோம்
ஐயர் வந்ததும் "ஐயோ" என்று
அலறிப் புடைத்து ஓடிச்சென்றோம்

தாவித்தாவி ஈச்சை பறித்தோம்
தன்னந்தனியே இரவில் சென்றோம்
பாட்டுப்பாடி தாளம் போட்டோம்
பார்த்து எழுதி தளும்பும் பெற்றோம்.

சண்டை வந்தால் தரையில் உருண்டோம்
சமாதானமாய் சொக்லேற் உண்டோம்
நக்கல் செய்தோம், நளினம் செய்தோம்
நட்பாய் இருந்த காலத்தில் அன்று

வல்லைவெளிக்கு போறேன் என்றாய்
வலக்கண் துடிக்குது வேண்டாம் என்றேன்
இல்லை என்றாகி விபத்திலே தொலைந்தாய்
இதயம் கனக்குது எப்போது காண்போம்.

– ஸ்ரீ.ஐஸ்மியா



**புதுப்புனல்**

யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் தரம் 10 இல் கல்வி பயிலும் ஸ்ரீலங்கரூபன் ஐஸ்மிகா கவிதை எழுதுவதில் அதிக நாட்டமுடையவர். ஜீவநதி இதழின் ஊடாக இலக்கிய உலகிற்கு இவரை அறிமுகப்படுத்தி வைப்பதில் பெரு மகிழ்வு அடைகின்றோம்.



ராஜாஜி ராஜகோபாலனின்

# "ஒரு வழிப்போக்கனின் வாக்குமூலம்"




வெளியீடு - வளரி
விலை - 75/-(இந்திய)
பக்கம் - 115

"ஒரு வழிப்போக்கனின் வாக்கு மூலம்" என்கின்ற இந்த கவிதை நூல் ஊடாக இலக்கியப் பயணத்தில் கவிதை வாகனத்தில் பயணிக்கின்ற ஈழத்து புலம்பெயர் படைப்பாளியாகிய ராஜாஜி ராஜகோபலானினுடைய காத்திரமான எழுத்து நடையை தரிசிக்க முடிகின்றது. நீண்டகால வரலாற்றுப்பின்னணி கொண்ட கவிதை இலக்கியம் ஆனது காலத்திற்கு காலம் அதன் வடிவ மாற்றத்தை கண்டு பயணித்துக் கொண்டிருக்கின்றது. மரபுக் கவிதைகளின் ஆதிக்கம் கோலோச்சத் தொடங்கிய காலம் தொட்டு இன்று புதுக்கவிதைக் காலம் மாற்றம் பெற்றுள்ள காலம் வரை தனிச்சிறப்பு மிக்க இக்கவிதை இலக்கியம் பல்வேறு வடிவ மாற்றங்கள், பரீட்சார்த முறைகள் என பல்வகையான மாற்றத்தை தம்மகத்தே உள்ளிருத்தி சிறப்பாக பயணம் கொள்கின்றது.

ஒரு வழிப்போக்கனின் வாக்குமூலம் என்கின்ற இந்நூலின் ஆசிரியர் ராஜாஜி ராஜகோபாலன் அவர்கள் ஏலவே பல்வேறு வகையான எழுத்துக்கள் மூலமும், இலக்கியச் செயற்பாடுகள் வாயிலாகவும் நன்கறியப்பட்டவர். ஈழமண்ணில் உக்கிரமடைந்த இனப்பிரச்சினை, போர் காரணமாக எம்மண்ணிலிருந்து பல படைப்பாளிகள் புலம்பெயர் நாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்ந்து வருகிறார்கள். அவர்களில் இவரும் ஒருவர். ஈழத்திலிருந்து கனடா நாட்டிற்கு புலம் பெயர்ந்து அங்கிருந்தவாறு தனது எழுத்து முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ராஜாஜி ராஜகோபாலன் அவர்களின் அண்மையில் வெளிவந்திருக்கும் படைப்பே இது.

வளரி எழுத்துக்கூடம் வெளியீடாக வெளிவந்திருக்கும் மேற்படி நூலில் 36 கவிதைகள் இருக்கின்றன. மிகவும் அழகான தலைப்புக்கேற்ற அட்டை அலங்கரிப்போடு வெளிவந்திருக்கும் இந்நூலில் பல்வேறுபட்ட உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடிய கவிதைகள் பல இருக்கின்றன. உணர்வுகள் என்பதை காட்டிலும் புலம்பெயர் மண்ணிலிருந்து தன் தாயக மண்ணில் தான் அதிகம் இழக்கின்ற அல்லது இழந்த பல விடயங்களை மிக தத்ரூபமாக ராஜாஜி ராஜ கோபாலன் அவர்கள் பதிவு செய்திருக்கின்றார். கவிஞர்கள் என்பவர்கள் யார்? கவிதை எழுதுபவர்கள் எல்லாரும் கவிஞர்க ளா? அப்படியாயின் கவிஞர்கள் என யாரை அழைக்கலாம்? என்கின்ற சமகால எழுத்தியல் தளத்தில் உருவெடுக்கின்ற சலசலப்புகளிற்கு மத்தியில் ராஜாஜி ராஜகோபாலன் அவர்கள் தனது நூலின் வாசலில் இப்படிச் சொல்கின்றார்

"என்னை நான் கவிஞனென்று அழைத்துக் கொள்வதில்லை. நீங்கள் அப்படி அழைப்பின் நான் உரிமையுடன் உங்களுடன் எதிர்வாதம் செய்ய வேண்டி வரலாம். ஆனால் நான் எழுதுவதைக் கவிதையென அழைக்க மட்டும் அனுமதி தாருங்கள்"

என மிகச்சிறப்பாக தன்னிலைசார் கோரிக்கை யொன்றை முன் வைக்கின்றார்.

அடுத்து இந்நூலை முழுமையாக படித்து முடித்த பின்னர் ஒரு விடயத்தை இந்நூல் மூலமாக தரிசிக்க முடிகின்றது. அதாவது இவரிடம் ஒரு காத்திரமான தனித்துவம் நிறை ஒரு வித்தியாசமான கவிதை வடிவத்தை காண முடிகிறது. அந்த வடிவம் யாரையும் பின்பற்றாமல் தனக்குரிய பாணியில் சொல்ல வந்த விடயத்தை புரியும்படி சொல்கின்ற வடிவமாக காட்சி தருகின்றது. ஒவ்வொரு கவிதைகளும் இவரின் நூலின் தலைப்பைப்போல இவரின் வாக்குமூலங்களாகவே அமைந்திருக்கின்றன. அதிலும் ஓ தமிழகமே (பக்.21) என்று வருகின்ற கவிதை மிகச்சிறப்பாக மிக முக்கியமான வரலாற்றுச் சம்பவங்களை ரணங்கள் நிறைய வெளிப்படுத்தி இருக்கின்றது.

"....................
இந்த மண்ணின்
பிரகடனப்படுத்தப்படாத
இராணுவ ஆட்சியில்
இளைஞர்கள் இலகுவாய்
காணாமல் போகிறார்கள்

துப்பாக்கிச் சனியங்களின்

அத்தாணி மண்டபத்தில்
துரோபதைகள் பலர்
துகிலுரியப்படுகிறார்கள்!"

போன்ற வரிகள் மிகச்சிறப்பாகவும் நிகழ் காலத்தின் விம்பங்களை வெளிக்காட்டகின்றது.

அடுத்து உலகத்தில் எந்த மூலையில் இருந்தாலும் நம்மவர்கள் ஏங்குகின்ற தின்பண்டங் களில் ஒன்றான "பருத்தித்துறை வடை" பற்றியும் அதன் சுவை அனுபவங்கள் பற்றியும் "பருத்தித்துறை வடை" (ப.47) என்கின்ற கவிதையில் பதிவு செய்கிறார் ஆசிரியர்.

"..............
பெட்டியிலே போட்டு வைத்தால் கல்லாகும்
போத்தலில் மூடி வைத்தால் முறுக்காகும்
சுட்டவுடன் சுவைத்தால் சொர்க்கமன்றோ
கள்ளுக்குச்
சுதி சேர்க்கும் வடை ருசிக்கு
இணையுமுண்டோ......"

என்ற வரிகளின் ஊடாக ஒவ்வொருவர்களின் அனுபவ தரிசனங்களையும் தந்திருக்கின்றார்.

நூலில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு கவிதை களும் ஏதோவொரு செய்திகளை சமூகத்துக்கு வழங்கு கின்றன. தனக்கேயுரிய மொழியில், தனக்குரிய பாணியில் மிகச்சிறப்பாக தன் ஒவ்வொரு கவிதை களையும் ஆசிரியர் மிகக் கவனமாக புனைந்திருக் கின்றார். மரங்களை நேசிப்போம், புதுக்கணக்கு, நீறு பூத்த நெருப்பு போன்ற கவிதைகளும் மிகச்சிறப்பாக வந்திருக்கின்றன.

நிறைவாக "ஒரு வழிப்போக்கனின் வாக்கு மூலம்" என்கின்ற இந்தத் தொகுதியின் வாயிலாக புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் தாயகத்தின் மீதும், இதர விடயங்களின் மீதும் தான் கொண்டுள்ள பற்றுறுதியை ராஜாஜி ராஜ கோபாலன் அவர்கள் எந்த விதமான அரிதாரங்களும் இன்றி உள்ளதை உள்ளவாறு தனது வாக்குமூலமாக பதிந்திருக்கின்றார். அந்த வாக்கு மூலத்தை எளிய மொழிநடை வாயிலாகவும் வாசகனிடம் இலகுவில் கொண்டு சேர்த்திருக்கின்றார் என்று கூறுவது சாலப்பொருத்தமானதாக இருக்கும். தொடர்ந்து பல அரிய விடயங்களை படைப்பு வாயிலாக தருவார் என்கின்ற நம்பிக்கையை இத்தொகுப்பு எமக்குத் தந்திருக்கின்றது.

●

## பேசும் இதயங்கள்

ஜீவநதியின் 8 ஆவது ஆண்டுமலர் கரம் கிடைத்தது. படித்து மகிழ்ச்சியுற்றேன். இந்த இதழில் ஜீவநதியில் வெளியான அனைத்து அம்சங்களும் பிரமாதம். சிறப்பாக ச.முருகானந்தனின் "கோடை மழை", "பொய்த்து மீண்டும் புஸ்பித்த" காதலை நாசூக்காக எடுத்துக் காட்டியது! தெணியானின் "அணையாச்சுடர்" மீன் வியாபாரியான பொன்ராசனின் ஏழ்மைக்கதையை யதார்த்தமாக எடுத்துக்காட்டியது. பி.கிருஷ்ணானந்தனின் "நிலவுக்குள் நெருப்பு", புலம் பெயர்ந்து வாழும்(சுவிஸ் நாட்டில்) ஒரு யாழ்ப்பாணத்துத் தமிழ் குடும்பத்தில் நிலவும் மிக முக்கியமான கருத்து மோதல்களை அழகாக படம் பிடித்துக்காட்டியது!

கவிதைகளில் அலெக்ஸ் பரந்தாமனின் "போரின் நரம்புகள்" போரின் அவலங்களைச் சொல்லிச் சென்றது. தாமரைத்தீவானின் "அப்பர் அறுபது" மற்றும் பாலமுனை பாறூக்கின்(கடுகுக் கவிதைகள்) தற்போதைய அரசியல் நிலையை கேலி செய்திருந்தன. மற்றும் பொலிகை ஜெயாவின் "எம்மை வாழ விடுங்கள்" கவிதையும் பாராட்டும் வகையில் இருந்தது.

கட்டுரைகளில் வித்தியாசமான பல கட்டுரைகளை கண்டோம். இன்றைய காலகட்டத்தில் - "உயிர்ப்பூட்டல்" எந்த அம்சங்களில் தாக்கம் பெறுகிறது என்பதை ஆழமான பார்வையில் எடுத்துக் காட்டி விளக்கிச் செல்கிறார் பேராசிரியர் சபாஜெயராசா. மகாத்மா காந்தியும் நேருவும் எவ்வாறு அரசியல் சமூக ரீதியில் பிரிவுபட்டிருந்தார்கள் என்பதை எடுத்துக்காட்டியிருந்தார் கெக்கிராவ ஸூலைஹா. இ.சு.முரளிதரனின் "விந்தைமொழி வங்கியில் விழி" கம்பனின் காவியப்பண்புகளை அழகாக எடுத்துக் காட்டியது!

முக்கியமான கட்டுரையாக சீனா. உதயகுமாரின் "ஜெயகாந்தனின் விரிசல் அடைந்திருக்கும் ஆளுமை" பற்றிய கட்டுரையை குறிப்பிடலாம். இதுவரைக்கும் நான் கண்டிராத, அறியப்படாத ஒரு படைப்பாளியாக ஜெயகாந்தனை நாம் காணுகின்றோம்! ஜெயகாந்தன் மட்டுமல்ல பல இந்திய தமிழக படைப்பாளிகள் மட்டுமல்ல அரசியல்வாதிகளும் ஈழப்போராட்டங்களையும் போராளிகளையும் கொச்சைப்படுத்துபவர்களாகவும் குற்றம் சுமத்துபவர்களாகவும் தானே வேடிக்கை காட்டி வித்தியாசப்படுகிறார்கள்! இதே போன்ற வித்தியாசமான கட்டுரைகளை ஜீவநதியில் மேலும் எதிர்பார்க்கின்றோம்.

நா.ஜெயபாலன்
(பிபிலை)




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.